காந்தி அம்மானை

கவிஞர்,
அ. கு. ஆதிந்தர்.

★

கிடைக்குமிடம்:
அ. கு. ஆ.
115. B. B. Rd. Madras 5.

 [ரூ. 2

தேசிய கீதம்

(ஜனகன — என்ற மெட்டு)

அ. கு. ஆதித்தர்

குமரிமுனைஇ திருவேங்கட மிடையே
மேவிய செந்தமிழ் நாடு.

மங்காத செந்தமிழ் கன்னடம் துளுவம்
ஆந்திரம் கேரளம் உறவு.
நம்பியர் மானம் நாரியர் கற்பு
நலந் திகழ் கலைஎங்கும் உறைவு

முத்துறு மர்கடல் அலையே
வேழம்சந் தனம்வாழ் மலையே
எத்திசை யும்நெல் விளைவே

அறநெறி ஓதுநற் சீர்திருக் குறளால்
புவிபுகழ் மேவினை தமிழே!

தமிழே தமிழே தமிழே
அறிவுநல் தெளிவுஒப் புரவு
மேவினை வாழிய தமிழே! (குமரி)

An Appreciation

One of the houses that have mourned the murder of Mahatma Gandhi most is the house of the author of this poem. The poet's father-in-law swooned at the news of the outrage, and, without regaining consciousness at all, passed away in two days. At the news of the murder, the poet burst into tears like a child, and tried to give vent to his feelings by warbling a lament of sixteen long verses which were sent to the papers for publication the very next morning. Time and absence, however, have only kindled his great love for the Mahatma, and this longer poem has been its outcome.

The poem is not merely a simple and succint life of the Mahatma. It is not merely a most graphic and affecting description of the Mahatmas' funeral. It is not merely a brief record of the service that the Mahatma has rendered to humanity in general, and to Indians in particular. And it is not merely a summary of the unique honour done to the Mahatma by the whole world. It is more.

Man is the soul, and must be measured by his soul, and soul alone. It is a big soul that we call a Mahatma.

Statues and pictures, even at their best, are perishable, and can express only the perishable body. They can never express in this world an immortal

mahatma, Only poetry can attain the divine achievement of wresting all things from fate, and giving them lasting existence here.

The poem best represents Mahatma Gandhi, not only as he had been here, but also as is there. Mr. Adithar as a true poet, still sees and hears the Mahatma, and, in his poem of his, which is done in a most popular metre quite appealing to the masses, makes them to see and hear the Mahatma still. He shows them also the galaxy of great men who had struggled and suffered to help India to get her freedom. The poem is surely a guardian of the newly—won feedom of our land. All honour to Mr. Adithar of this excellent and inimitable poem "Gandhi Ammanai."

(Sd.) **S. D. Sargunar,**

'Tamil Aham'
Tambaram
12—12—1948.

Retd. Lecturer in Tamil
Christian College
Madras.

சென்னை அரசாங்கம் செப்பத் துறை அமைச்சர்
திரு. பக்தவத்ஸலம் அவர்களின் நல்லுரை.

M. Bhaktavatsalam

"MOHANA"
ADYAR.
Madras, 6—12—1948.

அன்று இராமனையும் கிருஷ்ணனையும் அக்காலத்து மககள் கண்டதுபோல், நம் பிறவியில் காந்தியடிகளை நடமாடுந் தெய்வமாகக் கண்டோம்.

பாமரமக்கள் அம்மகானைத் தமக்கே வாழும் பரமாத்மாவாக உணர்ந்தார்கள்; எனவே அடிகளின் திருநாமம் ஒன்றும் அறியாதவர்களையும் பரவசப் படுத்தியது.

மகாத்மாவை நேரில் காணவும் கேட்கவும் பெற்ற பாக்கியம் நம்மெல்லோரையும் பெருமைப் படுத்தியது.

இப்பெருமானின் முன்னிலையில் நாம் விடுதலையடைந்தது தெய்வத்துள் சிறந்த தெய்வமாக நமக்கு அவர்களை விளங்கவைத்தது. காந்தி அடிகள் நம் இன்னல்களை அகற்றுவதற்காகவே பாடுபட்டமை அவர்களே நம் உண்மைத்தந்தை எனக் காட்டியது. இத்தகைய ஒப்புயர்வற்ற தலைவர் நம்மிடமிருந்து ஒரு வெறியனால் ஆற்றப்பட்டது நாட்டைச் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்தியது. ஆனால், உடல் மறைந்த போதிலும், காந்தியடிகளின் அஸ்தி புண்ணிய தீர்த்தங்களில் கலந்ததுபோல, அவர்கள் நம்முடன் கலந்துவிட்டார்கள். நாம் உய்யவேண்

டிய எல்லா வழிகளையும் நமக்குக் காட்டிவிட்டே அப்புனிதவுடல் நம்மினின்று மறைந்தது. அவ் வழிகளை இனி மறவாதிருப்பதே நாம் இனிக் கவனிக்க வேண்டியதாகும். அந்தச் சாதகமாவது இக்காந்தி அம்மானை. காந்தியத்திலும் தமிழிலும் அன்பு கொண்ட ஆசிரியர்—கவிஞர். அ. கு. ஆதித்தரின் நூல் வரவேற்கத்தக்கது. எளிய நடையில் சுருக்கமாக அம்மானை பாடியிருக்கிறார். காந்தியடிகளின் வாழ்க்கைக்கும் வழிகளுக்கும் உகந்தவாறு அம்மானை அமைந்திருக்கிறது. இதனை எல்லோரும் வாசித்து இசைபாடி, இன்புறுவார்களாக.

(ஒ-ம்) எம். பக்தவத்ஸலம்.

சென்னை அரசாங்கம் கல்வி அமைச்சர்

திரு. அவிநாசிலிங்கம் அவர்கள் ஆசி :—

Minister for Educatian,
For St George Madras.
2-11 48

கவிஞர் அ. கு ஆதித்தர் அவர்கள் தாம் இயற்றிய காந்தி அம்மானைக்கு ஒரு முகவுரை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்............

அவர் எழுதியிருக்கும் இக் காந்தி அம்மானை தமிழ் நாட்டிற்கு மகாத்மா காந்தி அடிகளின் வாழ்க்கைக் கருத்துக்களைப் பரப்ப மிகவும் உதவியாயிருக்குமென்று நம்புகிறேன்.

(ஒ-ம்) அவிநாசிலிங்கம்.

ஆக்கியோன் முன்னுரை

"சொல் ஏர் உழவர்" இனத்தைச் சார்ந்த யான் காந்தியடிகளுக்குக் காணிக்கையாக இச்சிறு நூலை யாத்து வெளியிடுகின்றேன்.

நாடு சுதந்தரம் பெற்றுப் பழமை புதிதாக உதிக்கின்ற இந்நாளில் பழைய அம்மானை புதுப் பொருளில் வெளிவருகின்றது. எவ்வினத்தாரும் எம்மதத்தாரும் எந்நாட்டாரும் ஒப்ப நின்ற பெருமான் வரலாறு ஆதலின், இதனை யாவரும் ஏற்றுப் படித்து இம்மை மறுமைப் பயன் எய்தவேண்டுவது கடமையாகும்.

படித்ததன் பயனாக 'கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற முறையில் மக்கள் மனநிலையும் ஒழுக்க முறையும் திருந்துமாயின்; அதுவே காந்தியடிகளுக்கு நாம் செய்யும் பேருதவியாகும்.

நீத்தார் கடன் ஆற்றும் தமிழ் மக்கள் அந்நடப்புகளில் ஒன்ருக ஒருநாள் இரவு 'காந்தி அம்மானை' படிக்கும் வழக்கம் ஏற்படுத்துவார்களாயின், அது தமிழ் மக்களுக்கு என்றும் அழியா ஏற்றம் தருவதாகும். தமிழனோடு நெருங்கிய உறவுகொண்டு, தமிழனைப்போல உடுத்து, தமிழ் நாகரிகத்தை வளர்த்த காந்தியடிகளை நாம் மறவாதிருக்க இதுவே தகுந்த முறையாகத் தெரிகிறது; இதனல் தமிழன் ஏனைய மொழியினருக்கு இல்லாச் சிறப்பு எய்துகின்ருன்.

காந்தியடிகள் சிரார்த்த நாள் ஆகிய 30—1—49ல் ஒவ்வொரு இல்லத்திலும் இந்நூலை வாசித்து அவரை நினைவுகூர வேண்டும். அத்திருத்தொண்டு நிறைவேற; தக்க காலத்தில் நூலை அச்சிட்டு உதவிய காஞ்சி மணிமொழியாருக்கும், மற்றும் இக்கருமத்தில் எனக்கு உதவி செய்த எல்லா அன்பர்கட்கும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

21—12—1948. கவிஞர் அ. கு. ஆதிந்தர்.

உள்ளடக்கம்

காந்தி அம்மானை

காப்பு

சாந்தத் தனிமூர்த்தி சத்ய நெறிநின்ற
காந்தி மஹானின் கதையினையான் தீந்தமிழில்
அம்மானை யாக அறிவிக்க ஆனைமுகப்
பெம்மான் பெரிதும் துணை.

குரவர் வணக்கம்

ஈன்றநேர் வளர்த்த என்றன் இருமுது குரவ ருக்கும்
தேன்தமிழ் மேலைக் கீழைத் திசைப்பல மொழிகள் கற்ற
சான்றவர் குலத்துச் செம்மல் சற்குண ஆசா னுக்கும்
யான்செயும் கைம்மா றேது தினந்தினம் ஏத்தலல்லால்!

உத்த மத்துறை முத்துநன் ஞானியும்
வித்தை வைத்திய சாமர்வெல் பெம்மானும்
தத்தம் வாழ்வுந டாத்திய மேன்முறை
எத்தி னத்துமென் உள்ளத்தி ருப்பரே.

இரு பெருந் தமிழர்

ஈழத் தாமோ தரம்பிள்ளை
சோழச் சாமி நாதய்யர்
வாழ வைத்தார் முதுதமிழை
ஓலை ஏடச் சுருச்செய்தே!

நால்வர்க்கு நன்றி

நால்வர் காங்கி ரசுநாட்டில் காந்தி பெயரால் நாட்டினார்கள்
சாலப் பெரியார் ராமசாமி, தண்டமிழ்த் தலைவர் திரு. வி. க.
சேலத் தோன்றல் வரதராஜர், சி. ஆர். ராஜ கோபாலர்:
காலமெல்லாம் இவர்க்கு நன்றி செலுத்த யாமே கடன்
பட்டோம்.

வளரும் குழந்தை உடலில் வன்மைபெற்று
தவழும் காலத்தில் சற்றே அயலிருந்து
வா, வா என்றுசொல்லி. வருமழலை தனைஎடுத்து
உண்பித் துவந்து ஒளிர்நிலா முகங்காட்டி
பாலும் பழமும் பலகாரப் பேருணவும்
நாளும் கொடுத்து நன்றாக வளர்த்தார்கள்.
உள்ளே தவழ்ந்து, உயர்ந்து, நடை பயின்று
மெல்ல வெளிவீதி வந்து விளையாட
அண்டைச் சிறுவருடன் ஆனந்த மாய்நடந்து
சிறுவீடு கட்டிச் சிதைத்து விளையாடி
பறையடித்து ஆடிப் பலபோர்க் களங்காட்டி
தேரூர்ந்து நின்று சிரித்துக் குதித்தாடி
இன்ன முறையில் இளமை கழிந்ததன்பின்
தந்தை இருக்குமிடம் தனயற்கும் உரியதுபோல்
ஏழு வயதில் ராஜகோட் டைநோக்கிச்
சென்றார் அங்குச் சிறுபள்ளி ஒன்றில்தாம்
கல்வி முறைக்குக் கடைக்கால் இட்டார்காண்.
பன்னிரண் டாம்வயதில் படிப்பு அதிகமாக
பெரும்பள்ளி சேர்ந்தார் மோஹனதா ஸப்பெருமான்.
பள்ளிச் சிறுவனாகப் படித்த காலையிலே
பொய்சொல்லி அறியார், பிறரைப் பழித்தறியார்
யாரோடும் அதிகம் பழகி இருந்தறியார்
நாணம் மிகவுடையார், நால்வர்முன் போய்நில்லார்
தசரதன் கணைக்கு இலக்கான சிரவணனின்
கதையைப் படித்துக் கருத்தில் பதித்துநின்றார்
அரிச்சந் திரன்கதையின் நாடகத் தைக்கண்டு
உருகு மனத்தினராய் ஒழுக்கத்திற் கைக்கொண்டார்.
படித்து வருநாளில் பாலனுக்குக் கலியாணம்
மோஹன தாஸருக்கும் மூத்தஇரு சோதரர்க்கும்
ஒரே பந்தல் ஒருமுகூர்த்தக் கலியாணம்
படிக்கச் சென்றபிள்ளை பதின்மூன் றாம்வயதில்
திருமணம் முடிக்கத் திரும்பிவந்தார் போர்பந்தர்.
ஒத்த வயதுடைய கஸ்தூரி பாய்தேவி
மோகன தாஸ்காந்தி தம்பதிகள் ஆனார்கள்.

விருந்து துணிமணிகள் வீண்ஆர வாரங்கள்
பந்தல் அலங்காரம் பணியார வகைமேளம்
மஞ்சள் நீர்தெளித்து மணமகனைக் கோலமிடல்
கண்கண் டனவன்றிக் காமஉணர்ச்சி யில்லாப்
பைய னுக்குக் கலியாணம் படிக்கும் காலத்தில்.
காளை உணர்ச்சியில்லாக் காந்தி மணம்முடித்து
நாணி ஒதுங்கி நாயகியோ டின்புற்று
மீண்டும் படிக்க மனத்தில் எண்ணினராய்
இராஜ கோட்டைப் பாடசாலைவந்தார்
உபகாரச் சம்பளமும் ஒருசிறிது தாம்பெற்றார்
உடற்பயிற்சி தவிர, மற்ற யாவற்றினும்
காந்தி மிகவே கவனம் செலுத்திவந்தார்.
வெகுதூரம் நடந்து வீடு செல்வதனால்
பயிற்சி வகுப்பைப் புறக்கணித்தார் மோகனதாஸ்.
அன்பு அடக்கம் ஆசிரிய ரிடம்பக்தி
உத்தம குணங்கள் உறைவிடம் தாம்ஆனார்.
மோகனதாஸர் மூன்றாம் பாரத்தில்
அரையாண் டிருந்தார்; ஆற்றல் மிகுதிகண்டு
அடுத்த வகுப்பிற்கு ஆசிரியர் மாற்றிவைத்தார்.
பாடம் எல்லாம் படிப்பது ஆங்கிலத்தில்
வடமொழிப் படிப்பு வருத்தமிக அளித்ததுவே.
ஆனாலும் கற்று அதிகத் தேர்ச்சிபெற்று
பள்ளிப் படிப்பைப் பதினாறில் முடித்துவிட்டார்.
கல்வி அறிவில்லாக் கஸ்தூரி தேவிக்கு
வல்ல மோகனதாஸ் வரன்ஆனார் அம்மானை!
தன்னைப் பிரியா துடனிருக்க விரும்புகின்ற
பெண்ணாள் வெளிச்சென்றால் பிராயத்தார் சகிப்பாரோ!
என்னைக் கேளாமல் எங்கும்வெளிச் செல்லாதே
என்றார் காந்தி ஏந்திழையாள் முகம்நோக்கி.
கஸ்தூரி பாயார் கட்டுப்பாட் டைஉதறி
வீர சுதந்தரமாய் வீதி வெளிச்சென்று
தோழிய ருடனே பழகித் திரும்பிவர;
பெண்எனறால் கணவனுக்குப் பணிந்து நடக்கவேண்டும
என்று நினைத்து இதயம் நொந்துநின்றார்

கஸ்தூரி பாயையன்றிக் காந்தி கருத்துநின்றார்.
நல்லவர் சேர்க்கை நன்மை ஆக்கிவைக்கும்
பொல்லாத சேர்க்கை புன்மை புகுத்திவிடும்
நாகரிக மான நண்பன் மோகனற்கு
ஊன்உண்ணப் பண்ணுள் உபதேசம் செய்துவந்தான்.
கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமன்றோ !
மறைவாக ரொட்டி, மாமிசம் தின்றுவிட்டார்.
பலகார வகையாக மாமிசத்தைப் பண்ணியதை
ஆண்டு ஒன்றுக்குள் ஆறுமுறை தின்றுவிட்டார்.
மாதா அறியாமல் மாமிசம் அருந்துவது
காந்தி மனத்தில் கடுந்துயர் செய்ததுகாண்
இன்னும் ஒன்று, இதனின் விசித்திரமாம் !
உண்ட இறைச்சி உருவாகி உள்ளிருந்து
நின்று கதறுவதாய் நித்திரையில் கண்டார்காண் !
இன்ன காரணத்தால் இறைச்சி இனிஉண்ணேன்
என்றே காந்தி எடுத்தார் பெருஞ்சபதம்.
உறவு மிகுதிகொண்டு ஒவ்வா தனபுரியும்
தியன் பரத்தையின்தோள் தழுவப் போதித்தான்.
ஆண்டவன் அங்கே தடுத்து ஆட்கொள்ள
விதியின் மகிமைகண்டு காந்தி வியப்படைந்தார்.
சின்னஞ் சிறுவயதில் காசு திருடிவந்து
பீடிசுருட்டுப் பிடித்தார். அதன் பிறகு
திருட்டும் மறைப்பும் சேரும் கொடுமைஎண்ணி
இனிமேல் புகைபிடியேன் என்றே உறுதிகொண்டார்.
படிப்பை முடித்துப் பதினாறும் வயததனில்
படுக்கையி லிருந்த தந்தைக்குப் பரிகாரம்
செய்யப் போர்பந்தர் சேர்ந்து உதவிநின்றார்.
கட்டழகி அந்தக் கஸ்தூரி பாய்தேவி
பக்கத் தறையில் படுத்திருப்பாள் ஆனாலும்
பெற்ற தந்தைக்கு மோகனதாஸ் பிரியமுடன்
கைபிடித்துப் பின்னர் கால்பிடித்துத் தேய்த்துநிற்பார்
மருந்தைக் கலக்கி மெல்லவே ஊட்டிநிற்பார்
என்ன செய்தென்ன ! இறைவன் நியதிவேறு :
தந்தை இறந்தார் ; மைந்தன் மனம்நொந்தார்

நாட்கள் பலசெல்ல மேற்படிப்பு கொளஎண்ணி
பவநகரைச் சேர்ந்த ஸயால்தாஸ் கல்லூரி
சேர்ந்து படித்தார் ஆனாலும் சின்னாளில்
ஜோஷிஜி சொல்கேட்டுச் சிந்தனைவேறானார்.
இங்கிலாந்து சென்று மூன்றாண் டங்கிருந்து
பாரிஸ்ட ராகப் படித்து வரத்துணிந்தார் :
பெற்றெடுத்த தாயாரைப் பிரியத் துடனாகி
அம்மா எனையீன்ற அன்னையே ஒன்றுகேளும்
பாரிஷ்டராகப் படித்து வருவதற்கு
இங்கிலாந்து செல்ல எண்ணினேன் விடைதாரும்
இல்லை என்னாது இசைந்துநீர் விடைதாரும்
என்று பணிந்து காந்தி இரங்கிநின்றார்
அப்போது தாயார் அரியமகன் முகம்நோக்கி
இங்கிலாந்து செல்லல் ஏற்றமுடைத் தென்றாலும்
அப்பா மகனே அறிந்தசில சொல்லுகிறேன்
மேல்தேசம் போகிறவர் மாதர்களைக் கைப்பிடித்து
ஊன்உண்டும் மிக்க உயர்மதுகள் உட்கொண்டும்
கெட்டு அலைகிறதாய்க் கேள்விப் பட்டதுண்டு.
சீர்கே டிவைகளை நீ சிந்திக்க வேண்டாவோ ?
என்றுசொன்னதாயார்க்கு ஏற்ற பதிலாக
அம்மா அம்மா அறிவுள்ள அம்மாவே
மதுவை, புலாலை, மாதர்களை யான்தீண்டேன்
என்றே ஆணை தங்கள்முன் இடுகின்றேன்
பொய்யுரையா என்சொல்லில் நம்பிக்கை வையீரோ ?
ஆகாத வினைஎன்றால் ஜோஷிஅனு மதிப்பாரோ
என்றுசொல்லிக் காந்தி இரங்கிநின்றார் : அப்போது
மோகன தாஸர் முகத்தைத் தாய்பார்த்து
தம்பி, உன்சொல்லை நம்புகிறேன், ஆனாலும்
தூரதே சம்போவாய் ; தனித்துயான் இருப்பேனோ
பேஸார்ஜி சுவாமி பிரியம் யாதென்று
கேட்டுப் பதில்சொல்வேன் என்றே விடையிறுத்தார்.
பெற்றவள் திருமுன்னர் பேஸார்ஜி சொன்னபடி
மோகன தாஸர் மூன்று ஆணையிட்டார் :
மதுவகை அருந்தேன் மாமிசம் யான்சுவையேன்

மாதர்கள் தம்மை மனத்தாலும் யான்கருதேன்
உறுதி இதுஉறுதி எனக்காந்தி உரைத்ததன்பின்
தாயார் மகனுக்குத் தக்கநல்ல ஆசிசொன்னர்.
பெரியோர் ஆசிபெற்றுப் பம்பாய் நகர்சேர்ந்து
காந்தி இருந்தகாலம் கடிய புயற்காலம்
ஆதலி னலே பயணம் ஆகாது
நவம்பரில் செய்தல் நன்மை பயக்குமென்ருர்
காந்தி போர்பந்தர் நோக்கித் திரும்பிவிட்டார்:
பனியா வகுப்பின் பெரியார் சபைகூடி
காந்தி கடல்கடத்தல் குற்றமெனக் கண்டித்தார்:
மதம்பற்றிக் கூறும் சபைக்கு மோஹனதாஸ்
கடல்கடத்தல் குற்றமன்று; கல்வி பெறுவதற்கே.
ஆசாரம் பேண அன்னைமுன் ஆணையிட்டேன்
ஒழுக்கம் வழுவேன்: என்னைநீர் உரைத்தாலும்
பயணம் தடைப்படாது என்று விடைபகர்ந்தார்.
உற்ருர் தலைவருடன் ஊர்விலக்குச் செய்தார்கள்
காந்தி கப்பலேறப் பம்பாய் நோக்கிவந்தார்.
ஸெப்டம்பர் நாலாம்நாள் ஜூனு காத்வைக்கில்
திரியம் பகராய் மசூம்தார் உடன்கூடிப்
பம்பாய் நகர்விட்டுப் புறப்பட்டார் மோஹனதாஸ்.
மாதக் கடைசியினில் லண்டன் நகர்சேர்ந்து
விக்டோரியாஹோட்டல் அறையில் வசித்தார்காண்
ஊணும் உறவும் ஒவ்வாத நிலைமையிலே
காந்தி மிக்க கவலை யுடனிருந்தார்.
அந்நிலையில் டாக்டர் மேத்தா அங்குவந்து
வேண்டும் வசதியெல்லாம் விரைவாகச்செய்துவைத்தார்.
குடும்பத்துச் சாப்பாடு ஒக்கும் எனக்கருதி
ஊணகம் நீத்து ஒருவர் மனைச்சேர்ந்தார்.
அன்பாக அவ்வீட்டார் அளித்த சிறுரொட்டி
சற்றும் பற்ருது. ஆதலால் ஊர்சுற்றி
சைவ விடுதி தேடிச் செல்லுகையில்
பாரிங்டன் தெருவில் ஒன்றைப் பார்த்துவிட்டார்:
கண்டு மகிழ்ந்து நண்ணிக் கதவின் அருகாமை
விற்பனைக் கிருந்த புத்தகம் சிலவற்றுள்

"சைவம் அவசியம்" என்னும் நூல்வாங்கி
உட்சென்று மகிழ்ந்து வயிருர உண்டுநின்ருர்.
சைவ உணவில் காந்தி நிலைத்திருக்க
இந்நூல் வாசிப்பபே ஏற்றபெருங் காரணமாம்.
காந்தி ஆங்கிலக் கனவான் உடைதரித்து
பிரஞ்சு மொழியும் பாண்டில் இசைநடனம்
மூன்றே மாதம் படித்து ஒழித்துவிட்டு
வந்த காரியத்தில் கவனம் வைக்கலானுர்.
வரவு செலவு வகையாக எழுதிவைத்து
வண்டிச் செலவு அதிகமாய் ஆனதினுல்
வேலைஉள்ள இடத்தில் தனியறைக் குடிபுகுந்தார்.
விளக்கடுப்பு வைத்து வேண்டிய ஆகாரம்
ஓட்கூழ் கொக்கோ ரொட்டி பிறசிலவும்
தமக்குத் தாமே காந்தி தயார்செய்தார்
சைவ உணவுச் சங்கம் ஒன்றமைத்தார்
லத்தீன் பாஷை கற்று மிகத்தேர்ந்தார்.
ஊனகம் ஒன்றில் ஒருபெரிய மூதாட்டி
கன்னிய ருடனே காந்தியைப் பழகவைத்தார்
மணமுடித்து வைக்க மூதாட்டி மனங்கொண்டார்
நேர்நெறி அன்றி வேறுவகை அறியாத
காந்தி அவருக்குக் கடிதம்ஒன் றெழுதலானுர்:—
அன்னையீர் உமது அன்பிற் கட்டுண்டேன்
என்னேடு தாங்கள் கன்னியரை இணைக்கின்றீர்:
யானே ஒருபிள்ளைத் தந்தையா யிருக்கின்றேன;
ஆதலி னுலே ஆகா தனசெய்தல்
தவருகக் கண்டு இதனைத் தெரிவித்தேன்;
என்னுல் குற்றம்ஒன் றும் இதுவரையும் கிடையாது.
விருப்பம் குறையீரேல் நல்ல பதில்விடுப்பீர்,
வந்து பார்ப்பேன் என்றே வரைந்தார்காண்.
பெற்ற கடிதம் பெருமை உடையது காண்!
ஐயா, காந்தி உமது அருங்குணத்தைக்
கண்டு நாங்கள் மிக்க களிப்புற்ருேம்
காண விழைகின்ருேம் கட்டாயம் இங்குவாரும்
பாலிய மணத்தைப் பற்றி எங்களுக்கு

விரிவாகச் சொல்லும், கேட்க மிகவிருப்பம்
என்றும் அன்பை மறவா திருக்கின்றோம்
என்ற கடிதத்தைக் காந்தி படித்தவுடன்
தலைஇருந்த சுமையைத் தரையில் இறக்கினாற்போல்
ஓய்ந்து தெளிவுற்றார் மிக்க உவகைகொண்டார்.
நண்பர்கள் தூண்டக் காந்தி நன்னூல்கள்
படிக்கத் துணிந்தார், பகவத் கிதை முதல்;
எட்வின் அர்னால்ட் எழுதிய மொழிபெயர்ப்பைப்
படித்து முடித்தும் பின்னும் அவர் யாத்த
'ஆசிய திபம்' அரிய நூல்படித்து
கிறிஸ்துவின் வாழ்க்கை புதிய ஏற்பாட்டைப்
படித்து மனம்பற்றி, பல்வேறு மதநூலும்
கற்க நினைத்துக் கல்வித் துறைபோய
கார்லைல் எழுதிய 'வீரர் வீரபூஜை'
பிராட்லா, அன்னி பெஸந்து அம்மையாரும்,
எழுத்தாளர் நாரா யணஹேம சந்திரரும்
மற்றும் பெரியார் பலர் உறவும் தாம்பெற்றார்,
பாரிஸ்ட ராகப் படிக்க வந்தகாந்தி
ஆசார முறைகள் அனைத்தும் அநுசரித்தார்:
படித்துப் பரீட்சை எழுதித் தேர்தலுடன்
மாணக்கர் மேலோர் விருந்து முறைமைகட்கும்
தவறாமல் செல்வார் சைவ உணவுகொள்வார்.
மூன்று மாதத்துக் கெண்மூன்று விருந்தாகும்
இருமூன்றுக் கேனும் தவறா திருக்கவேண்டும்
இன்ன முறையில் மூவாண் டங்குகற்று
ஆயிரத் தெண்ணூற்றுத் தொண்ணூற்று ஆம்ஆண்டில்
ஆறும் மாதம் பத்தாம் நாளினிலே
பரீட்சை தேறிப் பாரிஸ்டர் பட்டமுற்று
பதினொன்றும் தேதி பதிவு செய்துகொண்டு
பன்னிரண்டில் இந்தியா நோக்கிப் புறப்பட்டார்:
பம்பாய் நகர்சேர்ந்து பாரிஸ்ட ராய்அமர்ந்தார்.
பாரிஸ்டராகப் பயிலும் மோகனதாஸ்
ராய்சந்தர், டால்ஸ்டாய், ரஸ்கின் எனுமூவர்
தமக்கு வழிகாட்டி யாகத் தெரிந்துகொண்டார்.

வழக்குகள் பேசி வம்பு அளப்பதற்கு
மனத்திற் பற்றின்றி மோகனதாஸ் திகைப்புற்ருர்.
மம்பாய் என்னும் மாதின் வழக்கெடுத்து
மன்றத்தில் பேச மருட்சி கொண்டவராய்
இவ்வழக்கு எனக்கு வேண்டாம் எனஉரைத்துப்
பெற்ற பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.
வருவாய் மிக்க குறைவான தன்மையினுல்
நீதி மன்றுக்கு நடந்தே திரும்பிவந்தார்.
பம்பாய் வாழ்வு பயன்தரா தென்றெண்ணி
வக்கில் தொழில்நடத்த ராஜகோட் டைவந்தார்
உடன்பிறந் தாரின் ஒத்தாசை மிகுதியினுல்
மூந்நூறு ரூபாய் மாதம் ஈட்டிவந்தார்.
ஆங்கில நாட்டு அரசியல் தானிகர்
போர்பந்தர் வாழ்ந்த பெரியார் தமைக்கண்டு
சிலவார்த்தை பேசக் காந்தி சென்றிருந்தார் :
துரைமகன் ஆங்கு மிகவும் துடுக்காக
'ஒவ்வா தனஇவை, உடனே வெளியேபோ'
என்றே சொல்லி அஃதுடன் நில்லாமல்
காவலனைக் கொண்டு கழுத்தைப் பிடித்திழுத்து
வெளியே தள்ளி வாயிலைத் தாம்அடைத்தார்.
வெள்ளையன் செய்கையதால் வெட்கித் தலைகுனிந்து
பிரோஷிஜா மேத்தா பெரியபா ரிஸ்டரிடம்
இதற்கென் செய்ய என்று கேட்டதற்கு
' இதுவே மிக்க சகஜமாய் நிகழ்வதுவே
பிரிட்டிஷ் இப்போக்குப் பார்எங்கும் உள்ளதுவே.
வாலிபப் பருவம் காந்திநீர் வேகமுற்றீர்
வெளிக்குச் சொல்லாமல் வாழ்வு நடத்தவேண்டும்"
என்று பதில்சொல்ல யாதொன்றும் பேசாமல்
'பிறர்தயவு நாடி இனியான் போகமாட்டேன்'
என்ற உறுதியுடன் ஏற்றமுற்ருர் மோஹனதாஸ.
போர்பந்தர் தாதா அப்துல்லா கம்பெனி
தென்னுப் பிரிக்கா வணிகம் பெரிதாற்றி
நாற்பதி ஞயிரம் நஷ்ட ஈடுகேட்டு
நீதி மன்றத்தில் வழக்கொன்று நாட்டினுர்கள்

அவ்வழக்கில் ஆங்கு வைக்கிலுக் குதவிசெய்ய
ஒருவர் தேவை எனத்தெரிந்து ; மனம்ஒப்பி
புதிய நாடுபார்க்கப் புறப்பட்டார் மோஹனதாஸ்.
கம்பேனி ஊழியராய்க் காந்தி புறப்பட்டார்.
ஆயிரத்தெண் ணூற்றுத் தொண்ணூற்று மூன்றினிலே
ஏப்பிரல் மாதம் காந்தி கப்பலேறி
லாமூ, மொம்பாஸா, ஸான்ஸியார், மோஸாம்பிக்
துறைகளில் தங்கித் தேச வளங்கண்டு
மேமாத இறுதி நெட்டால் துறையடைந்தார்.
டர்பன் துறைமுகத்தில் அப்துல்லா சேட்டுவந்து
காந்தியை வரவேற்றுக் கனிந்த முகமனுடன்
உடன்கூட்டிச் சென்று உபசரித்தார் நன்றாக.
ஆப்பிரிக் காவில் வாழ்ந்த இந்தியர்கள்
வகுப்பு நான்காகத் தொகுக்கப் பட்டார்கள்.
முகமதியர் எல்லாரும் அரபியர் எனப்பட்டார்
பார்ஸிகள் எல்லாரும் பாரசிகர் எனப்பட்டார்
மற்றோர் பிரிவு இந்துக் குமஸ்தாக்கள்
நான்கா வதுபிரிவு ஒப்பந்தக் கூலிகளாம்
இந்துக்கள் பலரும் கூலிகள் எனப்பெற்றார்
காந்தி ‘ கூலிப் பாரிஸ்டர் ’ பேர்பெற்றார்
டர்பன் நீதிமன்றில் காந்தி இருந்தகாலே
தலைப்பாகை யை நீக்கத் தலைவர் ஆணையிட ;
காந்தி மறுத்துக் கடுகி வெளி நடந்தார்.
பத்திரிகை இதனைப் பலமாக விவரித்து
‘ வேண்டா விருந்’தென்று காந்திக்குப் பேரிட்டு
பரபரப்புச் செய்து பலமாகக் கண்டித்த.
டர்பன் நகர்விட்டுப் பிரிடோ ரியாசேர்ந்து
வழக்கை நடத்தக் காந்தி புறப்பட்டார்.
ரயிலில் முதல் வகுப்பில் காந்தி பிரயாணம்
இரவில் ஒன்பதுக்கு மேரிட்ஸ் பர்க்கு நகர்.
உத்தியோ கஸ்தன் ஒருவன் அருகுவந்து
ஐயா வெளிவாரும் அருகில் இருக்கின்ற
சாமான் வண்டியினில், சென்றே அங்கமரும்
என்றே சொல்லக், காந்தி என்னிடத்தில்

முதல்வகுப்புச் சீட்டு இருக்கிறது எனமொழிந்தார்.
சரிசரி நீதான் சாமான் வண்டியிலே
அமர வேண்டும் என்றே அவன்சொன்னான்.
சீட்டுப் பெற்றுள்ளேன் இவ்வண் டியிலேதான்
இருக்கப் போகின்றேன் என்று காந்திசொன்னார்
வெளியில் செல்க ; இன்றேல் வெளித்தள்ள
போலிஸ் காரர் வருவார் எனப்புகன்றான் .
வந்தால் வரட்டும் இந்த இடத்தைவிட்டு
யான்எழ மாட்டேன் என்றார் பாரிஸ்டர்.
போலிஸார் வந்து பாரிஸ்ட ரைப்பிடித்து
வெறித்து இழுத்து வெளியே தள்ளிவிட்டார்
சாமான் களைத்தூக்கித் தரையில் வீசிவிட்டார்
வண்டி அகன்றதுவே, காந்தி வருத்தமுற்று
அங்கோர் அறையில் அமர்ந்தார் பெருங்குளிரில்
ரயில்வே நிர்வாஹத் தலைவருக்கு அறிவிக்க
நடப்பைக் காந்தி தந்தியால் முறையிட்டார்
" தவறொன்றும் இல்லை ; தக்கதே அவன் செய்தான்
அடுத்த வண்டியில்போம் " என்றவர் பதில் விடுத்தார்.
மறுநாள் வண்டியில் வசதியாய்ப் புறப்பட்டு
சார்ல்ஸ் டவுண் வந்து சேர்ந்தார் மோஹன்தாஸ்
இங்கிருந்து ஜோன்ஸ்பர்க் நகரை அடைவதற்கு
குதிரைப் பெட்டிவண்டி ஏறிப் போகவேண்டும்
உள்ளிருக்கக் காந்திக் கிடமில்லை என்றேதுக்கி
வண்டிக்கா ரன்அருகில் வெளியே அமர்த்திவைத்தான்.
சிறிது தூரம் சென்றபின் நிர்வாஹி
' உன்இடத்தில் யானே உட்கார்ந்து காற்றுவாங்க,
நீவண்டிக் காரன் காலடியில் அமர்என்றான்
காந்திம றுத்துக் கடிய பதிலாக
உள்ளே இருப்பேன் ; இன்றேல் இங்கிருப்பேன்
அங்குக் காலடியில் அமரவே மாட்டேன் என்றார்.
வண்டி நிர்வாஹி காந்தி கன்னத்தில்
ஓங்கி அடித்துக் கீழே இழுத்துநின்றான்
பெட்டியின் கம்பிகளைப் பலமாகக் கைப்பற்றி
பிடித்த பிடியை விடாதிருந்தார் மோகனதாஸ்.

உள்ளே இருந்தவரில் சிலர்தாம் இரக்கமுற்று
அப்பா தொந்தரவு அவருக்குச் செய்யாதே.
அவர்தாம் உட்புறத்தில் அமரினும் ஆகஎன்றார்.
நீர்வாழி பின்னர் தொந்தரவு செய்யாமுய்
வாளா விருந்தான் வண்டி நகர்ந்ததுவே.
ஜோஹனஸ் பர்க்கு நகரை அடைந்தவுடன்
ஊணகம் சென்றார் 'இடமில்லை' என்றுரைத்தார்
இந்திய மக்களை நிந்திக்கும் இயல் அறிந்து
மறுநாள் ரயிலில் முதல்வகுப்புச் சீட்டுடனே
பிரிடோரியாவுக்குக் காந்தி புறப்பட்டார்
வண்டி ஒருநிலயம் வந்து சேர்ந்தவுடன்
கார்டு வண்டியினுள் காந்தி அருகில்வந்து
விரக்தர் முகத்தோடு விரலே வாயாக
மூன்றும் வகுப்பிற்குப் போகக் குறிப்பிட்டான்.
கையிருந்த மேல்வகுப்புச் சீட்டை இவர்காட்ட—
'ஆகாது நீ இங்கு; அங்குத்தான் செல்'- என்றான்.
அருகில் இருந்த ஆங்கில மகன் தயவாய்ப்
பரிந்து பேசிக் கார்டைக் கண்டிக்க
'கூலி யுடன்கூடி இருக்க நீர் இசைந்தால்
எனக்கென்ன கேடு என்று அப்பால் சென்றான்.
பிரிடோரியாவைக் காந்தி சென்றடைந்தார்
ஊருள் சென்று ஊணகத் தில்தங்க
ஒதுக்கித் தனியாக உணவிடுவேன் என்றுரைத்தார்
முதலாளி பின்னர் மற்றவ ரைக்கலந்து
எதிர்ப்பு இன்றி இயைவே இருப்பதனால்
பொது அறையில் வைத்துப் போசனம் அளித்துவந்தார்
அங்கிருந்த நாளில் இந்தியர் அனைவரையும்
ஒன்றாகக் கூட்டி உபதேசம் செய்யலானார்.
இந்து முஸ்லிம் என மதத்தின் பெயராலும்
மதராஸி ஹிந்தி எனநாட்டின் பெயராலும்
இருக்கும் வேற்றுமையை அறவே நீர் அகற்றி
ஒன்று சேரவேண்டும் உரிமை தேடுதற்கு,
சங்கம் நிறுவிச் சலியா துழைக்கவேண்டும்
என்றே பேசி யாவரும் ஒப்ப நின்றார்,

ஆங்கில அறிவு அவசியம் என்றுரைத்து
விரும்பிய மூவர் வீடுதேடிச்சென்று
போதித்து அவர்கள் பிழைக்க வழிசெய்தார்
தென்னுப் பிரிக்கா வாழ்வு மிகக்கொடிது!
இந்தியர் என்ருல் கூலியா யிருக்கவேண்டும்
ஊணகத்தில் வேலை ஆளாய் உழைக்கவேண்டும்
இன்றேல் நாட்டைவிட்டு வெளியே ஏகவேண்டும்
தலைக்கட்டு வரியாக மூன்றுபவுன் கொடுக்கவேண்டும்
தனிப்பட்ட இடத்தில் ஒதுங்கி வாழவேண்டும்
சொந்த நிலம்வாங்கிச் சுகித்திருக்க லாகாது
நாட்டு நடப்பினிலே வாக்குரிமை கிடையாது
பொதுப்பாதைகளிலே போகக் கூடாது
ஒன்பது மணிக்குமேல் உத்தரவு பெற்றவரே
இரவில் வெளிவரலாம் இன்ன கொடுமைபல.
ஒருநாள் மோஹனதாஸ் உலாவி வரும்போது
ஒன்பது மணிக்கு மேலான காரணத்தால்
காவலன் காந்தியைக் காலா லேஉதைத்து
தெருவில் தள்ளிவிட்டான் இதனைப் பார்த்துநின்ற
பெருமகன் ஒருவர் பிராது செய்யச்சொன்னர்.
அப்போது காந்தி அதற்கேற்ற பதிலாக
என்குறைக் காகப் பிராது யான்செய்யேன்
எல்லாக் கருப்பரும் உறுவதே யான்பெற்றேன்
என்று பதில்உரைத்து அவ்வழிப் போக்கைவிட்டார்
நாற்பதி னாயிரம் நஷ்ட ஈடுகோரி
அப்துல்லா சேட்டு அமைத்த பெருவழக்கில்
வாதி பிரதிவாதி வழக்காடிச் சொத்திழந்து
அழியும் நிலையைக் காந்தி அகற்றிவைத்தார்
பிரதி வாதியான தாயாப் சேட்டோடு
சமரசம் பேசி இருவருக்கும் சிறப்பாக
பேசி முடித்துப் பெரிய அமைதிபெற்ருர்.
மூப்பத்தே ழாயிரம் அப் துல்லா சேட்டுபெற்ருர்.
இந்தியர்க்கு வாக்குரிமை இல்லா தொழிப்பதற்கு
சட்ட சபையில் மசோதா வருவதாக
பத்திரிக் கையில் படித்து மனங்கொதித்து

யாவர்க்கும் நன்றாய் ஏறும்படி உரைத்தார்
கூட்டத்தில் கேட்டு மக்கள் கொதிப்புற்றார்.
எல்லாரும் அதனை எதிர்க்க வேண்டுமென்றார்
வேண்டும் வசதிஎல்லாம் செய்வதாய் வாக்களித்தார்
உடலால் உழைப்போம் உறுபொருள் யாம்தருவோம்
என்று சொலக்கேட்டு காந்தி அங்கிருந்து
உரிமைப் போர்தொடுக்க அடிவைத்தார் அம்மானை!
வாக்குரிமை இல்லைஎன்று மசோதா நிறைவேற
இந்திய மக்கள் எல்லாரும் மனங்கொதித்து
ரிப்பன் பிரபுக்கு விண்ணப் பம்அனுப்ப
பதினா யிரம்பேரின் கைஎழுத் துவாங்கி
அனுப்ப; அதற்காக உழைக்கத் தாம்முனைந்தார்
நீதி மன்றத்தில் தன்னை வக்கிலாய்ப்
பதிவு செய்வதற்குப் பலத்த எதிர்ப்பாக-
இறுதியில் நீதி பதியார் நேர்மையினால்
சத்தியம் செய்து தலைப்பாகை தனைநீத்து
வக்கில் ஆனார் முன்வாழ்ந்த ஆங்கிலேயர்
வம்பு வளர்த்ததனால் விளம்பரம் மிக ஆக
இந்திய வணிகர் யாவருக்கும் இவர்வக்கீல்.
உரிமைப் போராட ஒற்றுமைக் கட்சியாக
நெட்டால் இந்திய காங்கிரஸ் என நிறுவி
அங்கத் தவர்கள் ஆண்டு ஒன்றுக்கு
சவரன் மூன்று சந்தா செலுத்தவைத்து
அதிக நிதிதிரட்டி அடிக்கடி கூட்டம்வைத்து
கல்விச் சங்கம்ஒன்று கடிதில் தோற்றுவித்து
'பிரிட்டி ஷாருக்கு வேண்டுகோள்' எனஒன்று,
இந்தியர் வாக்குரிமை வேண்டுகோள் எனஒன்று
துண்டுப் பிரசுரங்கள் இரண்டு தோற்றுவித்து;
அங்குற்றார் பரிவு இந்தியர் பெறச்செய்தல்
பாலசுந்தரம் பழந்தமிழ்ப் பெருநாட்டான்
கையில் தலைப்பாகை, கந்தை அரைக்கிசைத்து
முன்பல் உடைந்து குருதி மிகச் சொரிந்து
தனது அழிநிலையைக் காந்திக்குத் தெரிவித்தான்.
அவன்பட்ட துன்ப நிலையை அவர்உணர்ந்து

வெள்ளை முதலாளி வம்புச் செயல்தெரிந்து
வைத்தியர் சான்று கையில் வாங்கிவைத்து
நீதி மன்றத்தில் காந்தி வழக்கிட்டார்.
கூலி ஒப்பந்தக் கொடுமை அதை நீக்கி
மற்றொருவ ரிடத்தில் வேலைக் கவனைவைத்தார்.
ஏழைக் கிரங்கி எதிர்த்து வழக்காடி,
மீட்சிதந்த செய்தி எங்கும் மேவியதே.
சென்னை முதலாகச் சிறந்தபல தேசத்துப்
பற்பலரும் காந்திக்குப் பாராட் டனுப்பிவைத்தார்.
ஆப்பிரிக் காவில் கூலியாய் அமர்ந்தவர்கள்
அனைவருக்கும் காந்தி அரிய நிதிஆனார்.
வெள்ளை அரசாங்கம் மற்றோர் விதியாக
ஆப்பிரிக் காவின் இந்தியர் அனைவருமே
தலைக்கு இருபத் தைந்து சவரன்கள்
ஆண்டு வரியாக அளிக்கக் கேட்டதுவே.
காந்தி படைதிரட்டி மிக்க கிளர்ச்சிசெய்து
இருபத் தைந்தை மூன்றாக இறக்கிவிட்டார்:
ஆண்டு இருபது கழிந்த அப்பாலே
இனவரி சற்றும் இல்லாது ஒழிந்ததுகாண்.
சமய ஆராய்ச்சி செய்ய மனத்தெண்ணி
கிறிஸ்தவப் பெரியா ருடனே கூடிவந்தார்.
'இந்தியா நமக்குக் கற்பிக்கக் கூடியதென்'
என்று மாக்ஸ்மூல்லர் எழுதிய பெருநூலும்
பிர்ம ஞானசபை உபநிஷத் மொழிபெயர்ப்பும்
'முகமது நபியும் சீடர் களும்' என்று
வாஷிங்டன் இர்விங் யாத்த பெருநூலும்
'சுவிஷேச சாரம்', 'என்ன செய்வதுவே'
என்றே டால்ஸ்டாய் யாத்தசில் நூல்களையும்
படித்துத் தாம்கண்ட நற்பண்பு களைஎடுத்து
ஒழுக்கம் பெரிதாகப் போற்றி உயர்ந்துநின்றார்.
ஆயிரத் தெண்ணூற்றுத் தொண்ணூற் றாறினிலே
காந்தி தாய்நாடு நோக்கிக் கப்பலேறி
கல்கத்தா வந்து கரைசேர்ந்தார் அம்மானை!
பிறப்பில் குஜராத்தி, பள்ளியில் ஆங்கிலமும்,

ஆப்பிரிக்காவில் உருது மொழியுடனே
தமிழும்பேச, எழுதத் தாம்கற்று
ஏழை எளியவர்தம் பங்காள ராயிருந்தார்.
இராஜ கோட்டை வந்தும் விடாப் பிடியாய்
"ஆப்பிரிக் காவின் இந்தியர் நிலை" என்று
துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டுப்
பச்சை அட்டையுடன் பதினு யிரம்பிரதி
பத்திரிகை கட்கும் பெரிய தலைவர்கட்கும்
அந்நிய நாட்டு ஆதிக்க கர்த்தருக்கும்
தபாலில் அனுப்பித் தம்கடமை ஆற்றிநின்றார்.
அந்நாளில் பிளேக்கு அங்கு பரவியதால்
எங்கும், தீண்டாதார் இல்லத்தும் தொண்டுசெய்தார்.
ஆப்பிரிக் காவின் அடிமைத் துயர்களைய
பாம்பே யில்கூட்டம் பிரோஷா தலைமையினில் ;
பூனு நகர்சென்று திலகர் உறவுபூண்டு,
கோகலே யுடனே கூடிக் கலந்துநின்று
டாக்டர் பந்தர்க்கார் கூட்டுறவு தாம்பெற்று
சென்னை நகர்வந்து பரமேஸ் வரம்பிள்ளை
'இந்து' ஆசிரியர் சுப்ர மணியஐயர்
நட்புப் பெற்றுப் பச்சையப்பன் மண்டபத்தில்
பேசிப் பலரின் பரிவைப் பெற்றுநின்றார்.
கல்கத்தா சென்று 'இங்க்லிஷ்மேன்' ஆசிரியர்
ஸாண்டர்ஸ் உறவுபெற்றுப் பாம்பே திரும்பிவந்தார்.
டர்பன் பார்லிமன்று ஜனவரியில் கூடுமென்று
அறிந்து காந்தி அதனில் கலந்துகொள்ள
தாதா அப்துல்லா தமக்குச் சொந்தமான
கோர்லாந்து கப்பலிலே குடும்பத் துடன்ஏறி
வேற்றுளாய் வந்த எண்ணூறு பேருடனே
ஆப்பிரிக்கா தேசம் அதிவிரைவாய்ப் புறப்பட்டார்.
கடிய பெரும்புயலால் கடல்மிகக் கொந்தளிப்பு
கப்பல் கவிழும்எனக் கருதியே மக்களெல்லாம்
கலக்கம் மிகவுற்றார் கடவுளைத் தொழுதுநின்றார் ;
காந்தி அவர்களுக்குச் சாந்தம் சொல்லிவந்தார்.
இருபத்து நான்கு மணிநேரப் பெரும்புயல்பின்

டிஸம்பர் பதினெட்டில் டர்பன் துறைமுகத்தைக்
கப்பல் சேர்ந்தாலும்; கரைசேர மார்க்கமில்லை.
"காந்தி வருகின்றார் கனத்த கூட்டமுடன்
வெள்ளையர் நமக்கு வேறாகப் பலசெய்வார்.
இவர்கள் இறங்காமல் ஏற்றபடி நாம்தடுத்துத்
திருப்பி விடுவோம்" எனத்துணிந்தார் வெள்ளையர்கள்.
இந்தியாவில் நமக்கு எதிராகப் பிரசாரம்
செய்தவரை நாமே துரத்துவோம் என்றார்காண்.
ஆனாலும் காந்தி அசையா உள்ளத்தார்:
அப்துல்லா சேட்டு அதினும் கடியவரே:
இறைவன் திருவருளால் ஏழாம் நாளினிலே
கப்பலை விட்டிறங்கிக் கரைசேர்ந்தார் அம்மானை.
மனைவியையும் மக்களையும் மோட்டாரில் அனுப்பிவிட்டு,
ஆப்த நண்பரான லாப்டன் துரையுடனே
காந்தி வழிநடந்தார் கண்டார் சிறுவர்சிலர்.
காந்தி காந்திஎன்று கூச்சலிட, அதைக்கேட்டு
பித்துற் றவர்போலும் பெரியார் சிலர்வந்து
கத்திப் பிதற்றினார்கள் கற்கள் வீசினார்கள்
கூட்டம் பெரிதாகி, லாப்டனைப் பிரித்துவிட்டு
காந்தியை அடித்துக் காயப் படுத்தினார்கள்.
நடக்க முடியாமல் காந்தி நடுக்கமுற்று
வேலியில் சாய்ந்து; வீழாது நின்றார்காண்.
போலிஸ் பெருந்தலைமை அலக்ஸாண்டர் பெம்மானின்
மனைவியார் அங்கு மோட்டாரில் வந்துற்றார்.
வெள்ளை அறிவினராய் வேறு உணர்ச்சிகொண்டு
கல்லை விட்டெறிய காந்தி வருந்துவதைப்
பார்த்துப் பரிதபித்துக் கார்விட் டிறங்கிவந்து
காந்தி பக்கத்தில் கைக்குடையைத் தாம்விரித்து
நின்றார்; அவர்கள் நிலைகலங்கி நின்றார்கள்.
மாதரசி பெயர்தான் மங்காது நிற்பதாகும்!
இந்திய இளைஞர் இதற்குள் விரைவாக
அலக்ஸாண்டர் துரைக்கு அறிவித்து ஆள்கொணர்ந்து
பாதுகாப் புடனே காந்தி போகவைத்தார்.
ரஸ்டம்ஜீ மனையில் தங்குகிறார் காந்திஎன்று

வம்பர்கள் கேள்வியுற்று வந்து வளைந்துகொண்டார்.
'காந்தியை வெளியேற்று' என்று கூச்சலிட்டு
ஆர்ப்பாட்டம் புரியும் அக்கிரமக் காரர்களைத்
தட்டிக் கொடுத்துத் தக்க படிபேசி
அலக்ஸாந்தர் காந்தியை அப்புறப் படுத்திவிட்டார்.
மாறு வேடமாகக் காந்தி மறைந்த பின்பு
"உள்ளே ஆள் இல்லை; ஓடிவிட்டார் ஆசாமி;
நீங்கள் மனைநோக்கி நடவுங்கள்" என்றுசொல்லி
காலத்தில் உதவி காட்டிநின்றார் அலக்ஸாந்தர்.
இந்தச் செய்தி இங்கிலாந்து மந்திரியார்
சேம்பர்லேன் தெரிந்து; தக்க நடவடிக்கை
எடுக்கும் படியாக எஸ்கோம்புத் துரைமகற்குத்
தந்தி கொடுத்தார். ஆனாலும் மோகனதாஸ்
தாக்கியவர் மீதும் தாம்வழக்குத் தொடர்வதில்லை
என்றே எழுதிக் கொடுத்தார்காண் அம்மானை !
நெட்டால் 'விளம்பரம்' வெளியிட்ட செய்திகளும்
வம்பர்கள் மீதும் வழக்கிட மறுத்ததுவும்
மோகன தாஸருக்கு மிக்க புகழ்சேர்க்க,
வக்கீல் தொழிலில் வருமானம் அதிகமாக,
நெட்டால் காங்கிரஸுக் கின்னும் உழைக்கலானார்
இந்தியர் முன்னேற்றம் கருதி முனைந்துநின்றார்.
தொண்டு புரிகிறதே தனது மார்க்கமெனக்
கொண்டு யாவருக்கும் உதவி புரிந்துவந்தார்.
பிச்சைக்கு வந்த குஷ்ட ரோகியினைத்
துடைத்துப் புண்கழுவி மருந்திட் டுபசரித்து
வீட்டில் சிலநாள் உணவளித் திருக்கவைத்து
வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தார்காண் !
எந்த விதத்தாலும் ஏழைக் குதவவேண்டும்
என்று காந்தி எளியோர் வைத்யசாலை
ஒன்றிற் சென்று தினம்ஒரு மணிநேரம்
கலப்பாள ராக உழைத்துக் களித்தார்காண் !
ஆயிரத்துத் தொள்ளா யிரத்து ஆறுமுதல்
பிரமச் சாரியாகத் தூய விரதமுற்றார்.
புலன்களை அடக்கப் பெரிதும் விருப்பமுற்று

பழமும் கொட்டையுமே பிரியமாய் உண்டுவந்தார்.
பாலில் கிளர்ச்சி அதிகப் படுவதெனக்
கண்டு அதனைப் பக்குவமாய் உண்டுவந்தார்.
உபவாசம் மிக்க உதவிசெய்யும் எனக்கண்டு
வாழ்வு முறையில் வழக்கமாய் ஆற்றிவந்தார்.
சலவைத் தொழிலைத் தமக்குத் தாமாகச்
செய்து பெட்டியிட்டுச் சிறந்து விளங்கிநின்றார்.
தலைமயிரும் கத்திரியால் தாமே கத்திரித்து
தமக்குரிய எல்லாம் தாமே ஆற்றிவந்தார்.
போயர் யுத்தத்தில் கையுதவிப் படைவகுத்து
ஆறு வாரகாலம் அரியஊழியம்செய்தார்.
வெள்ளையர் கருப்பர் என்ற வேறுபாடு
வெறியைத் தணித்து நட்புப் பிறக்கவைத்தார்.
இந்தியாவல் பஞ்சம் ஏற்பட்ட போதெல்லாம்
ஆப்பிரிக்கா இந்தியர் அட்டியின்றி உதவவைத்தார்.
வேண்டிய வேலை எல்லாம் நடத்தியபின்
இந்தியா திரும்ப எண்ணினார் அம்மானே !
காந்தி புறப்பட்டார் என்று மனங்கசிந்து
அன்பர்கள் மிக்க ஆதரவு காட்டினார்கள்.
அணிகள் துணிமணிகள் ஆசை மொழிகள்பல
தங்கம் பொன்வெள்ளித் தனித்தனி சாமான்கள்
நிறையக் குவித்தார்கள். காந்தி நெஞ்சுருகி
கடமைக்கு ஏனோ கைம்மாறு எனநினைத்தார்.
ஊழியத்துக் கேனோ பதில்உதவி எனஉன்னி
அவற்றைத் திருப்பி அளிக்க மனந்துணிந்தார்.
ஐம்பத்தி ரண்டுபவுன் தங்கக் கண்டசரம்
மனைவிக்கா வந்த வெகுமதியில் ஒன்றாகும்,
எளிய வாழ்வில் யாதொரு அணியுமின்றி
காலம் கடத்திவந்த கஸ்தூரி பாய்க்குஇது
ஆசை அளித்ததனால் தமக்காகக் கொள்வதற்கே
எண்ணினார்: காந்தி இதற்கு எதிர்ப்பானார்.
அப்போது கஸ்தூரி அதற்கு எதிர்ப்பாக
எனக்கென்று வந்த இனிய நகைகள்இவை:
இவற்றை மறுக்க யாதுரிமை தங்களுக்கு

விருப்பால் தந்தவற்றை மறுப்பது நீதிஅன்று
மருமக்கள் வருங்காலம் இவைநமக் காகுமன்றே
என்றே கூற அதற்கேற்ற பதிலாக
சேயருக்குக் கலியாணம் சிறுவயதில் செய்யவேண்டா
நகைவேண்டும் காலத்தில் நான்வாங்கித் தருகின்றேன்
என்றுசொல்ல, கஸ்தூரி அதற்கும் எதிர்ப்பாக
அறிவேன் தங்களைநான் ஆண்டு பலவாக;
எனது நகைகளையும் எடுத்து அழித்ததாங்கள்
இனிமேல் வாங்கி எங்களுக்கு அளிப்பீரோ?
கஸ்தூரி எனக்காக வந்த கண்டசரம்
அதனை நீர்மறுத்தல் ஆகாது ஆகாது
என்றே கூற, அப்போது இதமாக
உன்னூழி யத்துக்கு உதவினை ரோ? என்றார்.
இல்லை இல்லை உங்கள் உழைப்புக்கே
உங்கள் உழைப்பு எனது உழைப்பன்றோ
இரவும் பகலும் தங்களுக்கு யானுழைத்தேன்
வீட்டுக்கு விருந்தாக வருகின்ற அயலார்க்கு
எந்த நேரத்தும் யான்அடிமை போல்உழைத்தேன்
என்று கஸ்தூரி கண்ணீர் பெருக்கிநின்றார்:
காந்தி சற்றும் தளராது இறுகிநின்றார்:
பாங்கில் நகையைப் பத்திரப் படுத்திவைத்து,
வேண்டும் விதிமுறைகள் வரைந்து வகைசெய்து,
இந்தியா நோக்கிக் கப்பல் ஏறிநின்றார்.
கல்கத்தா சேர்ந்து காங்கிரஸ் கூட்டத்தில்
முதன்முத லாக மோகனதா ஸர்கலந்தார்
தென்னப் பிரிக்கா இந்தியர்க்கு அனுதாபத்
தீர்மானம் ஒன்று நிறைவேற்றித் தாம்களித்தார்.
பம்பாய் பிரோஷிஷா; தலைவாசின் ஸாவாச்சா;
சிமன்லால், திலகர், தக்கபெரியோர்கள்
கூடப் பழகி; காரிய தரிசியான
கோஷா லுக்குக் குமஸ்தாவாய்த் தாம்அமர்ந்தார்.
காங்கிரஸ் முடிய, கல்கத்தா நகர்பார்க்க
அங்கு கோகலே மனையில் தாம்அமர்ந்தார்.
தம்பிபோல் பழகி, தன்மை தெரிந்தவராய்;

ஊர்சுற்றி வருங்காலம் காளிகோ யில்உற்றார்.
ஆண்மைமிகு யாசகர்கள், ஆட்டுப் பலிகண்டு
வருந்தி, வெறுத்து, வீட்டை நோக்கிவந்தார்.
மூன்றாம் வகுப்புப் பிரயாணி நிலைஅறிய
இந்தியா முற்றும் சுற்றிவர எண்ணமுற்றுக்
கல்கத் தாவிருந்து காசி நகர்அடைந்தார்.
அழுக்கு; ஆரவாரம், அர்ச்சகர் பெருந்தொல்லை,
வணிகக் குறிப்புள்ளம் யாவுங் கவனித்து
தம்பிடி ஒன்றே தக்ஷிணை யாய்க்கொடுத்து
திரும்பி ரயிலேறி ராஜகோட் டைஅடைந்தார்
பாரிஸ்ட ராக நல்ல பயன்கண்டார்.
பின்னர் பம்பாய் நகரில் குடிமாற்ற
பையன் மணிலால் பெரிய சுரம்உற்றான்.
மாமிசம்கொடுப்பீர் முட்டைகொடுப் பீர்என்று
வைத்தியர் சொல்ல, தாம்அந்த முறைவிட்டுத்
தண்ணீர் வைத்தியம் தாமாகச் செய்துநின்றார்
இந்தக் காலத்தில் ஆப்பிரிக்கா இந்தியர்கள்
"சேம்பர்லின் வருதலினால் தாங்களிங்கு வரவேண்டும்"
என்று தந்திசொல்ல, இணங்கிப் புறப்பட்டார்
தக்க காலத்தில் டர்பன் நகர்சேர்ந்து
சங்கத் தாரோடு சாம்பர்லே னைக்காண
வேண்டிய ஏற்பாடு எல்லாம் செய்தமைத்தார்.
வெள்ளைக் குடிமக்கள் வம்புத் தனமாக
காந்தி சாம்பர்லினைக் காணாது தடுப்பதற்கு
வேண்டிய எல்லாம் வீராப் புடன்செய்தார்
டர்பனி லிருந்து, சாம்பர்லின் தங்குகிற
டிரான்ஸ்வால் தூரம் ஆயிரத்து நூறுமைல்
அனுமதி பெற்ற இந்தியரே அங்குசெல்வர்.
அதிக சிரமத்துடன் அனுமதி தாம்பெற்று
அங்கே சென்றாலும் இலாக்கா அதிகாரி
காந்தி சேம்பர்லினைக் காணக் கூடாது
என்றே தடைசெய்தார்; இதயம் மிகத்துடித்து
எடுத்த காரியத்தை விடாது முடிப்பதற்கு
பாரிஸ்டர் காட்பரியைப் பதிலாக அனுப்பிவைத்தார்.

தொண்டு செய்வதற்குத் தக்கஇடம் டிரான்ஸ்வாலே
என்று தீர்மானித் தங்கே இருக்கலானார்.
நித்திய கருமங் களிலே ஒன்றாக
பகவத் கீதை பாடம் பண்ணிவந்தார்.
உடைமைப் பொருள்மீது உரிமை கொள்ளாமல்
தரும கருத்தாவாய்க் கருதிநெறி நின்றார்.
சைவ உணவைப் பரப்பும் நோக்கமுடன்
சவரன் ஆயிரம் கடன்கொடுத்தார் விடுதிக்கு.
நீரும் மண்ணும் நோய்களுக்குப் பரிகாரம
ஆகும் முறையை அனுபவத்தில் ஆற்றிவந்தார்;
பழங்களும் வித்துகளும் போதிய ஆகாரம்;
ஆவின் பாலும் ஆகாது என்றுநீத்தார்.
வீட்டுள் நீட்புள், கழிநீர்ப் பாத்திரத்தைத்
தாமே கழுவித் தூய்மை செய்துவந்தார்.
இந்தியன் ஒப்பினியன் என்னும் பத்திரிகை
பொறுப்பை ஏற்றுத் தவறாமல் பொருள்உதவிக்
கட்டுரை வரைந்து கனத்த தொண்டுசெய்தார்.
ஆப்பிரிக் காவில் அடாபிடித் தனமாக
நகரசபை எல்லைக்குள் கூலிச் சிறுசேரி
இருப்ப தாகாது என்று இந்தியரின்
இருப்பிடத்தைக் கைப்பற்றி ஈடாகப் பணம்கொடுத்தார்.
தந்தபணம் போதாது என்றே வழக்கிட்டு
இந்தியர்கள் மிக்க செல்வம் எய்துதற்கு
வைக்கீ லாயுழைத்துக் காந்தி உதவிசெய்தார்.
ஜோனவ்ஸ் பார்க்கில் பெரும்பிளேக் தோன்றியது.
இருபத்து மூவர் இதனால் இடர்ப்பட்டார்.
காந்தி வைத்தியராய்க் கருமஞ் செயலானார்
பிளேக்கின் கொடுமை பெரிதெனத் தாம்தெரிந்தும்
அதற்குள் இருந்து அனைவருக்கும் தொண்டுசெய்தார்.
கூலிக ளான சிறிய குடும்பத்தார்
கைப்பணத்தை எல்லாம் பாங்கில் கட்டவைத்து
வேற்றிடத்தில் சென்று வாழ வகைசெய்தார்.
ஆங்கில நாட்டறிஞர் ரஸ்கின் எழுதியுள்ள
"கடைசிவரை இவ்வாஸ்று" என்னும் பெருநூலை

படித்து மனமுருகித் தம்மொழியில் மொழிபெயர்த்தார்
உடல் உழைத்து வாழும் வாழ்வே உயர்வாழ்வு
என்று கருதி அதற்கேற்ப நடைவகுத்தார்.
பயிர்த்தொழில் பண்ணை ஏற்படுத்தப் போனக்ஸில்
நூறு ஏக்கர் நிலத்தைத் தாம்வாங்கி
ஆளுக்கு மூன்று ஏக்கர் அளவுகொண்டு
அங்கு குடியிருந்து பண்படுத்திப் பயிர்செய்தார்.
கரும வினைஞர் துணையால் கட்டடங்கள்
எழுப்பி அச்சு யந்திரமும் அதில்வைத்து
'இந்தியன் ஒப்பினியன்' அங்கிருந்து வெளியாக ;
தலைக்கு மூன்று சவரனே சம்பளமாய்
திட்டம் வகுத்துத் தொழிலை நடத்திவந்தார்.
மனைவி மக்களையும் அங்கே வரவழைத்தார்.
மற்றோரும் அவ்வாறே குடும்பத் துடன்வந்தார்.
போனிக்ஸ் சிறிய கிராமப் பொலிவுகொண்டு
சிறந்து விளங்கிச் செவ்வனே வாழும்நாள்,
ஜூலுக் கள் என்னும் ஜாதி யார்மீது
புதிய வரிஒன்று விதித்தார்கள் வெள்ளையர்கள்.
வரிவசூல் செய்ய வந்த சர்ஜண்டை
ஜூலுக் கள் குத்திக் காயப் படுத்தியதால்
குழப்பம் உதிக்கக் கொடிய வெள்ளையர்கள்
கலகம் எனப்பரப்பிக் கடும்படை திரட்டினார்கள்.
இந்தியப் படையும் எழுந்தது துணைபுரிய.
சர்ஜண்டு மேயர் எனக்காந்தி படைநடத்தி
தலத்துக்கு வந்துசேர, கலகமே கிடையாது.
வெள்ளைய ராலே வீழ்ந்து புண்பட்ட
ஜூலுக் களுக்குக் காந்தி துணைசெய்தார்.
ரணங்களைக் கழுவி மருந்திட்டுத் தொண்டுசெய்தார்.
போனிக்ஸில் நோயால் கஸ்தூரி பாய்நொந்தார்
இரத்தப் போக்சால் இளைத்து ஒடுங்கிநிற்க
உப்பு சேர்ப்பதை ஒழிக்கக் காந்திசொன்னார்.
உங்களால் அதைஒழித்தல் ஆகுமோ எனக்கேட்க
காந்தி அதனைக் கடிந்தார் ஒருவருடம்.
கஸ்தூரி பாயும் உப்பை நீக்கி விட்டார்.

நல்ல சுகம்பெற்றார்: காந்தி நயங்கண்டார்.
புலனடங்கி வாழ்வதற்கு உப்பு புளிஒழிப்பு
உபவாசம் அவசியம் என்ற உண்மைகண்டார்.
பாலும் கிளர்ச்சிதரும் என்ற பண்பறிந்து
ஆகாத வற்றை அகற்றினர் ஆங்காங்கு.
போனிக்ஸில் வாழ்ந்த சிற்றிளம் பிள்ளைகட்கு
இலக்கியம் கணக்கு எழுதப் படிக்கவைத்து
தச்சு, செருப்புத் தொழில்முறை கற்பித்து
ஆசான் முறையாகக் காந்தி அமர்ந்துவந்தார்
தமிழும் உருதும் தாமே போதித்தார்.
ஒழுக்கத்தால் சன்மார்க்க முறையை ஓதிவந்தார்.
மாணவ மாணவிகள் மன நிலை தாம்மாறி
ஒழுக்க நிலைகெட்டார் என்று உணர்ந்தபோது
பட்டினி கிடந்தார். பாலர் மனம்வருந்திக்
குற்றம் உணர்ந்தார் குணநெறி கைக்கொண்டார்;
பிராயச் சித்தமாக உபவாசங் கொண்டபின்பு
இந்தியா வருவதற்கு லண்டன் வழிகோரி
கஸ்தூரி பாயுடனே கப்பல் பயணமுற்று
ஆயிரத் தொளாயிரப் பதினான் காம்ஆண்டில்
ஆகஸ்டு ஐந்தில் லண்டன் நகர்அடைந்தார்
அதற்கு முந்தியநாள் மாயுத்த ஆரம்பம்
ஆளும் இனத்தார்கள் போர்தொடங்கி னல்அதற்கு
வேண்டும் துணைஎல்லாம் நாம்செய்ய வேண்டுமென்று
காந்தி துணிந்தார். அதைக்கண்டு சகியாமல்
இந்திய மக்கள் எதிர்த்தார்கள் ஆனாலும்
காந்தி படைதிரட்டிக் கைகொடுக்க முன்வந்தார்.
போர்முறை ஆகாது பொறுமை பெரிதென்னும்
புண்ணியர் கடமைஎனப் போர்க்குதவி புரியவந்தார்.
பண்டுவ முறைகள் ராணுவப் பயிற்சிமுறை
என்பது பேர்கற்றார் ஏற்ற உதவிசெய்தார்.
பெண்கள் குழுவினிலே பிறங்கினர் சரோஜினியார்
காந்தி அம்மையாரைக் கண்டு பழகலானார்.
நோய்ப்பட்டுக் காந்தி நொந்து இருந்தாலும்
கன்றுக்குப் பாலின்றிக் கறக்கும் பால்காரர்

தோல்கன்று தூக்கும் துணிவுப் பால்காரர்
கொடுமை அறிந்து பால்குடிப்ப தில்லேஎன்று
விரதங் கொண்டார் உணவுவகை சோதித்தார்
பாரிச நோய்க்குப் போக்கு வகைகாணர்—
வைத்தியர் ராபட்சு வந்துஒரு வகைசொன்னர்
சொந்த ஊருக்குச் சென்ருல் சுகம்பெறுவீர்
என்ருர்—இதைக்கேட்டுக் காந்திகப்பல் ஏறிவிட்டார்.
சூயஸ் கால்வாயில் கொஞ்சம் சுகம்கண்டார்
மத்திய தரைக்காற்றில் மிக்க சுகம்உணர்ந்தார்
பம்பாய் சேர்ந்து பலமுற்ருர் அம்மானே !

இந்தியாக் காண்டம்

பம்பாய்த் தலத்தாரும் குஜராத்து வாசிகளும்
காந்திக்கு வரவேற்பு களிப்போடு அளித்தார்கள்.
தாய்மொழியிற் காந்தி தக்க பதில்உரைத்து
எல்லா மனிதருக்கும் இனியவ ராகிநின்ருர்.
பின்னர் காந்தி பூனு நகர்சென்ருர்.
கோகலே மற்றும் பெரியா ருடன்குலாவி
கத்திய வார்ரயிலில் மூன்ரும் வகுப்பேறும்
பிரயாணி கள்எல்லாம் பிராணிகள் ஆகிருர்கள்
வீரம்சாம் சுங்கவரி விதிக்கப் படுகிருர்கள்
என்றே அறிந்து எதிர்க்கத் துணிந்தவராய்
கவர்ன ருடன்பேசிக் காரியம் பலிக்காமல்
செம்ஸ்போர்டு பிரபுவினல் சீக்கிரம் பலன்கண்டு ;
சாந்தி நிகேதன் சென்ருர் காந்திமகான்.
அங்குப் புதிய வாழ்க்கை முறைஅமைத்து
ஆண்ட்ரூ ஸோடு அளவளா வியிருக்க:
கோகலே ஆவி நீத்தார் எனக்கேட்டு
வருந்தி விரைந்து பூனு நகர்வந்தார்.
இந்தியா வில்தங்கி இருந்தால் உண்மைநிலே
உணர்வீர் என்று கோகலே உரைத்ததனே

எண்ணிக் காந்தி மூன்றும் வகுப்பேறி
நாட்டு நிலைஅறிய நாடினர் அம்மானை.
இடித்து இடித்து டிக்கட்டு வாங்குகிறார்
வண்டியிற் குதித்து சன்னல்வழி வருகிறார்
இருக்கு மிடங்களிலே மூட்டையைப் பரப்புகிறார்
வருவாரை நோக்கி இடமில்லை போஎன்பார்
வெற்றிலை எச்சில் கட்டுச்சா தஇலைகள்
பழத்தொலிகள் எல்லாம் பக்கத்தே காட்சிதரும்
பிடி சுருட்டுப் பிடித்துப் புகைவிட்டுக்
கட்டைகள் தம்மைச் சுற்றிக் கிடக்கவைப்பர்
நீப்புள் சென்றால் நீர்விட்டு அலம்பார்கள்
மலமும் சலமும் தலமெங்கும் மலர்ந்திருக்கும்
கூச்ச லிட்டுக் கொக்கரித்து வீராப்புப்
பேச்சுப் பேசி பேதைமை பெரிதாக்கி
வாழும் இயல்பை கும்பமேள மாகும்
அரித்து வாரத்துப் பிரயாணத் தில்கண்டார்
என்ன செய்வதென்று அறியா திடர்ப்பட்டார்
அரித்து வாரம்; அதற்கப்பால் ரிஷிகேஷம்,
லக்ஷ்மண பாலம் பார்த்துத் திரும்பிவந்து
ஆமதா பாத்தை அடைந்தார் அம்மானை!
ஐவர் தமிழர், இருபத்தை வர்மொத்தம்
ஆமதா பாத்தில் ஆச்சிரமம் கண்டார்கள்.
சத்தியாக்கிரக ஆச்சிரமம் எனும் பெயரால்.
தீண்டா வகுப்பினரைச் சேர்ந்த தூதாபாய்
மனைவி மகளுடனே ஆச்சிரம வாசியானார்.
வைதிகப் பழக்கம் வெறுப்பைத் தந்தாலும்
பொறுமை பெரிதாகப் போற்றினர் யாவருமே.
தீண்டாமை ஒழிக்கும் தூய ஆச்சிரமம்
என்னும் பெயர்கேட்டு எல்லாரும் உதவிவந்தார்.
முன்பின் அறியாத சேட்ஒருவர் மோட்டாரில்
வந்து பதின்மூவா யிரம்ரூபாய் கொடுத்தகன்றார்.
இவ்வா றிங்கிருக்க, இந்தியா விலிருந்து
ஆப்பிரிக்கா சென்றோரின் ஒப்பந்தக் கூலிமுறை
அகற்ற முயன்று அதிலும் வெற்றிபெற்றார்.

பீகாரில் தீண்டாமை பெரிய தாண்டவமாம்.
சம்பரான் என்னுமூரில் சகலகுடி யானவரும்
பெற்றுள்ள நிலத்தில் பத்துக் கொன்றரையை
அவுரிபயிரிட்டு முதலாளிக் களிக்கவேண்டும்.
அரசாங்கம் உழவர்க் காதரவு அளிப்பதில்லை.
இக்கொடுமை கேட்டு இதனை ஒழிப்பதற்கு
எண்ணிப் பீகார்க் கெழுந்தார் காந்திமகான்
கிருபா லனிஅவரைப் பிரியமாய் உபசரித்தார்
ராஜேந்திர பிரசாத் இன்னும் பலபெரியார்
குடிமக்கட் குற்ற கொடுமைகளை அறிவித்தார்.
காந்தி கொடுமைகளைக் கட்டோடு களைவதற்கு
விரதம் பூண்டு பலர்ஆ தரவுபெற்றார்
சம்பரான் மக்களைச் சந்தித்துப் பேசுகையில்
" பீஹாரை விட்டு வெளியே போ " என்று
போலிஸ் கமிஷனர் பிறப்பித்தார் உத்தரவு
காந்தி மறுத்துக் காரியம் முடியுமட்டும்
அங்கிருப்ப தாக அறிவித்தார். அப்போது
'அடுத்தநாள் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென்று
உத்தரவு பிறந்ததனுல் காந்திஅற மன்றுவந்தார்
கூட்டம் கூட்டம் பெருங்கூட்ட மாகமக்கள்
காந்தியைத் தொடர்ந்து கலக்கமின்றி நின்றார்கள்.
நாட்டிற்கு உழைக்க, நலிந்தோர்க்கு உதவிசெய்ய
இங்கு வந்தேன்யான் இதைவிட்டு வெளிச்செல்லேன்
குற்றம் காண்பீரேல் கொடுப்பீர் தண்டனையை
என்றே உரைத்தார் யாவரும் மருண்டுநின்றார்.
வழக்கைச் சர்க்கார் வாபீஸ் வாங்கினுர்கள்.
கலெக்டர் காந்திக்குக் கருணை புரிந்துநின்றார்.
வெற்றிபெற்ற காந்தி வக்கீல் குழுவினர்க்கு
ஒழுக்க நெறியோதி உயர்ந்தார்காண் அம்மானை!
கிராமங்களில் எல்லாம் கிரமமாய்க் கல்விமுறை
பரப்பப் பெற்றால் பண்படும் நாடுஎன்று
பம்பாய் பூனு பற்பல இடத்திருந்து
ஆண்களை, பெண்களை, தம்மனைவி மக்களையும்
காந்தி வரவழைத்துக் கல்வி பரப்பலானுர்.

சுகாதார நெறிகள் சொல்லி நலம்புரிந்தார்
வைத்திய முறைகள் வேண்டும் அளவுசெய்தார்
தோட்டத் தொழிலாளர் உள்ளக் கருத்தறிந்து
ஆய்வுக் குழுஅமைத்து ஆதிக்க முறைஒழித்தார்.
" ஆமதா பாத்து ஆலை முதலாளி
கூலிகளை மிக்க கொடுமைப் படுத்துகின்றார்
நீக்க வகைகாட்டி, ஆக்க முறவைப்பீர் "
என்ற கடிதம்ஒன்று காந்திக் கெட்டியதால்
வந்தார் ; ஏழையர்தம் துயர்தீர வகைசெய்தார்.
வேலை நிறுத்தம் செய்வீர், அறப்போரில்
விடுதலை கிடைக்கும்வரை யான்உணவு கொள்வதில்லை
என்றுசொல்லி மூன்றுநாள் இருந்தார் உபவாசம்.
முதலாளி வருக்கத் தலைவர் அம்பாலால்
அவர்மனைவி சாரளா அன்பில் மனம்உருகி
தொழிலாளர் கொள்கைக்கு ஆதரவு கொடுத்தார்கள்
துன்பந் தொலைந்ததென்று தின்பண்டம் பரிமாற,
வேலை செய்வதற்கு விரைந்தார்கள் ஊழியர்கள்
கேதா ஜில்லாவில் ஏதேனும் விளையாமல்
வரிகொடுக்க முடியாமல் மக்கள் வருந்துகையில்
சர்க்கார் மக்களைச் சங்கடப் படுத்தினார்கள்
சப்தி செய்தார்கள் சங்கமப் பொருளைஎல்லாம்
மோஹனலால் பாண்டி வயலின் வெங்காய
விளைவை எடுத்து வேற்றிடம் வைப்பதற்கு
காந்தி ஆணையிடப் பாண்டியர் தோழருடன்
அவ்வாறே செய்து அடைந்தார்கள் தண்டனைதான்.
பெற்ற தண்டனையால் பீதி ஒழிந்ததனால்
உற்சாகம் அஞ்சாமை ஓங்கி வளர்ந்ததனால்
வரிகொடா இயக்கம் வளர்ந்ததால் சர்க்காரும்
'எளியவர்க் கிரக்கம் ; வலியர்க்கே வரி' என்று
சமரசம் செய்தார், சகலரும் ஏற்றுநின்றார்.
பின்னர் பெரும்போர்க்குப் படைதிரட்டி உதவிசெய்யத்
துணிந்தார் ஆனாலும் தேசத்தார் ஏற்கவில்லை
ஓயாத உழைப்பால் நோயை வருவித்தார்
வயிற்றுப் போக்குகொண்டு வீழ்ச்சி அடைந்தபோது

பித்தர் கோலத்து டாக்டர் தால்வால்கர்
பனிக்கட்டி கொண்டு பிணியைப் போக்கிவைத்தார்.
பால்அருந்த வைத்தியர்கள் பல்காலும் வற்புறுத்த
பால்காரர் கொடுமையைப் பகர்ந்து, எதிர்த்துநின்றார்
கஸ்தூரி பாய்மாது கனத்த மதியுடையாள்
'வெள்ளாட்டுப் பாலை யுட்கொண்டால் குறையாதோ?
என்று விளம்பிநிற்க, டாக்டர்இதை வற்புறுத்தி
ஆட்டுப்பாலை அருந்தவைத்தார் அம்மானை.
சொற்பொருளை நீத்துச் சொல்லைப் பின்பற்றி
நிற்பதை நினைத்து நெஞ்சம் மிகக்கவன்றே
பாலருந்தி வந்தார் பாவம் அறியாதார்.
காந்தி இடர்க்கடலில் கால்வைத் திறங்குகின்றார்
அரசியல் கிளர்ச்சி செய்வாரை அடக்கஎண்ணி
கேள்வி முறையின்றிக் குற்றச் சான்றின்றிச்
சந்தேகப் பட்டாரைத் தண்டிக்க லாமென்று
சர்க்கார் ரௌலட்டுச் சட்டம் கொண்டுவந்தார்.
அதனை எதிர்க்கஎண்ணி அறிஞர் பலர்சேர்ந்து
சட்டம் உறுதியானால் சத்யாக்கி ரகம்செய்ய
உறுதி பூண்டார்கள் ஒழுங்குமுறை வகுத்தார்கள்
சட்ட சபைகூட்டிச் சர்க்கார் ஆராய்ந்தார்
சிறந்த பேச்சாளர் சீனிவாஸ சாஸ்திரியார்
பல்லோர் பாராட்டப் பலமாக எதித்தாலும்
சர்க்கார் அதனைச் சட்டம் ஆக்கினார்கள்.
காந்தி வைசிராய்க்குக் கண்டனங்கள் பலவிடுத்தார்
இந்த நெருக்கடியில் செந்தமிழ்த் திருநாட்டார்
கஸ்தூரி ரங்கர்பேரால் காந்தியை அழைத்தார்கள்
சேலம் வாசி சிறந்த மதியூகி
ராஜ கோபாலர் இதற்குத் தூண்டுகோலாம்.
கன்னித் தமிழர்களும் காந்தியும் கலந்திருந்து
சட்ட எதிர்ப்புக்கு உற்ற சின்னமாக
உபவாசமிருந்து ஒருநாள் 'ஒடுக்க' முறத்
தீர்மானம் செய்து தேயமெல்லாம் அறிவித்தார்.
ஆயிரத்தொள்ளா யிரப்பத்தொன் பதாம்ஆண்டு
ஏப்பிரல் ஆறு ஒடுக்க நாளாகும்

இமயந் தொடங்கிக் குமரி ஈறாக
உன்னத முறையில் ஒடுக்கம் நிலைத்ததுவே!
இந்து முஸ்லிம் கிறிஸ்தவ சீக்கியர்கள்
என்ற பேதமின்றி எல்லாரும் ஒடுக்கமுற்ருர்.
முஸ்லிம்கள் வேண்ட மோகனதாஸ் காந்தி அன்று
மாதுசரோ ஜினியுடன் மசூதி யுட்சென்று
பிரசங்கம் புரிந்தார்; பேதங்கள் மறைந்தனவே
உப்பை வரியின்றி உலகம்உப யோகிக்க
வேண்டும் என்றே விளம்பினுர் யாவருக்கும்.
பிரசுரிக்கக் கூடாது என்றுசர்க் கார்தடுத்த
புத்தகங் களைப்பதித்து விற்கத் துணிந்தார்கள்
மக்களின் ஊக்கம் மட்டுக் கடங்காமல்
விறிட்டு நிற்க; நெஞ்சத் துணிவுபெற்ருர்.
ஏழாந் தேதி காலை வண்டிஏறி
அமிர்த சரஸுக்குப் புறப்பட்டார், அவ்வழியில்
'பால்வால்' நிலயத்தில் போலீஸ் புலிகள்வந்து
வண்டியை விட்டிறக்கிக் காவலில் வைத்தார்கள்.
பின்னர் ரயிலேற்றப் பம்பாய் நகர்சேர்ந்து
போலீஸார் விலகிப் போனர்கள்; காந்தி அங்கு,
தம்மைப் போலீஸ் தடைசெய்த தைக்கேட்டு
மக்கள் மனம்கொதித்து மாகலகம் செய்வதற்குச்
சித்தமா யுள்ளார் என்று செவியுற்றுக்
கட்டத்தை நோக்கி கடுகி விரைந்துவந்தார்
காந்தியைக் கண்ட களிப்பு மிகுதியினுல்
வந்தே மாதரம் அல்லாகு அக்பரென
வாழ்த்தொலி கூறி வான்பிளக்க ஆர்த்தார்கள்
கூட்டத்தை அடக்கக் கூடிய போலீஸைக்
கல்லால் அடித்துக் காயப் படுத்தினுர்கள்.
குதிரைப் பட்டாளம் குதித்துக் குதித்தோடி
மிதித்தும் உதைத்தும் கலைத்து வதைத்தகாண்
ஈட்டிகளை வீசி எதிருள்ளார் மேல்குத்தி,
கைத்தடியை வீசிக் கண்டோர் களைஅடித்து,
எமபடை வேலை இயற்றினுர் போலீஸார்.
எல்லாரும் கலைந்தார் எங்கும் பெருங்கலகம்

காந்தி போலீஸ் கமிஷனை ரைக்கண்டு
நடந்ததைச் சொல்லித், தாம் பஞ்சாப் போவதாக
அறிவித்தார். ஆங்காங்கு சிலகூட் டம்நடத்தி
அமைதி பெரிதென்று அறிவித்தார் யாவருக்கும்.
மூர்க்கத் தனமாக மக்கள் முனைந்துநின்று
அக்கிரமம் செய்தல் ஆகா தெனஉரைத்தார்
பக்குவப் பட்டில்லா மக்கள் தொகுதிக்குச்
சத்தியாக் கிரகம் சுத்தத் தவறென்றார்.
அடக்கு முறையாலே சர்க்கார் ஆளுகையில்
பம்பாய்க் கிரானிகள் பத்திரா திபர்பதவி
காந்தி ஏற்றார் : சர்க்கார் அதைத்தடுக்க,
'எங்இந்தி யா'வுக்கு ஆசிரிய ராய்அமர்ந்தார்
வார இதழாக குஜராத்தி 'நவஜீவன்'
ஆசிரியப் பொறுப்பும் ஏற்று நடத்தலானார்
நல்ல சந்தாதார் நாற்பதி னாயிரம்பேர்
பெற்றுப் பத்திரிக்கைப் பிரபலம் அடைந்ததுவே.
பின்னர் காந்தி பஞ்சாப் லாகூரின்
மாளவியா, மோத்திலால், சுவாமிசிரத் தானந்தர்
நல்லுறவு பூண்டு நாட்டு நிலைஅறிந்தார்
'ஹண்டர் கமிட்டி'யினால் உண்மை களையறிந்து
டயர்செய்த தீமைகளை மெய்நெறியில் வெளியிட்டார்
மகமது சமய மக்கட் பெருந்தலைமைக்
கிளர்ச்சி பெரிதாகி கிலாபத் கேள்விஎழ,
டில்லி மாநகரில் எல்லாரும் கூடினார்கள்
காந்தியும் சென்றார் கருத்தை அறிவித்தார்
கிலாபத் விஷயம் தனித்த கிளர்ச்சிஎன்றார்
பசுவதை நீக்கப் பாடுபடல் நன்றென்றார்
அந்நியத் துணியை அகற்றல் நலம்என்றார்
ஒத்துழை யாமை உறுதி பயக்குமென்றார்
தேசபந்து தாஸர் திலகர் மனம்ஒப்ப,
காங்கிரஸ் நிர்வாகப் பொறுப்பைக் காந்திஏற்றார்
கைராட் டினமே கதியளிக்கும் கருவிஎன்றார்
கங்காபென் துணையால் நூற்கும் கலைகற்றார்
ராட்டினக் கீதம் நாட்டை வளம் படுத்தும்

உடலை ஓம்பும் ; உண்மை ஒளிர வைக்கும்
என்ற நம்பிக்கை : இடைவிடா முயற்சிசெய்து
கதரைப் பரப்பக் கருத்தைச் செலுத்தி வந்தார்
கல்கத்தா காங்கிரஸ் கிலாபத் பெருவிஷயம்
லாலா லஜபதி மேலான நற்றலைவர்.
செந்தமிழ் நாட்டுச் சேலத்து வாசியான
விஜய ராகவர் விளம்பினர் ஒருவார்த்தை.
சுயராச் சியங்கோரி ஒத்துழை யாமைகொள்வோம்
என்றார், இதனை எல்லாரும் ஏற்றுநின்றார்.
அடுத்த ஆண்டில் நாகபுரி காங்கிரஸில்
விஜய ராகவரே வீற்றிருந்தார் தலைவராக.
தீண்டாமை ஒழிப்பு, கதருடுப்பு, ஒற்றுமையே
தீர்மான மாக்கிச் சுயராஜ்ய வழிகண்டார்.
ஆயிரத் தொள்ளா யிரத்திரு பத்துநான்கில்
இந்து முஸ்லீம்கள் ஒற்றுமையா யிருப்பதற்கு
அறிஞர் பலரை அமைத்து மகாநாடு
சுபர்மதியிற் கூடிச் சொன்னார் யோசனைகள்.
இருக்கும் மாணவர்தம் இழுக்கு நடைக்காக
இருபத் தொருநாள் இருந்தார் பட்டினியாய்
இருபத்தைந் தாம்ஆண்டில் பெல்ஹாம் நகரத்தில்
இந்திய தேச காங்கிரஸின் மாதலைவர்
என்றே தேசம் ஏற்றுப் புகழநின்றார்.
வெள்ளையர் ஆட்சி விபரீத மானதுதான் !
அறமுறையில் மீறி அதனை அகற்றவழி
மக்கட்குக் கற்பிக்க மனத்தில் திட்டமிட்டு
முப்பத்து ஒன்று மார்ச்சு பன்னிரண்டில்
உப்புப் போரென்றே உலகிற் புதிதாக
தண்டிக்குப் புறப்பட்டார் தானைத் தலைவராக.
எண்டிசையி லுள்ளாரும் இந்தச் செய்திகேட்டு
திரண்டு உப்பெடுக்கச் சென்றார் கடற்கரைக்கு.
சக்கர வர்த்தி ராஜ கோபாலர்
வேத ஆரண்யக் கடற்கரையில் உப்பெடுத்தார்
மக்கள் மீறி மனமொத்து நின்றுவிட்டால்
சர்க்கார் அடக்குமுறைச் சம்பம் பலிக்காது

என்று காந்தி எல்லார்க்கும் விளக்கிநின்றார்.
லண்டன் மாநகரில் இரண்டாம் முறையாக
சர்வகட்சி மகாநாடு ஒன்று சமைத்தார்கள்
இந்தியப் பிரதி நிதியாக யார்செல்வார்!
கேடு நினையாதார் கீழ்மேல் அறியாதார்
மேலாடை கொள்ளார் முழங்கால் துணியணிவார்
கடவுள் செயலென்றே காரியங்கள் நடத்திநிற்பார்
கரன்சந்த்ர மோகனதாஸ் காந்தியே செல்லலானார்
பக்கிரி என்று சர்ச்சில் பரிகசித்தார்
சென்று பலபேசி தம்நாடு நோக்கிவந்தார்.
இர்வின் பிரபு இரட்டைச் சமர்த்துடையார்
காந்தியுடன் பேசிக் கட்டுப் படுத்திவிட்டார்.
ஒத்துழைய யாமை இயக்கம் அதைஒதுக்க,
சர்க்கா ருடனே சேர்ந்து ஒத்துழைக்க,
அரசியல் கைதி அனைவரையும் வெளியாக்க,
தீர்மானம் செய்து காந்தி தலைவராக
மகாநாட்டுக் கனுப்பி மாபுகழ் தேடிக்கொண்டார்.
நாட்டை முன்னேற்ற நல்ல முறையாக
ராட்டை நூல்நூற்று சுத்தக் கதர்அணிய
தீண்டாமை ஒழிக்கப் பாடுபடத் துணிந்து
இந்திய பூமி எங்கும் சுற்றிவந்தார்
முப்பத்து நான்கில் மும்முரமாய்ப் பிரசாரம்
அடுத்த ஆண்டில் அமைதியாய் வாழ்வதற்கு
காங்கிரஸை விட்டுக் கத்திரித்துக் கொண்டேன்என்றார்
இந்து முஸ்லிம்கள் ஒற்றுமையாய் இருப்பதற்கும்
தீண்டாதார் முன்னேற, கைராட்டுத் துணிபரவ
தனித்திருந்து காந்தி தொண்டு புரிந்துவந்தார்
இரண்டாம் பெரும்போர் எழுந்த காலத்தில்
சிராப்போடு கிரிப்சு செல்வன் தலைமையினில்
இந்தியா பற்றி இனிதாய் முடிவுசெய்ய
குழுஒன்று வந்து குடியாட்சி முறைபற்றி
நிதியும் இராணுவமும் நாங்களே கைக்கொள்வோம்
மற்றவை பலவும் நாட்டார் முறைசெய்க
என்றே கூற, எல்லாரும் எதிர்த்தார்கள்

கருப்புக் கொடிகாட்டிக் கடைகளை மூடினார்கள்
காந்தியைக் கலக்க, அவரும் எதிர்உரைத்தார்.
காங்கிரஸ் காரர் சர்க்கார் முறைசெய்யப்
பதவி ஏற்றுப் பயன்காண முன்வந்தார்
நாற்பத்தி ரண்டு ஆகஸ்டு எட்டாம்நாள்
"இந்தியா வைவிட்டெழுக" என்னும் ஒழிப்பியக்கம்
முளைத்து வளர்ந்து மும்முரமாய்ப் பழுத்ததுவே.
காங்கிரஸில் சேராது காந்தி தனித்திருந்து
அயலாட்சி ஒழிய, ஐக்கியம் மிகப்பெருக,
தீண்டாமை ஒழிய, கைராட்டுத் துணிபெருக
ஏற்ற வகைகளிலே இனிதாய்ப் பாடுபட்டார்.
இருபத் திரண்டு இரண்டுநாற் பத்துநான்கில்
அருமைப் பாரி கஸ்தூரி பாய்தேவி
இவ்வுலகை நீத்தார் காந்தி இரங்கிநின்றார்
ஆகாகான் மாளிகையில் சடங்கு ஆற்றிநின்றார்.
நாற்பத் தாறுவரை நல்லமுறை ஏற்படுத்த
இந்து முஸ்லிம்கள் ஒற்றுமை இனிதுறைய
வேவல் துரைமகனார் வெவ்வேறு வகைசெய்தார்.
நாற்பத் தாறு டிஸம்பர் ஒன்பதினில்
இந்துக்க ளோடு இஸ்லாமியர் சேரல்
ஒவ்வாத தென்று உரைத்துத் தனித்தார்கள்
டில்லியில் இந்தப் பொல்லாப்பு நேர்ந்ததுவே!
நாற்பத் தேழு ஜனவரியில் நல்லருண
அட்லி துரைமகனார் ஆங்கில ஆட்சிமக்கள்
இந்தியாவை விட்டு வெளியேற வேண்டுமென்று
தீர்மானம் ஒன்று தெரிவித்தார் யாவருக்கும்
ஏப்பிரல் மாதம் ஏற்றமுள்ள மாண்பேட்டன்
வைசிரா யாக வந்தார் டில்லிநகர்
இந்திய ரத்தம் ஓடும் இவர்உடலில்
என்றே காந்தி இவரை மிகப்புகழ்ந்தார்.
ஜூன் மாதம் மூன்றாம்நாள் சின்னப் பெருமகற்கா
இந்தியா இரண்டு துண்டான நாளாகும்.
துண்டாகா திருக்கக் காந்தி சொன்னஎல்லாம்
வீணாக; பாக்கிஸ்தான் இந்துஸ்தான் எனும்பேரால்

சின்னு பின்னமாகச் சின்னுவால் ஆகியது.
ஆகஸ்டு பதினைந்தில் சுதந்தர அரசென்று
மனப்பூர்வ மாக மாண்பேட்டன் அறிவித்தார்.
அந்நாளில் மிக்க ஆர வாரமாக
மாண்பேட்டன் டிலெலியிலும் கைகோமான் சென்னையிலும்
மூவண்ணக் கொடியேற்றி மகிழ்வித்தார் அம்மானே
காந்தியைப் போற்றிக் கதர்ஆடை உடுத்தார்கள்
தீபா வளியெனத் தெருவெலாம் அலங்கரித்தார்
கடைகள் தொழிற்சாலை மூடிக் களித்தார்கள்
பள்ளிச் சிறுவர் பாடி ஆர்ப்பரித்தார்
ஆடினுர் பாடினுர் ஆர்ப்பாட்டம் மிகச்செய்தார்
உண்டார் களித்தார் இல்லார்க்கு உதவிசெய்தார்
காந்தி வாழ்க! கரம்சந் திரர் வாழ்க!
மோஹன தாஸ்வாழ்க! காந்தி மஹான்வாழ்க!
தாய்நாடு வாழ்க! தமிழ்நாடு வாழ்க!
என்ற பல்லவிகள் எங்கும் படித்தார்கள்
தெருவெல்லாம் ஜோதி, தெருவெல்லாம் பெருநீதி. [கள்
தெருவெல்லாம் இன்னிசை, தெருவெல்லாம் தோரணங்
தெருவெல்லாம் பந்தல் திண்ணைகளில் பிரசங்கம்
வீடெல்லாம் விருந்து வெளிஎல்லாம் வெற்றிஒலி
மஹாத்மா வைப்பாடி மக்கள் மகிழ்ந்தார்கள்
சிறுவர் சிறுமியர்க்குத் தின்பண்டம் அளித்தார்கள்
சங்கங்கள் கூடிச் சொற்பெருக்குச் செய்தார்கள்
காந்தி தனித்து கதர்நூற்றுப் பணிபுரிந்தார்
எடுத்த வினையை இனிது முடித்து நின்ருர்.
தீண்டாமை ஒழிய, சமயஒற் றுமைபிறக்க,
பிரார்த்தனைக் கூட்டம் என்னும் பெரும்பெயரால்
போதித்து வந்தார் புத்தர் ஏசுபோன்று.
நாற்பத்து எட்டு ஜனவரி பதின்மூன்றில் ;
கல்கத்தா நகரக் கொடுமை காரணமாய்
பீஹார் மக்கள் நெறிபிறழ நடக்கின்ருர்
பரிகார மாகப் பட்டினி யானிருப்பேன்
என்றே ஐந் துநாள் உபவாசம் ஆற்றிநின்ருர்.
எங்கெங்கு சென்ருலும் எங்கெங் கிருந்தாலும்

சமய வேற்றுமைகள் சாதி வேற்றுமைகள்
ஒழியும் வகைக்கு உபதேசம் செய்துவந்தார்
நவகாளி சென்று நல்லறம் நாட்டி நின்றார்
வைதீக நன்மைகளை லௌகிக முறையோடு
பொருத்தி, யாரும் போற்றி ஓம்புமாறு
கனிந்த முதுமையினில் காந்தி தொண்டுசெய்தார்.
பாட்டாளி மக்கள் பாடு தீர்வதற்கு
உழைக்கும் மக்கள் உறுபயனை அடைவதற்கு
நாட்டுத் தொழிலாளர் நாகரிகம் பெறுவதற்கு
விவசாய உழவர் ஆட்சிமுறை செய்வதற்கு
வழிகோலிக் காந்தி விளம்பிவந்தார் அம்மானை.

இசைப் பா

கரம்சந்திர மோகனதாஸ் காந்தி—அவரைக்
கண்டால் ஆகும்மனச் சாந்தி
பரம்பொருள் உருஇது என்றே—மக்கள்
பார்த்துக் களித்துநிற்பார் சூழ்ந்தே.

உலகிற் பெரியதிரு மனிதர்—அவர்
உள்ளத்தில் மாசுஇல்லாப் புனிதர்.
பலமும் படையும் கண்டு அஞ்சார்—அவர்
பட்டினி கிடந்துபல வென்றார்.

ஹரிஜனம் என்னும்பேர் அமைத்து—அவர்
ஆலயத்துள் யாவரையும் நுழைத்தார்.
வெறிதரு சமயத்தை ஒழித்து—அவர்
வேறொரு பு[illegible] உல களித்தார்.

சுத்தக் கதராடை உடுத்து—கைத்
தொழில் செய்து பிழைக்கவே படித்து
சத்தியமே மார்க்கமாய் எடுத்தார்—அவர்
ஜாதிக் கட்டுகளை விடுத்தார்.

மூவண்ணக் கொடிஎங்கும் பறக்க—தீய
மூர்க்க மதுவரக்கன் இறக்க
நிரந்தர வெள்ளையாட்சி ஒழித்து—அவர்
சுதந்தர ஆட்சிதமக் களித்தார்.

நீப்புக் காண்டம்

(விருத்தம்)

காப்பு பால காண்டமெனக் காந்தியடிகள் வரலாற்றை
ஆப்பிரிக்கா இந்தியாவில் அமைத்தயாவும் கூறியுள்ளோம்
மீப்பு கழ்கொண் டையன்பேர் மஹாத்மா வாக; இவ்வையம்
நீப்புப் பெற்ற முறைசொல்வோம் மௌனம் கொண்டே நீ கேளும்
ஆயிரத்துத் தொள்ளா யிரத்துநாற் பத்தெட்டாம்
ஆண்டில் ஜனவரியில் முப்பதாம் நாளான
வெள்ளிக் கிழமை வீழ்கதிரின் மாலையிலே
ஐந்து மணிக்கு ஆர்வம் மிகுந்தவராய்
ஐந்நூறு பேர்மக்கள் ஆணும் பெண்களுமாய்
ஐயன் வாய்மொழியைக் கேட்டு அகமகிழ
பிர்லா மாளிகைமுன் பெருவெளியி லேகூடி
எதிர்நோக்கி இருக்கின்றார் எம்பெருமான் வரவுக்க
தூய்மை நேர்மை துணிவன்றிப் பயமறியா,
மாயப்புன் சிரிப்பு மலரும் திருமுகத்தர்
வெள்ளை உடையர் விரிந்த நன்மார்பர்
எல்லார் மனத்துள்ளும் இருப்பிடம் பெற்றபிரான்
காந்தி மஹாத்மா கடுகி வருகின்றார்
பட்டே லுடன்பேசிப் பிந்திய காரணத்தால்
விரைந்து வருகின்றார் வீர மகாத்மாவும்,
பேர்த்தி முறையாகத் துணைசெய்யும் பேறுற்ற
ஆவா, மனுக்காந்தி இருவர் உடன்தொடர
வழிநடந்து வருகின்றார் வள்ளல் பிரார்த்தனைக்கு
மன்னர்க்கு மன்னவராய், மற்றவர்க்குப் பெற்றவராய்
முடியின்றித் தடியின்றி உலகம் முழுதாளும்
மதிப்பீடு இல்லா மகாத்துமா வருகின்றார்.
'எம்பெருமான் வருகின்றார், எல்லாரும் வழிவிடுங்கள்'
என்று மொழியாமல்; எல்லாரும் கற்றறிந்த
பெரியோர் களைப்போலப் பேசாமல் தாமாக
இருமருங்கும் விலகி வழிவிட்டார் ஏந்தலுக்கு
இடையே இமான்போல் எம்பெருமான் வழிநடந்தார்
இன்னும் பதினைந்து கஜதூரம் இருக்கிறது.

மன்னன் வழிநடக்க: மாற்றான் ஒருவனங்கு
சிப்பாய் போல்உடையன், திரண்ட மல்புயத்தான்
'தொழுத கையுள்ளும் படைஒடுங்கும்' என்றுமுன்னாள்
வள்ளுவன் சொன்ன வாய்மைக்கு ஒருசான்றாய்
முன்னாக வந்துநின்று சற்றே முடிசாய்த்து
அஞ்சலி செய்தான்; அடிகளும் பதில்புரிந்தார்
"பெரியீரே, இன்றைப் பிரார்த்தனைக்குப் பிந்தினீர்கள்"
என்றுரைத்தான். அடிகள் "ஆம்" என்று பதிலுரைத்
யாரும் எதிர்பாரா முறையில் இந்நேரம் [தார்.
டப்டப் டப்டப் என்றே நால்வேட்டு
கேட்டுக் கூட்டம் கலக்க முற்றதுவே.
ஐயகோ! காந்தி அயர்ந்து சாய்கின்றார்
பொன்னிற மார்பில் செந்நிறத் தாரையாக
குருதி வெளிவந்து துணியைக் கரைப்படுத்த
அஞ்சலி செய்து 'அரேராம்' எனமொழிந்து
சாயும் பாட்டனாரைத் தாங்கினர் பேர்த்திமார்கள்.
ஒருசிலர் கூடி உடனே பெருமகனை
திருந்தப் பிடித்தெடுத்துச் சென்றார் பெருமனைக்கு
பிர்லா மாளிகைக்குள் போனதும் பொதுமக்கள்
உள்ளே குவியாமல் ஒழுங்கு செய்தார் அம்மானை!
தொண்டு கிழவரிவர் பெண்கள் துணையாகக்
கையில் யாதுமின்றித் தெய்வ வழிபாடு
செய்ய வருநெறியில் மெய்யூன் யார்பத்தில்
படித்த ஒருசயவன் வாலிபப் பருவத்தான்
சிப்பாய் உருவுடனே துப்பாக்கி யைமறைத்துச்
சுட்டால் இதன் கொடுமை என்சொல்ல அம்மானை;
வஞ்சனைச் சூழ்ந்தார், வீழ்ந்தஅத் துப்பாக்கி
தன்னை எடுத்தார்; அவனையும் கைப்பிணித்தார்
'யாவன் அவன்?' என்று இங்கேட் டறிந்தார்கள்
பூனா நகரத்தான், பிராமணப் பெருங்குலத்தான்
இந்து சமயத்தான் கல்விஏற் றங்கொண்டான்
மராட்டி மொழிக்குரியான், மதத்திற் பெருவெறியான்
'இந்து ராஷ்டிரா' என்னும்பத் திரத்தொழிலான்
பற்பல வினைக்கூடப் பங்கு உரிமையுள்ளான்

நிந்தனைக் குள்ளான் நச்சுத் தீஉளத்தான்
நாதுராம் விநாயக் கோட்ஸே நாமத்தான்
இந்தப் பெயரை இனியாரும் பூணாத
பெருவினை செய்ய, பற்றினன் ரகுநாதன்.
பின்னர் பலர்பற்றிப் பிடித்துக் கொதித்தவராய்
அப்பால் சென்றார்கள். ஐயன் இறந்தசெய்தி
இடிமுழக்கம் போல எங்கும் ஒருநொடியில்
பறந்து பரவியதால் பாரிலுள்ள மக்களெல்லாம்
பிர்லா மாளிகைமுன் பாய்ந்துவந்து கூடினார்கள்
'சுடப்பட்டார்' என்ற சொல்கேட்டு உள்துடித்து
நேரே ஜவஹர்லால் நேரு விரைந்துவந்தார்
கலங்காத சித்தம் கலங்கிக்கண் நீர்ததும்பி
உள்ளம் கொதித்து உரைகள் குழறுபட்டார்
ஆயினும் எல்லாம் ஆற்றும் கடன்பூண்ட
வீர சுதனாக முனைந்து வினைபுரிந்தார்
வைத்திய முறைகள் வேண்டியஎல் லாம்செய்தார்
ஐந்துஐந்து மணிக்கு ஐயன் மார்புற்ற
புண்ணோடு மனையுள் புகுந்தார். புறத்துள்ள
மக்களெல்லாம் காண மனம்மருகி நின்றார்கள்.
அடிகளைத் தரிசிக்கும் ஆசைக் களவின்றி,
கடல்போல் பரவிக் கலங்கிக்கண் நீர்வடித்து
நிற்கும் மக்களுக்கு ஏழைந்தாம் நிமிஷத்தில்
'இன்னும் மஹாத்மா இருக்கிறார் உயிரோடு'
என்றே சமன்லால் இரக்கமாய்ச் சொல்லிநின்றார்.
அடுத்த ஐந்து நிமிஷத்தில் மற்றொருவர்
வாடிவெளிவந்தார்; வார்த்தை குழறிற்று.
"பாபு காலமாகி விட்டார்" எனப்பகர்ந்தார்
அந்த மொழிகேட்டு ஐயகோ என்றார்கள்
இருந்தவர்கள் எல்லாரும் ஏங்கி அழுதார்கள்
வாயில் துணிவைத்து விம்மி நைந்தார்கள்
பாபு மறைந்தார் என்றுள்ளம் பதைத்தார்கள்
ஆண்கள்பல் லாயிரமும் அழுதுநின் றாரென்றால்
பெண்களைப் பற்றிப் பேசவோ அம்மானை!
எங்கும் பெருந்துக்கம், எங்கும் பேரேக்கம்

எங்கும் பெருங்கவலை, எங்கும் காரிருளே.
பொங்கும் பெருவெப்பம், புத்தி அயல்அகலும்.
'ஆண்டு நூறும் அப்பால்ஓர் கால்நூறும்
வாழ்வேன்' என்றவரை வீழவைத்த தீவினையை
எண்ணி ஏங்கி இடர்ப்படுங் கும்பலுக்கு,
எரிந்த வீடுபோல் இருக்கின்ற மக்களுக்கு,
காந்தியைக் காணக் கருத்தெழுந்த ஊக்கத்தால்
உள்ளே நுழைய உறுதிகொண்ட குழுவுக்கு
தேறுதல் சொல்லி, நடப்பைத் தெரிவித்தல்
தம்கடமை யாகும் என்று தெரிந்தவராய்
வீர ஜவஹரிலால் வெளிவந்தார் வாயில்முன்
படிமேல் நின்று பார்த்தார் பரபரப்பை,
ஒன்று இவர்களுக்கு உரைப்போம் என உன்னிப்
பேச நாஎடுத்தார்; பிறழும் நேர்உருது.
ஆயினும் சித்த வன்மையால் துயரைஅடக்கி
"மஹாத்மா மறைந்தார் மக்கட் பண்பில்லா
வெறியன் ஒருவன் சுட்டு வீழ்த்திவிட்டான்
நெருக்கடி யான நேரம்இது ஆனாலும்
நிதானத்தை நீவிர் இழவீர்" எனமொழிந்தார்
தாமும் நிதானித்துத் தந்நாவைப் பலப்படுத்தி
முன்நிற்கும் மக்கள் முகவாட் டங்கண்டு
பின்நடப்பு யாது என்றே பேசலானார் :—
"நாளைக் காலை நண்பகல் பதினொன்றும்
மணிக்கு மஹாத்மா திருவுடல் மாநகரின்
வீதி வழியாக வரும்,அந்த வேளையிலே
எல்லாரும் கண்டு தரிசிக்க ஏற்பாடு
செய்வோம் : இப்போது சற்றே அமைதியுடன்
செல்வீர், அதுநீர் செய்யும் பேருதவி"
என்றே வேண்டி ஏகினார் அம்மானை!
ரேடியோ நிலயச் செய்தி வெளியிட்டார்
"முக்கிய செய்திஒன்று இப்போது கேட்பீர்கள்"
என்றே சொல்லி, ஈரிரண்டு முறைவிளங்க
ஆங்கிலத்தில் செய்தி அறிவித்தார்; அதன்பின்பு
இந்துஸ் தானியிலும் ஈரிரண்டு முறைசொன்னார்.

"காந்தி இறந்தார்" என்றுசொல்லி ஆங்கமர்ந்தே,
வீரன் மனம்மகிழும் வைணவ ஜனதோதே
கீதம் பாடிக் கடமை இதுவென்றே
இராம பஜனை எல்லாரும் செய்தார்கள்.
மன்னர் மறைந்தார் எனக்கேட்ட மாத்திரையே,
பொன்னில் மணிபோல் பொருந்தி வாழ்ந்துள்ள
மவுண்பேட்டன் மிக்க மனந்தளர்ந்து வந்தார்காண்!
ஆருத் துயரை அடக்கி அருகமர்ந்தார்
உடன்பிறந் தவரைப்போல் உருகி உள்இழந்தார்.
எல்லாம் இழந்தவர்போல் ஏங்கினர் அரமானே!
"இறந்தார்" என்றுசொல்லி இந்திய ரேடியோதான்
தன்னை மறந்து நாவும் தழுதழுத்து
ஒன்றும் உரைராது, ஊர்நடப்புச் சொல்லாது
கத்திக் கத்திக் கதறி அழுததுவே.
காந்தி மகான்குறித்துக் கதறி அழுததுவே!
காந்தி மறைந்தார் என்றகூக் குரல்கேட்டு
இந்த உலகும் இருளுலகும் ஒளிஉலகும்
எல்லா உலகும் ஏங்கித் திகைத்த என்றால்,
பெற்று வளர்த்தநாடு பெருமை உணரும்நாடு
அற்புதனை மகாத்துமா வென்றழைத்த பெருநாடு
என்ன சொன்னாலும் ஏற்றுப் பணிந்தநாடு
உண்மைக் குயர்வுதந்து ஒளிரும் திருநாடு
இந்திய நாட்டார் துன்பத்தை என்சொல்ல!
ஆறு மணிக்கெல்லாம் அகிலலோ கம்எங்கும்
காந்தி மறைந்தார் என்ற கடுஞ்செய்தி
எட்டிற்று; எங்கும் இருட்படலம் மூண்டதுவே
இறந்தார் என்ற இச்செய்தி கேட்டமக்கள்
நம்பாது மெல்ல நகர்ந்து அப்பல்நடந்து
உண்மை அறிய ஒதுங்குவார். ஒவ்வொருவர்
பின்னும் சொல்லிப் பேதுற்று நின்றாலும்
இன்னும் நம்பாது இதனுண்மை நன்கறிய
ரேடியோ உள்ளஇடம் நாடி வந்தார்கள்.
ஐயோ! ரேடியோ அறிவித் தழுததுவே!
"காந்தி மறைந்தார்" என்னும் ஒன்றன்றி

வேறு சொல்இன்றி வீழ்ந்து புலம்பியழும்
செய்தி கேட்டதுமே சிந்தை கொதித்தார்கள்
என்ன செய்வதென்று யாதும் அறியார்கள்.
எதிர்த்தாரைப் பார்த்து ஏங்கி நின்றார்கள்.
கண்ணீர் விட்டார்கள், கைத்துணியால் துடைத்தார்கள்
மக்களை மனைவியை இழந்தார்போல் மருகினார்கள்
கரன்சந்திர மோகனதாஸ் காந்தி இறந்ததுக்கம்
ஒருவரை ஒருவர் பார்த்து உளம்உருகி
நிற்பார்; நாவால் யாதும் நவிலகில்லார்
எங்கும் ஏக்கம், எங்கும் உயிர் நீக்கம்,
உலகம் ஒடுங்கிற்று, ஓரிரா ஒருபகலே,
நாட்டுப் புறங்களிலும் நகரப் புறங்களிலும்
காட்டுப் புறங்களிலும் கடல்கடந்தும் விண்மீதும்
கேட்டார் அன்றிரவே சிலியடித்து நலிவுற்றார்
உண்ணார் உறங்கார் உறவாடார் நடமாடார்.
எண்ணா தனஎண்ணி இருந்திருந்து ஏங்குகிறார்
கண்ணீர் அவர்கொண்ட கவலையை விள்ளுமன்றி
எண்ணத்தைச் சொல்லும் ஆற்றல் இழந்தார்கள்
சோர்ந்தார் அயர்ந்தார் துக்கத்தால் சாய்ந்தார்கள்
மக்கள் மனமெல்லாம் குடிகொண்ட பெருமனிதர்
மன்னாதி மன்னர் முடிசூடாப் பெருவேந்தர்
பொக்கைத் திருவாயர் பொய்யறியாத் திருஉருவர்
கண்டோர் மகிழும் கனிந்தமுகப் பெருங்கிழவர்
ஆடை தூயர், அங்கம் மிகத்தூயர்
கையாட்டி மிக்க கட்டுசெட்டாய்ப் பேசுபவர்
சொன்னால் சொன்னபடி செய்து முடிக்கிறவர்
ஆகஸ்டு பதினைந்தில் அடிமைவாழ் வகற்றியவர்
பெம்மான் மறைந்தார் என்றபே ரொலிகேட்டு
இம்மா நிலத்துள்ள யாவும் மெய்ம்மறந்த.
கைவண்டி நின்ற, கால்வண்டி கள்நின்ற
மோட்டார்ப் போக்குவண்டி முன்னே நிலைநின்ற.
தெருவோடு ராம்வண்டி திரியாது நிலைநின்ற.
ஓடும் ரயில்வண்டி ஊதாது ஓய்வுற்ற.
சின்னஞ் சிறுவர்களும் சிரியாது சோர்வுற்றார்

பின்னைப் பெரியோர்கள் தமைப்பற்றிப் பேசுவதேன்:
காக்கை குருவிகளும் கூட்டில் அடங்கினவே
கால்நடை உண்ணுமல் கட்டுத் தறிசேர்ந்த
வீதி விழிப்பதில்லை வேலை நடப்பதில்லை
கடைகள் கதவடைப்பு, கருமக்கூ டம்அடைப்பு
ஊணகம் அடைப்பு, உத்யாவனம் சோர்வு
விளையாட் டிடங்கள் வெற்றிடமாய் ஒரு சிதைவு
துக்க முகத்தினரின் நடமாட்டம் சிறிதன்றி
ஒக்கக் கலங்கி ஒதுங்கினர் நகர்மக்கள்
கொடிகள் கருத்தனவே கொடுமை கேள்வியுற்று
மூவண்ணக் கொடியும் முகங்குப் புறவீழ்ந்து
தாழ்வில் கிடந்ததுவே: தாய்போல் ரேடியோவும்
வாய்விட்டுக் கதறி வருத்தம் தெரிவிக்க
எல்லாரும் அயலில் இருந்தார்கள் ஏக்கமுற்று.
ஏந்தல் இறந்தார் என்றமொழி தாம்கேட்டு
இரக்கந் தெரிவித்தார் ஏற்றமுள்ள பெரியோர்கள்.
ஆசியா ஐரோப்பா அமரிக்கா ஆப்பிரிக்கா
ஆஸ்திரே லியாமற்றை அகன்ற இடத்துள்ள
எல்லாப் பெரியோரும் இந்தியத் தலைநகர்க்குச்
செய்தி அனுப்பித் தூக்கத்தைத் தெரிவித்தார்
நியூயார்க் முதலாக நகரத்து ரேடியோக்கள்.
நடப்பு முறை நிறுத்தி நம்செய்தி கூறிநின்ற.
தொண்ணூற் றொருவயது தொண்டுகிழ மானுலும்
என்றும் இளமைக் குதூகலமாய் இருக்கின்ற
சுருக்கம் நுட்பமாய்ச் சொல்லும் திறம்படைத்த
பெரிய படிப்பாளர் பெர்னுட்ஷா எனும் புலவர்
ஒன்று நன்றுரைத்தார், உன்னற் பாலதுவே!
"மிக்க நல்லோர்க்கு அல்லல் மிகப்பலவாம்
என்றறிந்தோம்; மேலாய் யாதொன்றும் இல்லை" என்ருர்
இந்தியாவை ஆண்ட ஏற்றமுறு சீர்மையுள்ள
இங்கிலாந் தரசர் ஆரும் ஜார்ஜ் தம்பதிகள்,
ஆதிக்க முதல்வர் கிளிமாண்டு அட்லிசீமான்,
ஹெர்பட்டு மாரீஸன், பெத்திக்கு லாரன்ஸூ,
ஏமரி, லிஸ்டோவல், தொழிற்கட்சி மார்க்கன்பிலிப்

ஆர்ச்சு பிஷப் கார்னல், அதிகார உளச்சர்ச்சில்
லிபரல் கிளிமண்டு டேவிஸ ஸீமானும்,
நிதிமந் திரியான சிட்டாபோ டுகிரிப்சு,
அயல்நாட்டுப் பெவின்,மற்று அரசாங்க சபைஅடிசன்,
பழமை லின்லித்கோ, பென்னர் பிராக்வேயும்
அமரிக்க ரூமன் அயர்லாந்து டீவால்ரா
பிரஞ்சுச் சூமன்.வெளியமைச்சு ஜார்ஜ்பிடால்,
இத்தாலி தேயக் கவுன்னட் கால் இஸ்போர்ஜா,
எகிப்து நெக்ராவி, ஆப்ரிக்கா சுமட்ஸ் அதிபன்,
டென்மார்க்குப் போமைச்சு ஹான்சு கெட்டாப்பு
இன்னும் பலபெரியார் இரக்கந் தெரிவித்தார்
மற்றையோர் எல்லாம் மயங்கி இருந்தார்கள்
கண்ணீர் வடிப்பாரும் கையால் துடைப்பாரும்
உள்ளம் நைவாரும் ஓய்ந்து கிடப்பாரும்
கொடியை இறக்குவார், கூட்டம் கலைப்பார்கள்
சுவரில் கொடுமையை எழுதித் திரிவார்கள்
இந்த விதமாக எல்லாத் தேயத்தும்
அந்திப் பொழுது அழுந்தியது அம்மானை !
மக்கள் எல்லாரும் துக்கத்துள் ஆழ்ந்தார்கள்.
அந்நிய தேசமெல்லாம் அழுது புலம்புமெனின்
டில்லிநகர் பற்றிச் சொல்லவோ அம்மானை !
அழவும் சக்தியற்று அடங்கிற்று அம்மானை !
இனநலங் கருதி நாட்டை இரண்டாக்கி
வினைநலம் ஆற்றி வேண்டா தனகண்டு
இணங்காத ஜின்னாவும் இரங்கிநின்றார் அம்மானை.
பிர்லா மாளிகையின் பெருவாயில் கதவடைத்து
உள்ளே எவரும் நுழையா ஒழுங்காற்றி
அல்லற் பட்டு அழுதார்கள் உறவினர்கள்
இனத்தார் மொத்தம் இருபது பேர்இருக்கும்.
நெய்விளக்கு ஏற்றி நெஞ்சு நைந்துருகி
அண்ணல் காந்திக்கு அதிகப் பிரியமான
இராமநா மம்பாடி இரங்கி யிருந்தார்கள்
பன்னி ரண்டுமணி அடித்ததன் பின்னாக
புண்ணிய நதியாகப் போற்றப் படும்யமுனை

புனித நன்னீரால் பெருமானை குளிப்பாட்டி
மலர்மாலை சார்த்தி மனங்குளிர அலங்கரித்து
ஒப்பனைகள் யாவும் ஒழுங்காகச் செய்தமைத்து
பாடி அழுதார்கள் பக்தியில் ஆழ்ந்தார்கள்
விடிந்து நடாத்தும் வினைபற்றி ஒருகூட்டம்
ஆய்ந்து ஒருமுறைமை அமைந்தார் தெளிவாக:
பதினொரு மணிப்பகல் பிர்லாமா ளிகைவிட்டு
புறப்படும், பின்னர் இன்னன்ன வழிபோகும்,
இராணுவம் கப்பல் விமானப் படைவீரர்
முத்திறத் தாரும் மற்றும் பெரியோரும்
பாடை வண் டியிழுத்துப் பக்கத்தே செல்வார்கள்.
இனத்தார்கள் நேரு இந்திய மந்திரிகள்
தொடர்ந்து நடந்து தோன்றுவார் சுடுகாட்டில்.
ஞானநெறி உணரும் மான மௌண்பேட்டன்
மாளிகை யில்இருப்பார். மகான்உடல் சென்றடையும்
கோட்டம் வருவார் என்று குறித்தார்கள்
ஆரவா ரத்தை அறவே ஒழித்துநின்று
மக்கள் கூட்டம் மௌனமாய் மரியாதை
செய்யவேண் டும்பின்னர் ஞாபகச் சின்னம்ஒன்று
எரித்த இடத்தில் எழுப்பவேண் டும்என்று
தீர்மானித் தார்கள் தெரிவித்தார் மக்களுக்கு
தலைமைப் புதல்வன் தனைப்பிரிந்த துக்கத்தால்
பாரத மாதா பைத்தியம் பிடித்தவளாய்
வெறித்தவளாய் நின்றுள் விளம்பாள் யாதொன்றும்
முகமும் கருத்தாள் மூளை கொதித்தவளாய்
அகமும் உலர்ந்தாள் ஆகாரம் உட்கொள்ளாள்
சிந்தித் திருந்தாள் செயலாற்றுள் கீழ்வீழ்ந்தாள்
அந்திப் பொழுது இவ்வாறு அழிந்ததுவே.
சென்னை வாசி சிறந்தசெந் தமிழ்ப்புலவர்
காயா மொழிதந்த கவிஞர் ஆதித்தர்
அழுது நினைந்தேங்கி அல்லற் படும்பொழுது
எழுந்த பெருநினைப்பை எழுத எண்ணமுற்று
கைவிளக்கை ஏற்றிக் கண்ணீர் வடித்தவராய்
உன்னித் திருத்தாமல் உள்ளம் சென்றபடி

காந்தியடிகளுக்குக் கையறு நிலைபாடி
முடித்தார் தாம்கொண்ட கவலை முனைதேய்த்தார்
படித்தார் மறுநாள் பத்திரிகைக் கனுப்பிவைத்தார்
செந்தமிழ் விருத்தம் பதினாறு காந்திக்கு
வருந்தி எழுதியதை வரைகின்றேன் அம்மானை.

காந்தியடிகள் கையறு நிலை

1

ஒருஉயிர்க்கும் ஒருநாளும் ஒருவூறும்
புரிந்தறியா ஒருவன் என்றே
பெருவுலகம் பாராட்டும் பெம்மானே,
பெருங்குணத்தின் உருவே, உந்தன்
சிறுநகைசேர் முகத்தொளியும் செம்மேனிப்
பேரழகும் சிந்தை நிற்க;
பருவுடலை இனிக்காணு வகைநேர்ந்த
திது என்னே! பாவம் ஐயோ!

2

ஒருநூறும் கால்நூறும் உயிர்வாழ்வேன்
என்றுரைத்தீர் : வாழ்வீர் என்றே
கருதியுளம் மகிழ்ந்திருந்தார் தேயத்தார்
கடவுளருள் புரிவார் என்றே.
திருநாடு, பாரதநா டென்னுலகி
லுள்ளபல தேசத் தாரும்
கருதும்அதைக் காத்துநின்ற கர்த்தாவே
கடந்திரோ கதிஎன் னாகும்?

3

அன்னைதந்தை யரைநீத்த அந்நாளும்
அசையாத ஆண்மை கண்ட
வன்மனத்தர் தனித்திருந்து வாய்பேச
நாவின்றி நீர்வ டித்து
என்செய்ய எனஅறியா தேஏங்கி
அழுகின்றார் என்னே பற்று!
பொன் மகுட மில்லாதே உலகுள்ளார்
உள்ளமெல்லாம் புகுந்த கோவே!

4

அன்றுபட்ட மரத்தடிக்க ஏசுபிரான்
பாவியரால் ஆவி நீத்தார்.
இன்றுசுட்டு வீழ்த்திவிட்டான் இழிகுணத்தான்
ஈரிரண்டே வேட்டில், ஐயோ!
என்றும்அவன் பெயர்யூதாஸ் எனநிலைக்க
வகைசெய்தான், எவரும் பூணார்!
நன்றாற்றி உயிர்நீத்தாய், நாயகமே
தெய்வஉடல் நெறியே பூண்டாய்.

5

மலைதேடிப் போகேன்யான் மக்களுக்கு
உழைப்பதற்கே வந்தேன் என்றீர்.
மலையாத உள்ளத்தீர் மகிழ்தவழும்
திருமுகத்தீர் மறைந்தீர் எம்மான்.
புலைஎன்றும் பறைஎன்றும் புறக்கணிக்கப்
பட்டவர்தம் புகலே, புண்யா,
விலைமதிப்பில் செம்பொன்னே, வீந்தீரே
எவ்வாறே வாழ்வோம் யாங்கள்.

6

உழுதுழைக்கும் எளியவனே சர்க்காரை
நடத்துதற்கு உரியன் என்றீர்
பழுதில்லா மொழிகேட்டுப் பலித்ததுநம்
கனவென்று மகிழ்ச்சி கொண்டோம்.
விழிம்புவரைக் கொதித்தெழுந்து நெய்நிற்க
தாழியது விரிந்தாற்போல
அழுந்திமனம் யாம்வாடி அழுதாற்ற
அடிகாள்நீர் அகன்றீர் ஐயோ!

7

அன்றேழு நிபந்தனைகள் நீர்வரையக்
கண்டபின்னர் அகிலலோகம்
சந்தேக மில்லைஇவர் ஜகத்திலுள்ள
மக்களிலே தெய்வம் என்ன;
என்றேனும் எண்ணாத எதிர்பாராப்
பெருநோக்கென் றுஸாத் கூற;
நின்றீரே, இன்றேநீர் நிலையாமைக்
கோர் சான்றாய் நீங்க லாமோ

8

என்னுயிரே கடவுள்திருக் கரத்திலிருக்
கிறதென்றே எந்த நாளும்
சொன்னீரே அதன்பொருளும் இதுதானோ
சூக்ஷமத்தில் அறிந்தீ ரோநீர்?
முன்னீரே அறிந்திருட்பீர் ஆனாலும்
நீர் மொழியீர் எதிர்உய்ய.
நன்றேநீர் கொண்டவினை முடித்துஇனி
வருவார்க்கா நகர்ந்தீர் போலும்!

9

காதாபாய் நௌரோஜி திலகர்முதல்
　　தலைவரெல்லாம் உழைத்திட் டாலும்
மாதாவின் அன்புள்ளம் கொண்டதனல்
　　உலகுக்கோர் மஹாத்மா ஆனீர்
சீர்தாம்உம் தூய்மையினல் தம்நாளில்
　　சுதந்திரத்தைப் பெற்றீ ராகிப்,
'போதாதோ இனிவாழ்வு' என எண்ணிச்
　　சென்றாலும், பாதை யீதோ?

10

உலகினுக்கோர் தனிஉருவாய்க் காந்திஎனக்
　　கதிரவன்போல் உயர்ந்து தோன்றி
விலகிவிட்டீர். இருட்படலம் கவிந்துலகம்
　　விண்முறையில் வீயா வாறு
கலைகூறும் நன்மேதாய், கதர்த்துணியின்
　　மஹரிஷியே. காலன்கொண்டான்:
உலேகின்ற உள்ளத்தேம் உண்மைநெறி
　　யார்சொல்ல இனியாம் கேட்பேம்

11

கீதையுடன் குரான்வாசி, கிறிஸ்தவவே
　　தம்வாசி, கடவுட் கான
நீதிநெறி சொல்லுகின்ற மார்க்கநூல்
　　ஒவ்வொன்றும் நிறைய வாசி
ஆதிபரம் பொருள்ஒன்றே அவரவர்கள்
　　நோக்கத்தால் பேர்றா றென்றே
பேதமிலா நெஞ்சத்தால் பிணக்கறுத்து
　　வாழ்முறைக்குப் பாதை தந்தீர்

12

உப்பெடுக்க, நாட்டெடுக்க, ஒழுங்கற்ற
அரசியலை உடைக்க, காந்தி
செப்பியவா றெல்லாமே செய்வதற்கு
மக்களென்றும் துணிந்து நின்றார்.
அப்பழுக்கு இல்லாத சுத்தமனப்
பெருஞ்சாது அகன்றார் என்றால்
எப்படிஇந் நாட்டாட்சி? எவர்தலைவர்?
எவர்தொண்டர்? ஏதோ அம்மா.

13

எனக்கினிய புத்திரனு மிருக்கின்றார்
நேருஎன்றீர் அவர்தாம் உற்ற
மனக்கவலை தீர்ப்பார்யார்? ஆசாத்தும்
பிரசாத்தும் அழுவார் அன்றோ?
தனக்குநிகர் இல்லாத தனிப்பொருளே
தனித்தனையே, தயக்க முற்றோம்.
உனக்குப்பே ரோய்வுஇதோ? உன்னுடைய
இருபதும்சிற் றோய்வே யாமோ!

14

இல்லாத எளியவர்போல் யான்வாழ்வேன்
எனக்கூறி எடுப்பு நீக்கிச்
சொல்லாலும் மெய்யாலும் உலகுக்கே
தொண்டாற்றி ஒளி பரப்பி;
எல்லாரும் செல்லுகின்ற யமுனைவின்
கரையோரம் நீரும் சென்றால்
நல்லார்க்கும் வழியிதுவோ எனஎண்ணி
எம்நெஞ்சம் நையு தையோ!

15

ஒருசொல்லால் நாட்டிலுள்ள பற்பலரும்
ஆலயத்தில் உரிமை பெற்ருேர்
ஒருசொல்லால் இந்துமுஸ்லீம் மக்களெல்லாம்
பிணக்கறுத்து ஒன்று பட்டார்
ஒருசொல்லால் ஒத்துழையா அறப்போரால்
நாட்டினுக்கு உரிமை பெற்றீர்
ஒருசொல்லும் சொல்லாமல் தாஸ், போஸ், கஸ்
தூரியன்னை உறவுற் றீரே!

16

இருந்தநா ளெல்லாம்நீர் யாவரினும்
மிக்காராய் ஏற்றமுற்றீர்
இறந்தநாள் இஃதேநீர் இருந்தநா
ளாயுலகில் இருக்க வைத்தீர்.
மறைந்தீரே ஆனாலும், மறையாத
வானுலகின் மாண்பு காட்டிச்
சிறந்தீர்நீர் இந்தியர்தம் பெருமுதலும்
அணிகலமும் யாவும் நீரே!

நேரு இரவில் ரேடியோ மூலமாக
ஆக வேண்டியதை அறிவித்தார் மக்களுக்கு
"பெரிய சீரழிவு பெற்ருேம், இனியேனும்
பகைமை பிரிவுகளைப் போக்கி ஒன்ருவோம்.
நமக்கும் நாட்டுக்கும் என்றும் நற்பிதாவா
யிருந்த பெரியார் இறந்தார்; என்செய்வோம்!
ஆறுதல் சொல்ல, அமைதி வழிகாட்ட
இனியார் உள்ளார்? நமக்கிது பேரிடியாம்!
ஒருவிளக் காக ஒளிதந்து நின்றமகான்
மறைந்தார் ஆனாலும் அவ்வொளி நமக்குவழி;

இக்கையறுநிலை 31-1-48-ல் எல்லாத் தினசரிப் பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பெற்று; 9-2-48-ல் "சுதந்தர நாட்"டில் பிரசுரிக்கப்பெற்றது. 'சுதேசமித்திரன்' மட்டும் கைப்பிரதியை அனுப்பி வைத்தது.

என்றும் வழிகாட்டற் கேற்ற பெரியஒளி,
குற்றம் களைந்து குணமூட்டும் ஜீவஒளி,
சுதந்திரம் பெறவைத்த சூட்சம திவ்யஒளி,
இந்த ஒளிஇன்று ஏனோ விலகியது;
பயித்தியக் காரன் நச்சான பாழ்மனத்தான்
கொன்றான் நம்மை கொந்தளிக்க வைத்துவிட்டான்.
மக்கள் பலர்அன்பால் மகாத்மா திருவுடலைச்
சின்னாள், சேமிக்கச் செப்புகின்றார், ஆனாலும்
‘ ஆகா தது’வென்று அடிகள்முன் சொல்லியதால்
பதினொரு மணிக்கு நாளைப் பகற்போதில்
இங்கிருந்து கிளம்பி யமுனைக் கரையோரம்
மாலை நான்கு மணிக்கு வந்தடையும்.
வழியும் இடமும் ரேடியோ வாயிலாக
பத்திரிகை வாயிலாப் பகருவோம் : பக்தர்குழாம்
மாளிகைக்கு வரவேண்டா ! மகாத்மா செலும்வழியில்
பாதை ஓரங்களில் நின்றுநீர் பணிந்திடுவீர்
வெளியிடத்தி லுள்ளார் உண்ணா விரதமுற்று
நாளைத் தகனம் நடந்தபின் நீர்மூழ்கித்
துக்கம் தெரிவிப்பீர் மிக்க பெரியவர்க்கு
என்று அறிவித்தார் நேரு இளைத்தவராய்.
உத்தம ருடனே யானும் ஒழிவல்என்று
மாலைமிக விரைந்து மறைந்த செங்கதிரோன்
காந்தி திருவுடலைக் கடைசி முறையாகக்
கண்டு தரிசித்துக் கலிதீர்த்துக் கொளஎண்ணி
வந்தான் எனஎண்ண வானம் வெளுத்ததுவே.
அறிவிலாக் காகம் கோழி அஃறிணைகள்
முறைசெய் தனஅன்றி, மக்கள் முறைபேணார்.
உலகம் முழுவதற்கும் காந்தி ஒருவரேபோல்
இராப்பொழு தெல்லாம் இராமநா மம்ஒன்றே.
அஃதன்றி வேறோர் அரவம் கிடையாது.
முப்பதாம் தேதி பெருமானை முடித்ததனால்
பிப்பிர வரிஒன்றே பெருமை அடைந்ததுவே !
உண்மை அன்பு உழைப்பு தூய்மைநலம்
அடக்கம் எளிமை அடியார் திருக்கூட்டம்

எல்லா வகையினிலும் ஏசு கிறிஸ்துவைப்போல்
வாழ்ந்து, வெள்ளியினில் வாழ்வை முடித்துநின்றார்.
"உளதாகும் சாக்காடு" உற்றார் காந்திமகான்.
'இறந்தநாள் அதனைப் பிறந்தநாள் ஆக்கிநிற்பார்
காந்தி யடிகள்' எனக் கவியரசு பெருந்தாகூர்
சொற்பொருளை மக்கள் சொல்லாமல் உணர்ந்தார்கள்
அற்புதனை எண்ணி அழுதழுது நைந்தார்கள்
திட்டிஞேரும்நெஞ்சு முட்டிஅழு தார்என்றால்
மற்றோரை என்சொல்ல! மகானின் பெருமைஅது
'புரந்தார்கண் நீர்மல்கச் சாகும் சாக்காடு
இரந்தும் கொளத்தக்க தென்ற குறட்பொருளை
அறிந்தார்கள் மக்கள் அழுகின்ற உள்ளத்தால்.
புரியாத பெரும்பொருளைப் பொன்றிப் புரியவைத்தார்;
இருந்து போதித்தார் இறந்தும் போதித்தார்.
இராப்பொழு தெல்லாம் ஏங்கி அயர்ந்தார்கள்
விடிந்ததோ இல்லையோ விழித்தார்கள் மக்கள்எல்லாம்
உறங்கா திருந்தாரும் விரைந்து வெளிவந்தார்
காந்தி திருவுடலைக் காணும் அவாப்பெருக்கால்
எல்லாரும் ஒருதிசையை நோக்கி வழிநடந்தார்.
பாரத மாதா பயந்த புத்திரர்கள்
நாற்பது கோடி ஒன்றாய்க் கூடியதாய்
பிர்லா மாளிகைமுன் பெருங்கும்பல் ஆனதுவே.
பசியை அறியார்கள் பகலவனை அறியார்கள்
வருத்தம் அறியார்கள் நெருக்கம் அறியார்கள்
நோவை அறியார்கள் நேரம் அறியார்கள்
காந்தியைக் காணும் கருத்தொன்றே கொண்டார்கள்.
எல்லாரும் அங்கே ஏக்குற் றிருக்கின்றார்.
முப்பத் தொன்றாம்நாள் முகிழ்ந்தது ஆறடித்து
ஏழும், எட்டும், ஒன்பதும், பத்தாக
பற்று உளத்தாரும் பற்றிப் பதைத்தார்கள்
உடலை எடுக்குமுன் உள் நடக்கும் சடங்குகளை
இனிது முடிக்க ஏற்பாடு ஆனதுவே!
பற்பல தேயத்து ஸ்தானிகப் பெரியாரும்
தத்தம் மரியாதை செலுத்தித் தலைதாழ்ந்து

பூச்செண் டடிவைத்துப் போற்றி அகன்றார்கள்
பூத்த மலர்ச்செண்டு நூற்றுக்கு மேலாகும்
பொங்கி எழுந்தூபம் எங்கும் பரிமளிக்கும்
மாதர் ஒருபுறத்தில் ராமநா மம்பாட
மற்ற ஒருபுறத்தில் சங்கநா தம்முழங்க
வேதனை தாங்காமல் வாய்விட்டுச் சிலர்அரற்ற
வருந்தி ஒதுங்கி வாளாச் சிலர்இருக்க ;
பத்தரை மணிக்குப் பாதை செப்பமுற
அமைக்க இராணுவ வண்டி அகன்றதுவே
ராஜகோபால் ஆச்சாரி, ராஜேந்திர பிரசாத்து
ராஜகுமாரி கௌரி, ராணுவ பலதேவ்ஸிங்
பற்பல பெரியோர் பக்கம் இருந்தார்கள்
பேர்த்திமார் இருவருடன், மௌண்பேட் டன்துரையும்
கையில் கருப்பணிந்து கவலை முகத்தினராய்
வணக்கம் செய்பவர்போல் வாளா வந்துநின்றார்
தண்டமிழ் நாட்டுத் தனித்த பெருமகனார்
டாக்டர் சுப்பராயன் அழகப்ப செட்டியாரும்
பறந்து வந்துற்றார் மஹரிஷியைப் பார்ப்பதற்கு.
நேரம் நெருங்க நெஞ்சம் மிகத்துடிக்க
எல்லாம் நடாத்தி இனிது முடித்தார்கள்.
பகவத் கீதை பாராயணம்நடத்தி
வேத விதிப்படி வேண்டும் வினையாற்றி
மாதவ முனியான மகாத்மா திருவுடலை
பேர்த்தியர், பியாரிலால், பக்தர்கள் கைதூக்கி
வெளியிற் கொணர்ந்தார்கள் வாகனத்தில் வைத்தார்கள்.
பசிய தழைகள் பலவண்ண நாள்மலர்கள்
இலைகள் கொடிகள் எழில்செய்த வண்டியினில்
காந்தி படுத்திருக்கக் கண்டோர் கொதித்தார்கள்
வயிறு வரையும் தூய வெள்ளாடை
சூழ நாற்புறமும் செம்மை நிறத்துணியால்
மேல்அலங் காரம் ; மத்தியில் காந்திமுகம்
பூரண சந்திரன்போல் பொலியும் அருள்பூத்து
பகலில் மணியே பதினொன்றும் முக்காலும்
படைஞர் இழுக்கப் பாடை நகர்ந்ததுவே.

தம் உயிரே வெளிச்செல்லத் தாம்கண்டாற் போலாகி
சித்தம் கலங்கித் திகைத்துப் பித்துற்றே
ஆணும் பெண்ணும் அழுதார் வாய்திறந்தார்.
பக்தர் "ராம்துன்' பாடினார் அருகாக ;
கடல்போல் கூடிக் கவலைப்படு மக்கள்
மகாத்மா காந்திக்கு ஜேஎன்று முழக்கினார்கள்.
ஐயோ காந்தி அகல்கிறார் என்றழுதார்
வண்டி அசைந்ததும் வான்முட்டச் சங்கொலித்த.
எங்கும் காந்திக்கு ஜேஎன்ற பேரிரைச்சல்
காவல் முறைசெய்யும் கவியரசி சரோஜினியும்
மேவுபுகழ் மிக்க மௌண்பேட்டன் பெருமானும்
கவலை மிக்கவராய்க் காட்சி அளித்தார்கள்
வண்டி தோன்றியது வள்ளலைத் தான்தாங்கி.
பாதத் தருகில் பட்டேல், பலதேவ்ஸிங்,
ராம்தாஸ் காந்தி, ஜவஹரி லால்நேரு
நால்வர் நிற்க நகர்ந்தது மலர்வண்டி.
மதில்கள் மேல்மக்கள், மரங்கள் மேல்மக்கள்
மாடங்கள் மண்டபங்கள் மாளிகை மேல்மக்கள்
சிலைகள் மேல்மக்கள் தூண்கள் மேல்மக்கள்
மண்ணும் விண்ணும் மற்றும் பிறஇடத்தும்
தேனீ போல்மக்கள் திரண்டு மொய்த்துள்ளார்
கண்ணுக் கெட்டுந்தூரமெல் லாம்மக்கள்
திரண்டு மருண்டு தேம்பி அழுதுநின்றார்.
இரண்டா யிரம்ஆண்டு மக்களில் ஏற்றமுற்றார்
என்று புலம்பி ஏங்குவார் மெய்தளர்வார்
முகத்தைத் துடைத்து மூச்சை இழுத்தவராய்
மனிதஉருவோ, மாதெய்வம் என்றழுவார்,
கண்ணீரைத்துடைத்துக் கழுத்தை அசைப்பார்கள்
உன்னிப் பார்ப்பார்கள் உள்ளங் கசிவார்கள்
உயிருள்ள வரைஉழைத்து உயிரையும் கொடுத்தமகான்
என்று நைந்தழுது ஏமாந்தார் போல்நின்றார்.
இராணுவம் கப்பல் விமானப் படைவகுப்பு
முன்னே வழிநடத்தப் பின்னே பெரும்பந்தி
குதிரைப் படைகள் கூட்டம் ஒருவகுப்பு.

அரச மரியாதை அத்தனையும் தாம்தாங்கி
வெற்றி முழக்கி வீரர் செல்லுகிறார்
சாரணத் துருப்பு செஞ்சிலு வைத்துருப்பு
நெருப்பணைக்குந் துருப்பு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு.
பெண்கள் அணிவகுப்பு பக்தர் ஜே! இடிப்பு
கூட்டத்தார் மீது கூர்க்கர்கண் காணிப்பு
பாராத் துருப்பு பாதைகண் காணிப்பு
என்றும் எவ்வுலகும் காணாத சிறப்போடு
காலத்தை முடித்துக் காந்தி செல்லுகிறார்
கூடி அழுகிறவர் கொடுமை தணிவதற்கு
மலரைப் பொழிந்தார்கள் மகாத்மா ஜேஎன்றார்
மலர்போல் முகம்வீங்க மாதர் அழுதார்கள்
மாதர் அழக்கண்ட சேயர் அழுதார்கள்
குண்டுகளை வீசிக் கொல்லும் படைவிமானம்
அண்டையில் தாழ்ந்துவந்து அலர்தூவிச் சென்றதுவே
'கண்டவர்கள் எல்லாரும் கருத்தழிந்து வாய்விட்டு
அண்ணல், அண்ணல், அகல்வீரோ என்றார்கள்.
வள்ளால் என்பார்கள் வாழோம் இனிஎன்பார்
ஐயகோ என்பார் ஆகோம் இனிஎன்பார்
உள்ளங் கருத்து ஓங்கி வெளியோடிக்
கள்ளக் கருந்துணிபாய்க் காட்சி அளித்தனவே.
ஆல்பு குரக்குச் சாலை அடைவதற்குள்
பெய்த மலர்மாரி பெம்மானை மறைத்ததுவே
காந்திக்கு ஜேஎன்று கத்தினர் ஆண்மக்கள்
அப்பா அப்பாஎன் றலறினர் பெண்மக்கள்
மன்னன் செல்லுகின்ற வழிஎல்லாம் மலர்மாரி
முன்னே கண்டவர்கள் பின்னும்காண் வேட்கையுற்று
முந்திவிரைவார்கள் மற்றோர் வழியாக.
இறுதிக் கட்டத்தை முன்னர் எய்துதற்கு
விரைந்துசெல்வார்கள் வாஹனம், கால்நடையில்.
அரச சாலை அடைந்த அந்நேரம்
மக்கள் கூட்டம் மிக்கநெருக் கடியாம்
துக்கம் அதனைத் தோன்றா வகைசெய்யும்.
கண்டால் எங்கள் கலிதீரும் என்று சொல்லி

கொண்டாடிக் கூடிக் குதூகலித்து வாழ்ந்தமக்கள்
சண்டாளப் பாவி சதிகாரன் செய்கையினுல்
விண்டார் தம்ஆவி என்னவே தனைப்பட்டார்
அமரிக்கா பிரஞ்சு ஆஸ்திரே லியாபர்மா
பற்பல தேயத்துப் பெரியார்கள் பின்நடந்தார்
காமரா நூறு கிக்கிக் எனப் பிடிக்க
சினிமாத் தொழிலாளர் சுருசுருப் பாய்ச்சுற்ற
வண்டி நகர்ந்து ‘மெமோரியல்’ வளைவண்டை
அரைமணி நேரத்தில் அடைந்தது அம்மானை ;
மக்கள் கடலுள்ளே மகாத்மா உருப்படகு
மெல்ல நகர்ந்துவே மேல்உலகம் செல்வதற்கு,
மன்னன் முகத்தை மறைத்த மலர்இதழை
மென்மை யாக ஒதுக்கினுர் ஒருமேலோர்.
நகராக் கடலூடு நகரும் படகுபோல்
தியான முகத்தோடு தோன்றினுர் காந்திமகான்.
ஹார்டிஞ்சு சாலை காந்தி அணுகுகிருர்
வெள்ளைக் கதராடை கட்டி விளக்கமாக
மாதர் படைஒன்று மஹாத்மா பின்தோன்றும்.
மூன்றரை மணிக்கு முதுநகர் டில்லிவிட்டு
யமுனைக் கரைநோக்கித் திரும்பும் பெருங்கூட்டம்.
நெருக்கடி அதிகம் எல்லாரும் முந்துகிருர்
ராஜ கோட்டத்தில் இராணுவப் படையினரின்
காவல் ஏற்பாடு கட்டுக் கடங்கவில்லை
காலை முதலாகக் கைக்குழந்தை யுடன்வந்து
காத்திருந்த மக்களை யாரே கடியலாகும் !
முடிசார்ந்த மன்னரெல்லாம் பிடிசாம்பலாகிநின்ற
ராஜ கோட்டத்தை ராஜரிஷி வந்தடைந்தார்.
சுற்றிவர ராணுவத்தார் நின்று இடங்காத்தார்
துக்க முகமக்கள் மிக்க பரபரப்பு.
எங்களுக் குற்ற இரக்ஷகர் இவரன்ருே
என்று முஸ்லீம்கள் ஏங்கி மனம்நொந்தார்
சீக்கியர் கிறிஸ்தவர் பார்ஸிகள் மற்றுள்ள
எல்லா மதத்தினரும் ஏங்கி நின்றழுதார்.
மேடைக் கட்டம் மூவைந் நடிச்சதுரம்

ஐந்தடி உயரம் அமைக்கப் பட்டதுவாம்
சந்தனக் கட்டைகளைச் சார்த்தி ஒழுங்காக
ஆறடி நீளம் அடுக்கிவைத் திருந்தார்கள்.
தலைப்புறம் பெருங்கட்டை சற்றே தூக்கிநிற்கும்
மௌண்பேட்டன் துரைமக்கள், மற்றுள்ள மாதலைவர்
காந்தி மஹான்இனத்தார் காஷ்டத் தருகமர்ந்தார்
அந்த நேரத்தில் அங்குவந்து சேர்ந்தாரே
சென்னை யிலிருந்து மௌண்பேட்டன் சீமாட்டி:
அழுகை ஒன்றில்லை, ஆவி நைந்தவராய்
மெழுகு போலுருகி நிற்கின்றார் மங்கையிவர்
மற்றப் பெண்தொண்டர் மஹரிஷிக்கு வாழ்த்தாக
‘ரகுபதி ராஹவ ராஜாராம்’ பாடிநின்றார்.
தூய கதர்த்தொப்பி அணிந்த இருதொண்டர்
தெய்வத் திருவுடலைத் தங்கள் கரத்தெடுத்து
மெல்லக் கொண்டுவந்து மேடையில் அடுக்கியுள்ள
சிதையின் மேல்வைத்தார் சித்தமழிந் தார்பலரும்.
அப்பா என்றார்கள் அலர்மாரி தூவினார்கள்
கண்ணீர் வடித்தார்கள் கசிந்துருகி நின்றார்கள்.
மாதர் அருகார்ந்த புண்ணிய யமுனாவின்
தண்ணீர் கொண்டுவந்து தலைவர்மேல் தெளித்தார்கள்
தேவதாஸ் காந்தி தந்தை அருகுநின்றார்
நேரு வேண்டும் நியமங் களைச்செய்தார்
சைனா ஸ்தானிகர் மஞ்சள் பூச்செண்டு
காணிக்கை வைத்துக் கடனாற்றி அயல்நின்றார்
எட்டுத் திக்கிருந்தும் ஏற்றமுள்ள மன்னருக்கு
வாசமலர் இதழை வாரி இறைக்கின்றார்
மன்னருக்கும் இல்லா மஹத்தான மரியாதை!
என்றும் டில்லியிலே இத்தகைய கூட்டமில்லை
தன்னந் தனியாக மௌண்பேட்டன் சீமாட்டி
காந்தி அருகுசென்றார் கண்ணீர் கசிந்துநின்றார்
ஒன்றும் உணராமல் ஒடுங்கிநின்றார் அம்மானை!
நேரு துணையாக நிற்கின்றார் அம்மானை!
சாந்த மூர்த்தியின்மேல் சந்தனக் கட்டைகளை
அடுக்கித் திருமுகத்தின் மேலும் அமைத்தார்கள்

தன்மனைவி நிற்கின்ற தத்தளித்த நிலைகண்டு
" இங்கு வந்தமர்க " என்றார் மௌண்பேட்டன்
சொன்ன சொற்கள் காதில் நுழையாவாம்
தன்னை மறந்துநின்றாள் தையலாள் அம்மானை !
தேவதாஸ் காந்தி தலைப்பக்கம் நின்றவராய்
தந்தைக் கமைத்த சந்தனக் கட்டையிலே
நெருப்பை வைத்தார். நேரு அயல்நின்று
ஈம வழிபாடுசொல்லி இளகிநின்றார்
எல்லாரும் அழுதார் எரியும் படர்ந்ததுவே
அங்கு எரிந்ததீ அனைவர் மனத்துள்ளும்
பொங்கி எழுந்ததுவே புகைந்து படர்ந்ததுவே
எரியும் நெருப்பில் இட்டார் புதுச்சிதைகள்
நேரு அயல்நின்று நெஞ்சுருகி வழிபட்டார்.
மலர்ந்த முகம்காட்டி மக்கள் தமைக்கூட்டி
என்றும் நல்வாக்கு சொன்ன எம்பெருமான்
இன்றே எரிமூழ்கி என் ஆனார் காண்பமென
மக்கள் ஆர்வத்தால் முன்னர் நெரித்தார்கள்
தேவதாஸ் மீண்டும் சந்தனச் சிதைஒன்று
தந்தையார் மேல்வைத்துத் தயங்கி அயல்நின்றார்.
ஆறுமணிக் கெல்லாம் ஐயன் உடல்முழுதும்
சாம்பலாய் மாறிக் காட்சி தந்ததுவே!
ஐந்தரை மைல்தூரம் அடர்ந்த பெருமக்கள்
தந்தம்இடம் நோக்கித் திரும்பினார் அம்மானை
எத்தனைநாள் இருந்தாலும், எப்பெருமை கொண்டாலும்
முடிவுஒன் றானாலும் மதிப்புஒன்றாகாது !
எத்தனை ராஜாக்கள், எத்தனை மஹரிஷிகள்
செத்தார்கள் அவர்க்காகத் துக்கிப்பார் யாருமில்லை
காந்திக்காக் கவலை கொள்ளாதார் யாருமில்லை
தம்மைப் பெற்ற தந்தையை இழந்தவர்போல்
எல்லாரும் வருந்தி ஏக்குற்றார் அம்மானை
குறிஞ்சிநிலமக்கள் அருவி நீ ராடினார்கள்
முல்லை நிலமக்கள் கிணற்றுநீ ராடினார்கள்
மருதநிலமக்கள் ஆற்றில்நீ ராடினார்கள்
நெய்தல் நிலமக்கள் கடலில்நீ ராடினார்கள்

நீராடி நெஞ்சத் துற்றகவலை நீத்து
டில்லியிலும் மற்ற நாட்டிலுள்ள பலவிடத்தும்
மக்கள் மனத்தளர்ச்சி சற்றே மாறினார்கள்.
இடிவிழுந்த இடம்போல் இருந்தது நாடெங்கும்.
முப்பதாம் தேதி இல்லாத பிப்பிரவரி
புண்ணிய மாதம் பிறந்தது விடுமுறையாம்.
பாரத நாட்டுப் பழைய தலைநகராம்
டில்லியிலும் மற்ற இடங்களிலும் அல்லோரும்
காலையில் எழுந்து காந்தி அமர்ந்தபூமி
ராஜ கட்டத்தைத் தரிசிக்க வந்தார்கள்
மக்கட் பெருங்கும்பல் தாறுமாறு செய்யாமல்
சென்னைத் துருப்பு சிராய்க்கண் காணித்தார்
ராமதாஸ் காந்தி தேவ தாஸ்காந்தி
இருவரும் ராஜகட்டம் எய்தினார் அம்மானை
ஆச்ரம வாசி அனைவரும் அங்குவந்தார்
இரண்டு மணிநேரம் ராம் தான் பஜனையுடன்
மலரிட்டு வழிபாடு மகானுக்குச் செய்தார்கள்
ஆப்பிரிக்காத் தலைவர் சோரப்ஜி ருஷ்டாஜி
வந்து மலர்சார்த்தி வணங்கி அயல்நின்றார்.
பாராளுமன்றில் பண்டித ஜவஹரிலால்
'தேசத் தலைவன் திரன்' என்பீர்கள்,
பொற்குன்றம் ஒன்று பெற்றதைப்பேணாமல்
நிற்கின்றேன் வெட்கி நெஞ்சு மிக அழுந்தி.
இருந்த புகழை இழந்தோம் என்செய்வோம்
என்று பலபேசி இதயம் மிகவுருகி
மாலைப்பொழுது, மகாத்மா பிரார்த்தனைசெய்
நேரத்தில், நேரு ராஜகட்டம் வந்துற்றார்
கையில் ஒளிமாலை ; காந்தி அடிகளின் மெய்ச்
சாம்பலின்மீது சார்த்தினார் அம்மானை!
மற்றப் பெரியோர்கள் பலரும் வந்தித்துத்
தத்தம் இடம்சென்றார் துக்கம் தணியவில்லை.
இரண்டாம் தேதி ராஜ கட்டத்தில்
வைதிக கருமம் வழக்கம் போல்நடத்தி
என்பைப் பொறுக்கி இனிதே ஒன்றுசேர்த்து

கங்கை நீராட்டிக் குடத்தில் அடைத்தார்கள்
" ராம் ராம் " என்று குடத்தின் மேல்வரைந்து
வெள்ளைக் கதர்உடுத்தி நல்ல மலர்சார்த்தி
இந்து முஸ்லீம்கள் எல்லா மதத்தாரும்
ஒன்றரை மணிநேரம் ஒன்றித் தியானித்து
கருமங் களைமுடித்துக் கலைந்தார்கள் அம்மானை !
கங்கை யமுனை சரஸ்வதியும் கலக்கின்ற
திரிவேணி தீர்த்தம் சிறப்புப் பெற்றதுகாண்
பன்னிரண்டாந் தேதி பாத்திர நீற்றென்பை
அங்கு கரைப்பதாக ஆன்றோர் முடிவுசெய்தார்
நாடெங்கும் அன்று நல்லார் பிரிவுக்கா
துக்கம் காட்டத் தீர்மானம் செய்தார்கள்
மூன்றுந் தேதி மற்ற ஓர்அறிக்கை
தேவதாஸ் காந்தி தெரிவித்தார், யாதென்றால்
அலகபாத் பிரயாணி திரிவேகை சங்கமத்தில்
எந்தை அங்கத்தின் இறுதிக் கடன்முடித்தல் ;
ஆயினும் இந்நாட் டமைந்த பல்வேறு
புண்ணிய நீர்களில்ஓர் பகுதி கரைப்பதற்கு
ஆங்காங்கு சற்றே அனுப்பி வைக்கப்படும்.
சுபர்மதி, ஹூக்ளி, சத்லஜ், மஹாநதியில்,
கோமதி, பாவனர், பிரம்மபுத் திராநதியில்,
கோதாவரி கிருஷ்ண நதியில், அதன்தெற்கு
தண்டமிழ் நாட்டுக் காவிரிப் பெருநதியில் ;
பூரி, போர்பந்தர், புண்ணிய கடல்நீரில்
என்றும் புகழ்கொண்ட ராமேஸ் வரக்கடலும்,
கன்னித் தமிழ்மணக்கும் குமரிக் கடல்நீரும்
அங்கம் கரைக்க அமைத்த பேரிடங்கள்
எந்தை காந்தி இறுதிக் கடன்காண
மாகாண கர்த்தாக்கள் பற்பலரும் வந்துள்ளார்
நாளை நகர்நோக்கி அவர்கள் திரும்புகையில்
கையில் ஒருபகுதி அங்கம் கொண்டுசெல்வார்
பன்னிரண்டாந்தேதி பிரயாகை நடப்புப்போல்
சிறப்புச் செய்து சடங்கு முடிப்பார்கள்
ராஜ கட்டத்தில் நாலாந்தேதி முதல்.

பகவத் கீதை பகலில் ஒன்பதற்கு.
பதினொரு மணிக்குத் துளசிரா மாயணமாம்
பிற்பகல் இரண்டு மணிக்குப் பாகவதம்
ஐந்து மணிக்கு வழக்கம்போல் வழிபாடு
குரான் ஷார்த்; குரு கிரந்த ஸாஹிப்பு
வழிபாட்டுக் கீதம் வாசிக்கப் படும்என்றார்
ஆறும்தேதி அஸ்தியைத் தாம்ஏற்று
டில்லி நகரில் வானூர்தி தாம்ஏறி
சென்னை வந்தார் ஆர்ச்சுபால் நைசீமான்
மீனம் பாக்கம் மேலவர் இறங்கியதும்
மந்திரி பலரும் அவர்நடு நாயகமும்
சேர்ந்து வரவேற்றுச் சிறப்பித்தார் அம்மானை.
பூக்கள் சொரிந்தார் புண்ணியன் நாமத்தால்
பாக்கள் பாடிப் பணிந்தார்காண் அம்மானை
பிரதமர் மோட்டாரில் பெம்மான் அங்கமுடன்
அமர்ந்தார், தொண்டர் அணிவகுத்து நின்றார்கள்
பெண்கள் கீதா பாரா யணஞ்செய்தார்
பத்து மைல்வழியும் பக்தர்பணிந்தேத்த
ஓரா யிரம்மோட்டார் ஒன்றாய்த் தொடர்ந்துவர
சர்க்கார் மாளிகையைச் சார்ந்தது திருஅங்கம்.
நிற்க இடமின்றி எங்கும் நெருக்கடியாய்
மக்கள் கூடி மனமார வாழ்த்தினார்கள்
காசிச் செம்பில் ஹரேராம் என்றெழுத்து.
உள்ளே பெம்மான் உடலின் திருஅஸ்தி
கண்ணாடிப் பெட்டியில் காட்சி தரவைத்தார்
மேடை முழுதும் மலரால் நிறைந்திருக்க
இருமருங்கும் குத்து விளக்கு நின்றெரிய
கர்ப்பூர தீபம், கன்னியர் யாழ்நாதம்,
தூப மணமும் தெய்வீக மாய்த்திகழும்.
பல்லா யிரக்கணக்காய்ப் பார்க்க வருவார்கள்
தெய்வத்தைத் தொழுவார்கள் தேம்பி அழுவார்கள்
ராம பஜனை ரம்பையர்கள் செய்வார்கள்
ஊமைய ராக ஒதுங்கிநிற் பார்சிலரே
பாட்டு நூற்பார்கள் பாட்டு உரைப்பார்கள்

கேட்டு மகிழ்வார்கள் கைதூக்கித் தொழுவார்கள்
கற்றூர் நீதிசொல்வார், கல்லாபார் மனங்கரைவார்
இவ்வாறைந்துநாள் யாவர்வழி பாட்டிற்கும்
செவ்வையாய் ஏற்பாடு செய்தார்காண் அம்மானை
தலத்தாரும் வரத்தாரும் தரிசிக்க வருதலினால்
அரசாங்க மாளிகைஒர் ஆலயமே ஆயிற்றே
ஏழாந்தேதி இன்னும் பெருவிழாவாம் !
சர்க்கார் சிப்பந்திச் சம்மேளனம்ஒன்று !
மாகாணக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாய்
பஜனை பாடிவந்து பணிந்தார்காண் அம்மானை
கவர்னர் தம்பதிகள் கையில்பூ ஏந்திவந்து
அஸ்திக் கலசத்தில் வைத்துப் பணிந்தார்கள்
பராமத்இலாக்கா மந்திரிபக்த வத்ஸலரும்
மாலை ஏழு மணிவரையும் தொழுதிருந் தார்
மந்திர நாயகம் ஓமந்தூர் ரெட்டியாரும்
வழிபாட்டு முறைக்கு வந்திருந்தார் அம்மானை
எட்டாம் தேதியினில் சீதாராம் ரெட்டிகாரு
கைத்தொழில் மந்திரி சென்னை வந்துசேர்ந்தார்
அங்கம் கொஞ்சம் ; அண்ணல் வீழ்ந்தஇட
மண்ணில் கொஞ்சம் மந்திரியார் கொண்டுவந்தார்.
கேரள தேசம் திருமண் ஒருசிறிதும்
மைசூர் சமஸ்தானம் அஸ்தி ஒருசிறிதும்
கொடுக்கப் படுமென்று குறித்தார்காண் அம்மானை
மாகாண கர்த்தாக்கள் மகாத்மா அங்கத்தை
தத்தம் தலைநகரில் கொண்டு சேர்த்தார்கள்.
ஒன்பதாம் தேதி எங்கும் திருநாளே
பத்தாம் தேதி மிக்க பெருங்கூட்டம்
பார்க்க வருவாரும் பல்லாண்டு சொல்வாரும்
மாலை யிடுவாரும் மயங்கித் தவிப்பாரும்
கர்ப்பூரம் ஏற்றிக் கைகுவித்து நிற்பாரும்
பத்தித் தூபமிட்டு பக்திவழி செய்வாரும்
ராம்ராம் என்றுநா மாவளி புகல்வாரும்
ராட்டை நூற்பாரும் பாட்டைக் கேட்பாரும்
அண்ணல் பட்டத்தை அஞ்சலி செய்வாரும்

5

இன்னவிதமாக எங்கும் திருநாளாம்.
பதினொராம்தேதி பங்கிட்டு நாளாகும்.
அண்ணல் திருவுடலின் அங்கம் கரைபெறும்நாள்
பன்னிரண் டாந்தேதி பெரிய திருநாளாம்
ஐந்நூறு மைல்தூரம் அலகாபாத் இருக்கிறதால்
டில்லி நகரிருந்து ஒருநாள் முன்னாக
பதினொன்றாந் தேதியிலே வண்டி புறப்பட்டது.
இருபத் தொன்ப தாண்டு உழைப்புள்ள
பழுத்த தொழிலாளர் பென்னட் எனும்பேரர்
" எந்தன் வாழ்க்கையிலே இதுவே பெருநாளா
மறக்க முடியாத மாண்புடைய திருநாளாம் "
என்ற பெருமிதத்தால் வண்டியில் ஏறிநின்று
ஆறரை மணிக்கு அகன்றார் டில்லிவிட்டு.
தோரணஇலைமலர்கள் துலங்கும் மின்ஒளிகள்
ராணுவக் காவல், மூவண் ணக்கொடிகள்
கண்டார் ஒருகோடி காணாதார் ஒருகோடி
இன்னமுறையில் வண்டி இரிந்ததுவே.
கேரள காங்கிரஸ் தலைவர் கேளப்பன்
பெரியார் அங்கத்தை எடுத்துப் புறப்பட்டார்
சுப்பிர மணியம் வீராச் சாமிஎன்பார்
மண்ணும் அங்கமும் சற்றே தாம்எடுத்து
துங்க பத்திரையில் கரைக்கச் சென்றார்கள்
மஹாதேவ மினனுடன் மனைவி குட்டியம்மாள்
அங்கம் எடுத்துக் கொச்சிவண்டி ஏறுகிறார்.
காலையில் காளா வெங்கட்ராவ் கூர்மையா
பெம்மான் அஸ்தியுடன் பெஜவாடா செல்கின்றார்.
உடலுக்கும் உயிருக்கும் உணவூட்டும் மந்திரிகள்
டாக்டர் ராஜன் அவிநாசிச் செட்டியாரும்,
திருவரங்கம்நோக்கிச் செல்கிறார் அம்மானை
பக்த வத்ஸலத்தார், ஓமந்தூர் ரெட்டியாரும்
வந்து வாழ்த்தி வழிவிட்டார் அம்மானை !
பக்த வத்ஸலத்தார் பக்தி மிகுத்தவராய்
தனுஷ்கோடி நோக்கிச் செல்லுகிறார் அம்மானை
காங்கிரஸ் தலைவர் காம ராஜநாடர்

மந்திர நாயகம் ஓமந்தூர் ரெட்டிகாரு
வண்டி நிலையத்தில் வந்து அனுப்பிவைத்தார்.
டில்லி நடப்பை இனிஇங்கு சொல்லுகிறோம்
பெரியார் அங்கத்தைப் பிரயாகை சேர்ப்பதற்கு
பச்சை வண்ணத்தில் ரயிலைப் பண்படுத்தி
ஐந்து தொடர்வண்டி அதிலே இணைத்தார்கள்
தேசியக் கொடிகள் திகழும் இருபுறமும்
அசோக சக்கரம் அரிமா ஒருமூன்றும்
வண்டியின் மீதே வரையப் பட்டுளவே.
அங்கம் தாங்க அழகிய ஒருமேடை
மேடைக்கு மேலே விதானக் கதர்ஆடை
ராணுவச் சிப்பாய் நாற்புறமும் காவல்நிற்பர்
காந்தி உறவினர்கள் சர்க்கார் காரியஸ்தர்
பத்திரிக்கை நிருபர் ராணுவப் படைத்தலைவர்
பாடற் பஜனை, பக்தர் நூல்நூற்றல்
நானூறு பேருக்கு நல்ல வசதியுண்டு
இன்ன முறையோடு இவ்வண்டி புறப்பட்டு
அலகபாத் நகரைஅடைந்ததும், அவ்விடத்தில்
ஆக வேண்டிய ஏற்பாடு வருமாறு:—
ஜவகரி லால்நேரு சர்தார் வல்லபடேல்
யூனியன் மந்திரிகள் அம்மை சரோஜினியார்
ஆஸாத் முதலான அரிய பெரியார்கள்
வரவேற்று அதற்கு வணக்கம் செலுத்தியபின்
அங்கத்தை ராணுவ ராலியில் அமர்த்துவார்கள்
சீப்பு வண்டிநூறு தொடர்ந்து முன்செல்ல:
அலங்கரிக் கப்பெற்ற அஸ்தி ராலிவண்டி
பின்னே செல்லும் பெரியார்கள் தொடர்ந்துவர.
அரச மரியாதை அறிவிக்க அப்போது
இரண்டு நிமிடத்துக் கொருகுண்டு வீதமாக
எழுபத் தொன்பது குண்டு எழுப்பப்படும்
விமானம் மேல்பறந்து மலரைத் தூவிநிற்கும்
பக்தர் ராம்தூன் பாடிப் பின்தொடர்வர்
திரிவேணி தீர்த்தம் வண்டி சேர்ந்தவுடன்
அங்கத்தை ராணுவப் படகில் அமர்த்துவார்கள்

பைய நகர்ந்து பற்பலரும் தரிசிக்க
மணிகரணி காகட்டம் வரையும் மெல்லப்போம்.
பின்னர் பெரியோர், பக்தர் ஆதரவில்
ஆன்றோர் முன்னோர் அமைத்த வைதிக
சடங்கு முறையோடு சங்கமத்தில் கரைப்பார்கள்.
கேரளம் நோக்கிக் கிளம்பிய மாதவனார்
சோரனூர் வந்தார், சொல்லொணு வரவேற்பு!
எரணு குளநிலயம் ஏற்றமுடையது காண்!
கொச்சி மந்திரியார் நாயர் கலசத்தைப்
பெற்றார் தலைமேல் வைத்துப் போற்றினராய்
பாதுகை தாங்கிய பரதன் போல்நின்று
ஊர்வல மாய்அரச ஓலக்க மண்டபத்தைச்
சாரனர் சூழச் சென்றடைந்தார் அம்மானை!
மன்னர்க்கு மன்னர் மகாத்மா அங்கத்தை
கொச்சி மஹாராஜர், அவர்தம்பி, குடும்பத்தார்
சுற்றி வலம்வந்து தொழுதார்காண் அம்மானை!
குத்து விளக்கேற்றிக் கர்ப்பூரத் தீபமொடு
தூபம் மலர்கள் துலங்கவைத்தார் அம்மானை.
கூர்மையா வோடு காளா வேங்கடராவ்
சென்ற பெஜவாடா சிறப்பு மிகப்பெரிது!
தெய்வ மணங்கமழும் திருச்சி ராப்பள்ளி
பக்கத் தமைந்த பொன்மலை அதைச்சேர்ந்து,
அமைச்சர் அவிநாசி அருங்கலை டாக்டர்ராஜன்
தனிவண்டி ஒன்று அஸ்தி தாங்கவைத்து
திருச்சி சந்திக்குள் சேர்ந்தார்காண் அம்மானை
காந்திக்கு ஜேஎன்று ககனம் வெடிக்குமாறு
மக்கள் முழக்கி மனது உருகிநின்றார்
ஜில்லா கலக்டர் பூமா லைசார்த்தி
அங்கக் கலசத்தை அங்கையால் வழிபட்டார்
மலர்கள் தூவி ராம்ராம் எனப்பாடி
மக்கள் துடித்துநிற்க, மந்திரி திருராஜன்
அங்கத்தை ஏந்தி, வெளியே அமைத்துள்ள
காரில் அமர்ந்தார்: போலிஸ் காவலரும்
மேவும் பக்தர்களும் முன்னேக்கி நின்றார்கள்

பொதுமக்கள் வழிபடவே புத்தூர் மைதானம்
அஸ்திக் கலசம் அமர்ந்ததுகாண் அம்மானை.
மாதவ மீனன் மஹாத்மா அங்கத்தை
திருவனந்த புரத்தில் கொண்டு சேர்த்ததுவும்
சர்க்கார் வரவேற்று ஜுபிலி ஹால்சேர்த்தார்
மக்கள் கூட்டம், மஹாராஜா சோதரர்கள்
ஒக்க வந்து தரிசித்து ஒடுங்கிநின்றார்.
மதுரை மீனாட்சி கோயிலுக்கு முன்னுள்ள
புதுமண் டபத்தில் புண்ணியர் திருஅங்கம்
மேடை மீதே, மிளிரும் கண்ணாடிப்
பாத்திரத்தில் அமைய, பலர்கூடித் தரிசித்தார்.
பன்னிரண்டாம் நாளில் தண்ணீர் விழாவாகும்
புண்ணிய பூமி பாரதப் பெருநாடு
நன்னீர் நிறைந்து திகழுந் திருநாடு
பெம்மான் உருமாறிப் பிறங்கு அங்கத்தை
இமயம் முதலாகக் குமரி வரையுள்ள
எல்லா நன்னீரும் ஏற்கக் கரைத்தார்கள்.
தெரியா தனவிண்டு, தெரிந்த சிலநவில்வேன்
அறிந்தோர் அறியா அடியேன் குறைபொறுப்பீர்
பண்டரீ புரத்தில் பாகா நதிநீரில்
பம்பாய் நகரில் சௌபாத்திக் கடல்நீரில்
நாசிக் பஞ்சவடி ஸ்ரீராம குண்டத்தில்
காசி கங்கையில் அரிச்சந்த்ரா கட்டத்தில்
ஆமதா பாத்தில் சபர்மதி நதிநீரில்
வார்தா நல்லூரின் பயோநதித் தண்ணீரில்
பூனா ஆலந்தி இந்திரா ணிநதியில்
பூரி ஜகநாத் புண்ணிய கடல்நீரில்
கருடக் கோகர்ணம் தாமிரகங் காநதியில்
கோலாப் பூரில் பஞ்சகங் காநதியில்
டில்லி நகரில் யமுனா நதிநீரில்
பரோடா நர்மதை மோரலி சங்கமத்தில்
பர்தோலி ஆச்சிரம மிதேலாச் சிற்றாற்றில்
ஜம்முப் பிரதேசம் பவியார் நதிநீரில்
சூரத் தபதி அசுவினி குமார்இடத்தில்

காம்பே பிரதேசம் கடற்கரைப் பெருநீரில்
கச்சு சமஸ்தான நாத்தி நன்னீரில்
பாட்னு கங்கை கந்தாகி சங்கமத்தில்
பாலன் பூரில் பனுஸ்நதி தண்ணீரில்
ராம்பூ ரில்கோசி பல்லா சங்கமத்தில்
ராஜ்கோட் எல்லை நற்புனித தீர்த்தத்தில்
மோர்விட் பிரதேச மச்சு நதிநீரில்
மாயூர்பஞ்ச் சமஸ்தான வைதிரிணிப் பேராற்றில்
மிராஜ் கிருஷ்ணு வர்ணு சங்கமத்தில்
சலந்தர் பில்லார் சட்லஜ் நதிநீரில்
சாங்ளி எல்லைக் கிருஷ்ணு நதிப்பெருக்கில்
அரிஹர க்ஷேத்திரம் துங்கபத் திரைப்பெருக்கில்
அகோலா பிரார் பூர்ணு நதிநீரில்
குவாலியர் உஜ்ஜயினி க்ஷிப்ரா நதிநீரில்
ஜுனு காத்தின் தாமோதர குண்டத்தில்
நரசோ பாவடி கிருஷ்ணு நதிநீரில்
நந்தி துருக்க அமிர்தசரஸ் கங்கைகளில்,
கட்டாக் பிரதேசம் காட்ஜி நதிநீரில்
கௌகத்தி பிரம்ம புத்திரா நதிப்பெருக்கில்
போபால் பிரதேசம் ஏரிப் பெருநீரில்
மைசூர் சமஸ்தான பஃசிம வாஹினியில்
ஐதரா பாத்ஹுஸ்மான் சாகர் ஏரியினில்
ஆஜ்மிர் புஷ்கர ஏரி நன்னீரில்
ஓரிசா நகரின் ஜகநாத் கடல்நீரில்
உப்புப் போர்கண்ட தண்டித் தண்கடலில்
இந்தூர் ரீவா நருமதை நீர்ப்பெருக்கில்
மான சரோவர் மாபெரிய நன்னீரில்
அரித்து வாரத்துக் கங்கைப் பெருநீரில்
இலங்கைத் திருமுருகன் கதிர்காமச் சிற்றுற்றில்
தில்லைச் சிதம்பரத்தில் புலிமடு தீர்த்தத்தில்
தமிழ் மணக்கும் மதுரை வைகைத் திருநதியில்
திருவா வடுதுறையிற் காவிரிப் பெருநதியில்
அரங்க நாதன் துயிலும் காவிரியில்,
கோவைப் பெருநகரில் பேரூர் ஆற்றுநீரில்

காஞ்சி மாநகரில் பாலாற்று நன்னீரில்
ராமேஸ் வரத்துச் சேதுப் பெருநீரில்
தெற்குக் கோடி குமரிக் கடல்நீரில்
சென்னை மெரினு திருமயிலைக் கடல்நீரில்
கரைத்தார்கள் அங்கம் கணக்கிலாத் துறைகளிலே
காந்தி அங்கமுறக் கரைவிண்ட நீர்எல்லாம்.
தண்டமிழ் நாட்டுத் தலைநகர் சென்னையிலே
அன்று நடந்தவிழா என்றும் கிடையாது!
ஆந்திரர் கேரளர் கன்னடர் சிங்களவர்
வடக்கோர் மேற்கோர் எல்லாரும் கூடிவந்தார்
ஆண்கள் பெண்கள் அறிந்தோர் அறியாதோர்
சிறியோர் பெரியோர் செல்வர் இல்லாதோர்
எல்லாரும் ஒருமுகமாய்க் கூடி இறைஞ்சுதற்கு
கடற்கரையில் வந்து கடிதே குவிந்தார்கள்
நிற்க நிலமில்லை இருக்க இடமில்லை
இருந்தாலும் மக்கள் வந்துவந்து நிரம்புகின்ருர்.
சென்னை நகரின் பற்பல சங்கத்தார்
ஐயன் பெயருக் காரா தனையாக
சப்பரம் பல்லக்கு கூண்டு பெருவண்டி
அலங்காரம் செய்து ஐயன் உருஅமைத்து;
இருநூறு சப்பரம் ஏக காலத்தில்
கடற்கரைச் சாலைக் காட்சி தந்ததுவே
சினிமாத் தொழிலாளர் சுருட்டி நிற்கின்ருர்
போட்டோ பிடிப்பவர்கள் பட்பட் என்றடிப்பர்.
லட்சக் கணக்கான மக்கட் பெருங்கூட்டம்
பெண்கள் வடம்பிடிக்க, பெரியோர் அருகுவர
சர்க்கார் மாளிகையி லிருந்து புறப்பட்டு
அங்கம் வருகிறது அரிய பெருங்காட்சி!
மந்திரி நாயகம் ஓமந்தூர் முன்நடப்பர்
மற்ற மந்திரிகள் மதித்து உடன்நடப்பார்
காங்கிரஸ் தலைவர் காமராஜ நாடாரும்
பத்திரிகை அதிபர் மற்றப் பிரமுகர்கள்
நகர சபையார் நாகரிக முற்றவர்கள்
உத்தியோகம் உடையவர்கள் ஒன்றுமே இல்லாதார்

பள்ளி மாணவர்கள் பாடகர் தொழிலாளர்
சர்க்கார் சிப்பந்தி ஆலைச் சிப்பந்தி
ஊணகச் சிப்பந்தி ஓவிய மாபந்தி.
போலீஸ் புலிகள் அவர்க்குப் பெரியோர்கள்
எல்லாரும்கூடி ஏகமாய் வழிநடக்க
பல்லாண்டு பாடிப் பஜனை பலதொடர.
மலர்கள் தூவி மாநிலத் தார்வாழ்த்த
நாகரிக மாக நைகோமான் தம்பதிகள்
காலால் நடந்து காந்தியை வழிபட்டுச்
செல்லும் காட்சிச் சிறப்பை என்சொல்ல!
மயிலைக் கடற்கரை மாண்பு மிக்கதுவே
உள்ளத் தூய்மைபெறு ஓமந்தூர் ரெட்டிகாரு
வள்ளல் அங்கம் வாய்ந்த கலந்தாங்கி
நைகோமான் முதலான நல்லா ருடன்கூடி
தண்ணீரில் இறங்கித் தாழ்த்திநின்றார் அம்மானை!

விருத்தம்

தேவர்கள் வியக்கு மாறு திசையெலாம் வீங்கிநிற்க,
பாவலர் வாழ்த்துச் சொல்ல, பல்லியம் முழங்கிஆர்ப்ப,
காவலர் தொண்டு செய்ய, கன்னியர் தீபம்ஏந்த
யாவரும் இறைஞ்சி நின்றார்; எம்பிரான் உருக்க ரந்தார்.

வாழ்த்துக் காண்டம்

உருக்கரைந்த காந்தி உருக்காட்டி நின்றார்காண்!
பார்த்தோம் பழனியில் என்றார் சிலபக்தர்
கண்டோம் காஞ்சியில் என்றார் உளங்கனிந்தார்
செந்தூரில்கண்டோம் என்றார் சிலஅடியார்
திருவண்ணா மலையில் திருக்கழுக் குன்றத்தில்
ஆங்காங்கு கண்டதாய் ஆர்வத்தால் சொன்னாலும்
எங்கும் இடம்பெற வேண்டும் பெரியாரவர்
சாதி வெறியில்லை சமய வெறியில்லை
செல்வத் திமிர்இல்லை தேக வலிஇல்லை

நேர்மை அறிவொழுக்கம் நேயம், எவருக்கும்
திங்கு புரியாமை என்ற திருநெறியால்
காந்தியைக் காணலாகும் காந்தியே ஆகலாகும்.
சொல்லலாம் ஆனல் செய்தல் எளிதாமோ?
உலகமுழுதுக்கும் ஒரேஎ காந்தியன்றோ
அப்பெருங் காந்தி அரிய பெருமை பற்றி
பற்பலர் சொன்னர் பகர்வேன் ஒருசிலயான்.

தற் கூற்று

இந்தியா பிளவுண்டால் இறப்பேன் பிணமாவேன்
என்றே காந்தி முன்னர் இயம்பியதும்:
இந்திய னுலே இறப்பேன் யான்என்று
ஆக்ஸ்போர்டு நகரில் அந்நாள் அறைந்ததுவும்;
நூற்று இருபத்து ஐந்தாண்டு வாழுகின்ற
நம்பிக்கை இழந்தேன் என்றே நவின்றதுவும்;
எல்லார்க்கு முள்ள இறப்பு எனக்கில்லை
தூக்கி விடப்பட்டோ கல்லால் அடிபட்டோ
இறப்பென்று இருபத்து நான்கில் உரைத்ததுவும்;
நிறைவேறும் வண்ணம் வெள்ளிக் கிழமைகாலை
கடிதங்கள் எழுதிக் கருமம் முடித்ததுவும்;
ஐயன் நேரும்வினை அறிந்தார் எனக்குறிக்கும்.
ஆனுலு மதற்குக் கவலை சிறிதடையார்
வந்தார் கருமத்தை முடித்துப் புறப்பட்டார்

பிறர் கூற்று

போன வீரருக்குப் புகழ்மாலை சாற்றிநின்றோர்
பற்பல தேசத்தார் சிலஇங்கே பகருகின்றேன்.
ஆங்கில நாட்டு அரச தம்பதிகள்
ஈடுசெய்ய முடியா நஷ்டமிது என்றுரைத்தார்
நல்லவர்கட் கென்றும் பொல்லாப்பே எனக்காட்டும்
இவ்வினை; இதற்குமேல் யாதும் உரையேன்எனப்
புலவர்பெருமான் பெர்னர்டு ஷா சொன்னர்
பெத்திக்கு லாரன்சு பழிக்குப் பழிவாங்காமல்

ஒற்றுமையா யிருக்க விரும்புவார் காந்தி என்ருர்
வரலாற்றில் ஒருகாண்டம் முடிவென்ருர் திருஅமரி
அமைதியை நாட்டப் போராட்டம் செய்தவரில்
சிறந்தவர் என்று செப்பினுர் லிஸ்டோவல்
அமரிக்க ருமன்அவர்சிரஞ் சீவியே
சகோதர தத்துவம் சமத்துவத்தின் உருஎன்ருர்.
அன்பே பகையினும் அதிகபலங் கொண்டதென்று
உலகிற் குணர்த்தினுர் எனஉரைத்தார் பிரஞ்சுஷூமன்
மானிட வர்க்கத்தில் முக்காலும் முதல்வர்என
பிரஞ்சு பிராங்காய் மாரியார்க் குமொழிந்தார்
அமைதியை நாடி ஆற்றும்உயிர்ப் பலியில்
இதுவே கடைசிஆக! என்ருர் லியான்புளூம்
மனித வர்க்கத்தின் மனச்சாட்சி உருவென்று
ஜார்ஜ் மார்ஷல் சொன்ருர் மிகஉண்மை!
இந்திய நாட்டின் எல்லாத் துறைகளுக்கும்
இருபத்தைந் தாண்டு ஏகப் பிரதிநிதி
என்றே அட்லி உண்மை அறிந்துரைத்தார்.
மஹானின் வாழ்வுக்குச் சோக முடிவென்று
சொன்ருர் ஹெர்பர்டு மாரிசன் பெருமகனுர்.
அவரைவிடப் பெரிய ஆத்மிகத் துறைத்தலைவர்,
அவரை விடத்தொண்டு அதிகம் செய்தவர்கள்
நம்காலத் தில்லை என்ருர் கிரிப்ஸ்கோமான்.
உலகுக் குதாரணமாய் இருந்தார் காந்திஎன
அடிலன் துரைமகனுர் அழகுபடக் கூறிநின்ருர்.
போர்முறை தழுவின் மேல்நாட்டைப் பாழ்படுத்தும்
கொடிய தியிலையும் கொளுவத்தாம் வல்லரேனும்
தவரிஷி யாகிநின்ருர் என்ருர் லியோபில்டன்.
இறப்பைப் பொருட்படுத்தா திருந்தோர் காந்தியைப்போல்
யாருமே இல்லைஅவர் ஏழைகளின் மாதலைவர்
என்றே அறிவித்தார் நோயல் பேக்கர்பெம்மான்
உடலே சிறையில் கட்டுற் றிருந்தாலும்
ஆத்மா விரிந்துநிற்க கண்டேன் அவரைஎன்று
ஸ்ரீமதி பெர்ல்பக் சிறக்க எடுத்துரைத்தார்.
பிறர்தயவை நாடாமல் பிறர் புகழக்கருதாமல்

அரசியல் ஆதரவை அறவே விரும்பாமல்
உண்மை ஒழுக்கமுறை ஒன்றே பெருந்துணையாய்
நன்றெனக் கண்டஒன்றை நடப்பில் காட்டிநின்று,
சமர்த்து முறைஒழித்துச் சத்தியம் துணையாக
ஆயுள் முழுவதிலும் அஹிம்சை முறைநடந்து
எடுத்த காரியத்தில் இனிதே வெற்றிபெற்று ;
இதுவும் ஒல்லுமோ எனயாரும் சொல்லும் வண்ணம்
வாழ்ந்தார் காந்திஎன்றார் ஈன்ஸ்டின் பேரறிஞர்.
அருந்தனத்தை இழந்தோம் என்றார் ராஜாஜீ
பெற்ற செல்வத்தைப் பேணவகை அறியாது
முற்றத் துறந்தோம் எனமொழிந்தார் ஜவஹரிலால்.
ராதா கிருஷ்ணர் தத்துவப் பெருஞானி
சாக்ரட்டீஸ் ஏசு கொலப்பட்ட நாள்முதலா
மக்கள் மனநிலையே மாறவில்லைபோலும் என்றார்.
உலக முழுவதையும் துன்புறுத்தும் கொடுமையிது
என்று வருத்தமுற்றார் லேடி மாண்பேட்டன்.
தேசம் அதன்தாயை இழந்ததென்றார் சரத்சந்த்ரர்.
எனக்குமட்டும் தந்தையன்று இந்தியா வின்தந்தை
உலகின் பெருநண்பர் என்றார்மணி லால்காந்தி
எகிப்தில் இந்திய ஸ்தானீகர் ஸையத்ஹூஸேன்
உலகின் ரக்ஷகர் கொலையுண்டார் என்றுரைத்தார்
இந்தியா தனது ஆத்மாவை இழந்ததென்று
சத்தாரி நவாப் சாற்றினர் சுருக்கமாக
வழிகாட் டியதீபம் அணைந்து விட்டதென்றார்
வங்க லீக்தலைவர் அப்துல் ரஹமானே.
இந்தியா உலகில் ஏற்றம் உறவைத்த
பெரியார்அவரே, நாட்டின் பிதாஅவரே
என்றே சொன்னார் கிருபா லினிப்பெரியார்.
மாறுபா டின்றி எல்லா மதத்தாரும்
மஹாத்மா எனஅவரை மதித்தார்கள் இன்றிழந்தோம்
என்று டிவெலளசா இயம்பினர் தெளிவாக.
சேவையே தெய்வ பூஜையெனச் செய்துவந்தார்
என்று ஆச்சாரிய நரேந்த்ரதேவர்சொன்னார்
தர்மம் அழிந்து மறையுங்கால் உயவிக்க

வந்த பெரியார் என உரைத்தார் பட்டாபி.
தீண்டாமை நீங்கிப் புதியதோர் தேசமாக
வகைசெய்தார் என்று முன்ஷி விளம்பி நின்றார்
வேதம் கொரான்பைபிள் போதனையின் உருவென்று
வி. வி. கிரிமிக்க விஞ்சு நெறிசொன்னார்
மனித வருக்கம் உள்ளவரை மங்காது
இப்பெயர் என்று மந்திரி நாயகமாம்
உண்மை நெறி உளத்து ஓமந்தூ ரார்உரைத்தார்
வெள்ளிக் கிழமை மாலை வீழ்நேரம்
கிறிஸ்துவைப் போல்மாய்ந்தார் என்றார் வி. கே. ஜான்.
காந்தியைக் கொல்லக் கைதூக்கும் ஒருமனிதன்
வாழ்ந்தது இந்த நாட்டிற்கே வெட்கமென
கொச்சி மஹாராஜன் கூறினார் மிக உண்மை.
இயேசு புத்தர் வரிசையில் இடம்பெறுவார்
என்றே உரைத்தார் அவிநாசி மந்திரியார்
சாக்ரட்டீஸ் ஏசு ஆபிரகாம் லிங்கன்போல்
காந்தி மறைந்தாரென டானியல் தாமஸ்சொன்னார்
புத்தரைப் போல்வாழ்ந்து ஏசுவைப் போல்மறைந்தார்
ராம பக்தர் தியாகை யர்மறைந்த
பஞ்சமியில் மறைந்தார் என்றே கணக்கிட்டு
கோபால ரெட்டி மந்திரி கூறி நின்றார்
காந்தி வாழ்ந்தார் செத்தோம் நாம்என்று
பக்த வத்ஸலம் பகர்ந்தார் பெருஉண்மை.
துயரத்தால் பேச முடியா திருக்கின்றேன்
என்றே உரைத்தார் நீதிபதி ராஜமன்னார்.

அரியா நிலையினர்

இருந்தார் புகழ இதற்குமேல் நிலையாக—
காந்தி இறந்தார் என்ற கடுஞ்செய்தி
கேட்டு உயிர் நீத்த கீர்த்திபெற் றார்களெலாம்
கணவ னுடனிறந்த கற்புடைய மாதர்ஒப்பார்
அன்னார் பெயரில் அறிந்த சிலவற்றைச்
சொல்வேன் பிறரைச் சொல்லாப் பிழைபொறுப்பீர்
முஜப்பூர் அறமன்றம் முகமத் இஸ்மாயில்,

மைசூர் உஸ்ஸிரில் வாழ்ந்தஅரு ளானந்தன்,
குண்டூர் சேப்பள்ளி படூரி சுப்பையா,
கஞ்சம் பர்ஹாம்பூர் வாசிஎல் லாயிஸன்யா,
இன்னார் மாரடைப்பால் இறந்துமூ தானந்த
இலக்கண நெறிநின்றார் : மற்றார் பெயர்மொழிவேன்
பிலிபிட்டைச் சேர்ந்த ஹரிஜன் மனங்கொதித்து
ஏரியில் குதித்து இறந்தான் ஏக்கத்தால்.
விஜய நகரக் காலேஜ் பெருந்தலைவர்
சுப்பிர மணியர் சோர்ந்துமறு நாள்இறந்தார்.
டாக்கா முஸ்லீம் கன்னிஅம் டஸ்ஸலாம்
பன்னி ரண்டுநாளும் பட்டினி யாய்க்கிடந்தாள்
தண்டமிழ் நாட்டில் தம்மைத் துறந்தவர்கள்.
சென்னை அடுப்புக் கரிக்கிடங்கில் தொண்டுசெய்வோன்
நாராயணப் பெயரான் நல்ல கதர்த்துணியன்
அண்ண லுடனே யானும் அகல்வன்என
கழுத்தில் கயிறிட்டுக் காலத்தை முடித்துநின்றான்.
காந்தி பக்திமிகு குப்பச்சி அம்மாளும்
திருவண் ணாமலையில் வாழ்ந்தபொன் னம்மாளும்
அவர்இறக்கத் தாமும் உடனே ஆவிநீத்தார்.
திருமயிலை நகரைச் சேர்ந்த பெருவணிகர்
நன்னெறியார் நயினார் நாடார் எனும்பெயரார்
காந்தி இறப்பைக் கேட்டுக் கலக்கமுற்று
உண்ணல் உரையாடல் உணர்வு சிறிமிதுன்றி
இரண்டுநாள் இருந்து இவ்வுலகை நீத்துநின்றார்
கும்ப கோணத்துச் சிறிய கடைக்காரன்
தன்மூளை கலங்கித் திரிந்தான் தெருவீதி.
இந்திப் பிரசார சபையின் ஓர்இளைஞன்
சின்னாள் உணர்வற்றுக் கிடந்து உயிர்நீத்தான்.
ஆனந்தப் பையுள் இலக்கணத்தின் சான்றாக
ஆவிநீத்தார்க்கு அல்லல் இல்லையம்மா!
உயிரை நீத்தாரும் ஓயாது அழுதாரும்
கொள்ளி வைத்தாரும் கூந்தலைக் களைந்தாரும்
மதியிறநின்றாரும் மாநிலத் தவராக;
காந்தி மேல்உலகம் கண்டார் அம்மானை!

மேல் உலகம்

காந்தி வருகின்றார் என்ற பெருஞ்செய்தி
விண்ணோர் கேட்டு மிக்க விரைவாக
வரவேற்புக் கான வகைஎல்லாம் செய்தார்கள்
உமேஷ் சந்திர பானர்ஜி முதலாக,
தளர்ந்த பருவத்துத் தாதாபாய் நௌரோஜி,
பட்ருடின் தயாப்ஜி, ஜார்ஜ்யூல், வெட்டர்பன்,
பிராஷலோ மேத்தா, அனந்த ஆச்சார்லு,
ஆல்பிரட் வெப்பு, சுரேந்திரநாத் பானர்ஜீ
ரஹிமதுல் லாசயாணி, சங்கர நாயருடன்,
ஆனந்த மோகனபோஸ், ரோமேஷ் சந்திரதத்,
சந்தா வருக்கர், ப்ருதின்ஷா வாச்சா,
லால்மோ கன்கோஷ், சர்.ஹென் ரீகாட்டன்,
கோபால கிருஷ்ண கோகலே குருபீடம்,
ராஷ்வி காரிகோஷ், வீகாரி கோஷ்வாச்சா,
பண்டித மாளவியா, விஷன்நா ராயணதார்
நிஷ்தோல்கார், வையத் மகமத் பகதூரு,
பூபேந்திரர் எஸ். பி. சின்ஹா, மசூம்தாரு,
அன்னி பெஸந்து, அரிய ஹூஸேன்இமாஅம்
பண்டித மோதிலால், லாலா லஜபதிராய்,
சேலத்து விஜய ராகவ ஆச்சாரி
ஹக்கிம் அஜ்மல்கான், செல்வச் சி. ஆர். தாஸ்,
மௌலானா ஆஸாத், மூகமதலி, நமது
சென்னை நகர்வாசி சீனிவாச ஐயங்கார்
அன்சாரி, மோதிலால், சுபாஷ் சந்திரபோஸ்
காலத்தை முடித்த காங்கிரஸ் மாதலைவர்
எல்லாரும் கூடி ஏக மனதாக
வரவேற்புக் கழகம் வகுத்தார் தெளிவாக.
சுபாஷ் வரவேற்பார் கோகலே தலைவராவார்
தனக்கு நிகர் இல்லாத் தண்டமிழ்ப் பெருவீரர்
ஒட்டப் பிடாரத்தார் உயர்ந்த பெருநெறியார்
கப்பல் வணிகத்தார் சிறைக்கோட்டச் செக்கிழுத்தார்
சிதம்பரம் பிள்ளை தொண்டர் படைத்தலைவர்

என்று தீர்மானித் திருந்தார்கள் அம்மானை!
பூரண கும்பம் எங்கும் பிறங்கவைத்து
மாலைகள் நாற்றி மங்கள தீபமிட்டு
தோரணங் கட்டி வாழ்த்துரை தொங்கவைத்து
புதுமணல் தூவி பொற்பாலி கைநிறுவி
குங்கமம் சந்தனக் கோலம் எங்குமிட்டு
வாழை கமுகு தெங்கங் குலை தூக்கி
மாவிலை மலர்கள் தோரணம் பலகாட்டி
வருக வருகஎன வாழ்த்து பலநாட்டி
எல்லாரும் அங்கு எதிர்பார்த் திருக்கின்றார்
வங்கத்தாகூரும் செந்தமிழ்ப் பாரதியும்
வந்திருந்து கவிகள் வளமாக வரைகின்றார்
வலவன் ஏவா வான ஊர்தியினில்
காந்தி மஹாத்மா கயிலாயம் வருகின்றார்
வள்ளல் மஹாத்மா வைகுந்தம் வருகின்றார்
பெரியார் காந்தி பரமண் டலம்வந்தார்
ஆண்மை அறிவழகு அஞ்சாமை உடற்கட்டு
நாகரிகத் தோற்றம் நடையுடை எடுப்பாக
வந்தார் சுபாஷ்முன்னால் வணங்கினார், இன்முகமாய்
காந்தி அவரைக் கட்டித் தழுவி நிற்க,
மற்ற பெரியாரும் முறையே அருகில்வர
எல்லா ரையும்காந்தி ஏற்றபடி உபசரித்தார்.
மேடையில் ஏறிக் கோகலே முகம் பார்த்து
தாஸன் வந்தேன் என்றே தாழ்ந்துசொன்னார்
ஆகாது ஆகாது இவ்வார்த்தை ஆகாது
என்று கோகலே தம்மருகி லேயிருத்தி
என்னினும் பன்மடங்கு காந்திநீர் ஏற்றமுற்றீர்
என்றுசொல்லி முகம்நோக்கி இங்கே பாருமென்று
சுட்டு விரல்நீட்ட, சொன்ன அந்நேரம்
காந்தி வியப்படைந்தார் கஸ்தூரி அடிபணிந்தாள்.
குங்குமப் பொட்டு குளிர்ந்த முகத்தழகைக்
கண்டார் காந்தி உள்ளம் மிகக்களித்தார்
ஆகாகான் மாளிகையில் அன்றுவைத்த பூக்கள்எல்லாம்
கூந்தலில் மலர்ந்திருக்கக் கண்டு உளமகிழ்ந்தார்,

அவர்கரம் பற்றி அணைத்து இருக்கவைத்து
சிரித்தார் காந்தி; தேவிமிக நாணிநின்றார்.
கஸ்தூரி பாய்க்கு காந்திக்கு ஜேஎன்று
எல்லாரும் கூறி ஆரவாரம்செய்தார்.
சுபாஷ்போஸ் முன்வந்து சொன்னார் சிலவார்த்தை
முதியோர்கள் அவையில் யான்முந்தி நிற்கின்றேன்
குற்றம் பொறுப்பீர் குறித்தகடன் ஆற்றுவதால்
மஹாத்மா பெரியார் மிகவும் பெரியார்அவர்
அங்கிருந்த காலை அடியேன் எதிர்த்தாலும்
அவரே பெரியார், அவர்புகழ் கருதாதார்
கடவுள் தொண்டாகக் கருமம் ஆற்றிநின்றார்
மற்றோர் எல்லாரும் முன்னாளில் உழைத்தாலும்
இத்தூய மனது எங்கும் காண்பரிது
என்சொல்ல என்று அறியேன், அமர்கின்றேன்
தலைவர் பேசுவார் மகாத்மா தம்திறனை
என்றே சுபாஷ்போஸ் இருந்தார் அப்போது
கோகலே எழவே கைதட்டி ஆர்ப்பரிப்பு!
அதனைக் கைக்குறிப்பால் அடக்கி வாய்திறந்து
இன்று உங்கள்முன் நிற்கிறேன் எதுபற்றி?
காந்தி யடிகளைப் பாராட்டிக் களிப்பதற்கு!
ஒருநர் ஓரினத்தர் என்றுணர வைத்தவர்யார்?
அடிமைவாழ் வாகாது என்றுஅதை எதிர்த்தவரார்?
மேல்நாட்டு முக்கூட்டுக் கொடியை நீக்கியதார்?
சுதந்தர மூவண்ணக் கொடியைத் தந்ததுயார்?
தீண்டாமைப் பேயைத் தொலைக்கவகை செய்ததுயார்?
ஆலயத்துள் யாவரையும் நுழைய வைத்ததுயார்?
மதுவை ஒழிக்க வகைகள் படைத்ததுயார்?
உண்மை உழைப்பால் உறுபயன் பெற்றதுயார்?
கைத்தொழிலை நாட்டக் கதர்த்திட்டம் கண்டதுயார்?
சேவையே தெய்வ பூசைஎனக் கொண்டதுயார்
எல்லா மதங்களையும் சம்மதமாய் ஏற்பவர்யார்
இறைவன் வழிநடக்கும் என்றுநம்பி நின்றவர்யார்
உயிருக்கு அஞ்சிஓடி ஒளிக்காது நின்றவர்யார்
உண்மை நெறிதமது ஒழுக்கமாய்ப் பற்றியதார்?

தன்னை ஒறுத்தே தக்கபலன் கண்டவர்யார்
உப்பு விலைமலிவா யுதவ வைத்ததுயார்
கொள்கைக்கா உயிரைக் கூசா தளிப்பவர்யார்
இவர்பெருமை கூற யாராலும் ஏலாது.
ஆனாலும் நமது ஆசையால் சிலசொன்னோம்
உயிருள்ள காலத்தில் உலகமுழு தும்போற்ற
வாழ்ந்து உலகமெல்லாம் வாட மறைந்தார்காண்;
இங்கவரைக் காண நாம்மகிழ்வு எய்துகின்றோம்
என்றும் எங்களோ டிருக்க வேண்டுகின்றோம்
மண்ணுல கில்வேலை மிகப்பல இருந்தாலும்
பொன்னுலகில் இருப்பதுவே பொருந்தும் எனப்பகர்ந்து
கோகலே அந்தக் கூட்டத்துத் தீர்மானம்
வாசித்தார் அமுதாக யாவரும் மாந்திநின்றார்:
இந்திய நாட்டிற் பிறந்த யாவரினும்
காந்தி பெரியவர்; கல்வி, அறிவோடு
ஆத்மீக வாழ்வு, லௌகீக நல்லுழைப்பு,
உடலும் பொருளும் உலகுக் கேஉதவி
ஆவியும் அளித்தார், அவரைப் போற்றுகின்றோம்"
என்று வாசிக்க எல்லாரும் எழுந்துநின்றார்.
"காந்தியே" என்று சுபாஷ்போஸ் முன்கூற
"மேல் மேல்" என்று மொழிந்தார்கள் எல்லாரும்.
மும்முறை இவ்வாறு முழக்கினர் அம்மானே!
மஹாத்மா பேசுவார் இப்போது சிறிதென்று
கோகலே கூறக் காந்தி எழுந்துநின்று
"என்னை உபசரித்த யாவருக்கும் மிகநன்றி
தலைவருக்கும் சுபாஷ் வீரருக் கும்நன்றி.
யான்மட்டு மல்ல கஸ்தூரி பாயுமிந்த
நன்றி செலுத்துவதாய் நீங்கள் ஏற்கவேண்டும்.

(விருத்தம்)

வேதங்கள் புராண மாதி வாசிப்பார் யாரு மில்லை;
ஓதுவார் சொல்லைக்கேட்டு உயர்ந்தவர் தாழ்ந்தோராகப்
பேதையர் சண்டையிட்டுப் பிளவுற நின்ற ஒன்றைச்
சாதக மாகக் கொண்டு சயம்பெறத் துணிந்தார்மேலோர்

பிறப்பினல் உயர்வு தாழ்வு பிறங்குமிச் சாதி இன்னும்
இருக்குமேல் நாடுஉய்யா தென்றஓர் உண்மை கண்டு,
சிறக்கநல் லுபாயத்தின்டா மைவிலக்கென்னும் பேரால்
அறத்தினைப் புகன்றேன்இன்று அகன்றது அருவெறுப்பு
ஆலயம் புகுந்த தாலே அனைவரும் சமமே ஆனர்
மேலும்நற் கதரைக் கண்டால் மனமுற ஒன்றிநிற்பார்
மேலவர் கீழோர் என்று பிறப்பினல் இப்போ தில்லை
கோலம்வெவ்வேறுகொண்டசமய வேற்றுமையேஉண்டு
பிறப்பொரு யோனிவாயில், பின்சிறு பாலை யுண்ணல்,
உறக்கமும் ஊணும் நீப்பும் உயர்வதும் வாழ்வுதாழ்வும்
சிறக்கவே மணத்தல் சேரல் மற்றொரு சிசுவைக்காணல்
இறத்தலும் முறைஒன்றுக யாவர்க்கும் இருத்த லாலே
இறைநெறி ஒன்றே என்று இதமுற இயம்பி வந்தால்
கறைசிறு நாளில் நீங்கும் கடவுளின் உண்மைகாண்பார்.
நிறைபெருஞ் செல்வர், இல்லார் என்றஓர் வேறுபாடு
உறைதரும் அதனைப்போக்க உண்மையை உணத்தவேண்டும்
உடலிது நிலைப்பதில்லை உறுபொருள் தொடர்வதில்லை
மடமையே பொருளைச்சேர்த்துவைத்துநீ மாய்தல். என்றும்
நடமிடுந் தெய்வங் கட்கு நலம்புரிந்துயர்வு தந்தால்
கடவுளாயுன் னைக்காண்பார் என்றநற் கருத்தை யூட்டி.
தனிஒரு வன்செல் வத்தைச் சேர்த்துவைக் காத வாறு
நனிமுறைசர்க்கார் செய்யில்நாடெலாம் செழித்து வாழும்
இனியிதற் குழைக்குமாறு யாவர்க்கும் சொல்வீ"ரென்று
மனிதராய்த் தெய்வமானமஹாத்துமா அமர்த்தார் அங்கு
கஸ்தூரி பாய்தேவி கேட்டு மிகக்களித்தார்
எல்லாரும் களித்தார் ஏக மனதாக.
கஸ்தூரி வாழ்க காந்தி வாழ்க என
மாராயங் கூறி மகிழ்ந்தார் அம்மானை.
அறத்தின் நெறிவாழி ஆண்மை உருவாழி
இனியமுகம் வாழி ஈகையுளம் வாழி
உண்மைஉரை வாழி ஊருணிநீர்வாழி
எண்மை உடைவாழி ஏழையர் நிதிவாழி
ஐயுற வில்லாத அன்பு முறைவாழி

ஒப்புரவு வாழி ஓதுமுறை வாழி
ஔவிய மில்லா அமைதித் திருவாழி
அஃகம் பெருக்கும் ஆதரவு நனிவாழி
கஸ்தூரி கரன்சந்தர மோகனதாஸ் காந்திவாழி
கரம்சந்த்ர மோகனதாஸ் காந்தி நீடுவாழி
சேர வளநாட்டு செழுமைக் குறிபசுமை
சோழ வளநாட்டுச் சோற்றுத் தூயவெண்மை
பாண்டி வளநாட்டுப் பண்பான தனிச்செம்மை
கோல மூவண்ணக் கொடியை மேல்தூக்கி
ஊதியம் கருதாது உழைப்பவர் நீடுவாழ்க
லஞ்சம் வாங்காத நிலையினர் நீடுவாழ்க
பதவி வேட்டையில்லாப் பண்பினர் நீடுவாழ்க
உழைப்பே தவம்என்று உன்னுவார் நீடுவாழ்க
அறநெறி திறம்பா அரச வினைஞர்வாழ்க
ஏர்பிடிக்கும் உழவர் ஏற்றமுற் றேவாழ்க
தொழில்புரியும் மக்கள் செழித்து நனிவாழ்க
ஓதி உதவுபவர் உயர்ந்து நீடுவாழ்க
கல்வி முறைகண்ட கற்ருேர் நனிவாழ்க
கான மயில்போலக் கவிஞர் புகழேந்தி
அந்நாளில் சொன்ஞர் அழகான அம்மானை!
இன்றுயான் புகன்றேன், ஏற்ருேர் நீடுவாழ்க
யாதும் ஊரே என்றுரைப் பார்வாழி
யாவரும் கேளிர் என்றுன்னு வார்வாழி
சாதி சமய வெறிஒழித் தார்வாழி
தனக்கென வாழாப் பிறர்க்குதவு வார்வாழி
வாழி வாழி வண்டமிழ் வாணர் வாழி
அச்சகத் தோர்வாழி ஆக்கியோர் நனிவாழி.
காந்தி அம்மானை கற்ருேர் நீடு வாழி
படித்தோர் படிக்கக் கேட்டோர் மிகவாழி
தமிழகம் வாழி தண்டமிழ் நீடுவாழி
வையகம் எல்லாம் வாழிய வாழியவே.
காந்தி பெயரால் கலக்க மில்லாமல்
சாந்தி மிகப்பெற்றுச் சகமெல்லாம் வாழியவே!!!

சீர்திருத்தம்

ஆசிரியரால் ஜனவரி 30ல் வெளியிடப்
பெறும் பத்திரிகை.

★

கடவுள், கல்வி, கலை, கவின், அரசியல், அறிவியல், காவியம், முதலிய பல பொருட்கள் தாங்கித் தமிழ் மக்களின் முன்னேற்றம் பற்றிக் கூறுகிற செய்யுட்களால் பொலிவுறும்.

★

தனிப்பிரதி அணா 3.

அ. கு. ஆதித்தர்.
115. B. B. Rd. Madras 5.

வைத்தியம்

★

மருந்து, மந்திரங்களால் உள்நாக்கு, இரத்தமூலம், கரப்பான், கரும்பற்று, தேள் பாம்பு, பூச்சிக்கடிகள், விஷ விக்கங்கள், வாழ்க்கைக் குறைபாடுகளுக்குச் சிறந்த நிவர்த்தி செய்யப் படும்.

கற்புக் கனல்

வான் பெருங்கவி ஷேக்ஸ்பியர் எழுதிய "Rape of Lucrecea" தமிழில் கற்புக் கனல் என ஆசிரியரால் 666 பாக்களில் இயற்றப்பட்டுள்ளது கவியின்பம் பருகத் தமிழ் அன்பர் ஒவ்வொருவரும் படித்துத் திளைக்கவேண்டிய ஒரு இலக்கியம். இதுபற்றிய சில கருத்துக்களை அறிவிப்பாம்:

1. பெருநாவலர் S. S. சோமசுந்தர பாரதியார் அவர்கள்-' வீரகவிராயரின் அரிச்சந்திர புராணத்துக்குப் பிறகு ஆற்றொழுக்கு நடையும், மாற்று நிறை பொன்போல் பொருட் பொலிவும்கொண்டு, முயலாமல் இயல்வளத்தோடொளிரும் பாக்களைக் கற்புக் கனலிலன்றி யான் கண்டிலேன்—கனிந்து கமழும் விருத்தங்களால் தமிழைப் புதுப்பித்த பெருமை தமதென்றால், ஒரு சிறிதும் மிகையாகாது."

2. "சொல்லின் செல்வர்" திரு R. P. சேதுப் பிள்ளையவர்கள் "ஆசிரியர் உருவாக்கிக் காட்டும் உருப்படிகளின் வாக்கும் போக்கும் உள்ளத்தைக் கவர்ந்து உவகை அளிக்கின்றன—இனிமையும் எளிமையும் வாய்ந்து, கருத்து வகையில் பழமையும் புதுமையும் கலந்து வருவது. சொல் வகையில் நெல்லைத் தமிழொடு சென்னைத் தமிழ் விரவிவருவது."

3. The Hindu 20-7-47

-Karpukkanal (The fire of chastity) is an adaptation in Tamil of Shakespear's Rape of Lucrece. It contains 665 stanzas of mixed variety. A few of them do touch the hearts of the readers to sympathy. The author's expression of emotion has taken the beautiful forms in some places. He can thrill tae reader by his descriptions. The characters are Indiantsed and many interesting scenes from the Komba ramayanom and other classics are cited. The author shows originality as well as learning and his pioneer attempt deserves encouragement.

இனிவரும் நூல்கள்

திருவள்ளுவர் நாடகம்

வள்ளுவர் தலைவர், வாசுகி தலைவி, கபிலர் பாங்கனாகத் திருக்குறள் காமத்துப்பால் முழுவதும் முறை பிறழாது ஒரு நாடகமாக மேடையில் நடித்தற்கேற்ற முறையில் எழுதப்பெற்றிருக்கிறது. காமத்துப்பாலை இத்துணை தெளிவாக, சுவைபெற இதற்குமுன் தோற்றுவித்தார் இல்லை என்னலாகும். சீக்கிரம் வெளிவரும்; அன்பர்கள் தத்தம் பெயரைப் பதிவு செய்வார்களாக.

உத்தமன்

வான்பெருங்கவி ஷேக்ஸ்பியரின் ஒத்தல்லோ "உத்தமன்" எனச் செய்யுளில் நாடக ரூபமாக வருகிறது. விருத்தப்பாக்களில் தனி நாடக முறையில் இதுவரை இத்தகைய நூல் வெளிவந்ததில்லை என்றே கூறலாம். அன்பர்கள் ஆதரவறிந்து, கூடிய சீக்கிரம் வெளியிடப்படும்.

அ. கு. ஆ.